# குறிஞ்சித்தென்னவன் கவிச்சரங்கள்



சாரல்நாடன்

# குறிஞ்சித்தென்னவன் கவிச்சரங்கள்

S. THURAIYAPPA B.A
Justice Of Peace
Reg. No:09/4/[illegible]/086
Drayton D.T. Division,
Kotagala.

பாடல்களையும் கவிதைகளையும் தொகுத்து, கவிஞரின் கையெழுத்துப் பிரதியில் உள்ள வெளிவராத பாடல்களையும் இணைத்து வெளிவரும் நூல் -

EDUCATION CENTRE
C. NALLIAH

தொகுப்பு

இலக்கியவித்தகர்,


கலாபூசணம் **சாரல்நாடன்**

அகில இலங்கை சமாதான நீதிவான்

-- சாரல் வெளியீட்டகம் --
இல. 07, ரொசிட்டா பல்கூட்டுச்சந்தை
கொட்டகலை.

வெளியீட்டு எண் : 17

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | குறிஞ்சித்தென்னவன் கவிச்சரங்கள் |
| தொகுப்பு | : | கலாபூசணம் சாரல் நாடன் |
| வெளியீடு | : | சாரல் வெளியீட்டகம்<br>இல 07, ரொசிட்டா பல்கூட்டுச்சந்தை<br>கொட்டகலை<br>தொலைபேசி - 051-2222889 |
| வெளியீட்டுத்திகதி | : | டிசெம்பர் 2007 |
| பக்கம் | : | XXXII + 160 = 192 |
| விலை | : | 300/- |
| அச்சு | : | டெக்னோ பிரிண்டர்ஸ்,<br>55 Dr.E.A. குரே மாவத்தை,<br>கொழும்பு - 06. |
| கணினி அமைப்பு | : | செல்வி. மணிமாறன் அனிதா |
| ISB No | : | 978-955-8589-15-1 |



**கவிஞர் தென்னவன்**

| | |
|---|---|
| தோற்றம் : | மறைவு : |
| 12.03.1934 | 19.01.1998 |

தென்னவன் தெளித்த தேசம் போல,
இன்நகை எய்தினள், இழந்த தன் நலனே!

நெய்தற்கலி ~ 26வது பாடல்

# இந்தப் பதிப்பும் எனது குறிப்பும்....

பத்தாண்டுகள் ஓடி மறைந்துவிட்டன, கவிஞர் தென்னவனின் அமைதியும் அடக்கமும் பணிவும் மனக்கண்ணில் நிழலாடிய வண்ணமே இருக்கின்றன.

கடந்த சில ஆண்டுகளாக நான் குறிஞ்சித்தென்னவனின் கவிதைகளை ஒரே நூலாக்கி மக்களிடம் பரவ செய்ய வேண்டிய பணிகளை முன்னெடுக்கும் முயற்சிகளை மேற்கொண்டிருந்ததைக் கண்டு, தன்னிடமிருந்த "கொந்தளிப்பு" இதழ்களனைத்தையும் என்னிடம் பார்வைக்குக் கொடுத்து உதவியவர் "கொந்தளிப்பு" இதழாசிரியர் தோழர் கே. நேசமணி அவர்கள். நண்பர் அந்தனி ஜீவாவும் தன்னிடமிருந்த கவிதைகளை எனக்கு கொடுத்து உதவினார். அவர்களுக்கு என் நன்றிகள்.

"குறும்பா" இயற்றுவதில் குறிஞ்சித்தென்னவன் தனித்திறமை கொண்டு விளங்கினார். அவைகளைத் தொகுத்து வெளியிடுவதில் நண்பர் ஒருவர் முனைந்திருப்பதால், அச்சில் வெளிவந்தனவற்றை மாத்திரம் மாதிரிக்கு இந்நூலில் இணைத்திருக்கின்றேன்.

அவரது கவிதைகளின் கையெழுத்துப் பிரதிகளை அச்சிடுவதற்கென்று சிலர் எடுத்துச்சென்று ஏமாற்றியதாக அவரது மகன் கார்த்திகைபாலன் என்னிடம் கவலைத் தெரிவித்தார். இருப்பவற்றையும், தேசிய சுவடி திணைக்களத்தில் பெற முடிந்தவைகளையும் இணைத்து இத்தொகுப்பைப் பூரணமாக்கியுள்ளேன்.

கவிஞர் தென்னவனின் கவிதைகள், புதிய கல்வி சீர்திருத்தத்தினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படும் பாடநூல் தேர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இன்றுவரை கொண்டு வரப்படாததால், இன்றைய இளந்தலைமுறையினருக்கு அவரது ஆற்றலை அறிவதற்கு சந்தர்ப்பம் கிட்டவில்லை. இத்தொகுதி அதனைப் பூர்த்தி செய்யும் என்று நம்புகின்றேன்.

காட்சிப்படுத்துந்திறன் அவரது கவிதைகளிலும், பாடல்களிலும் நிறைந்து காணப்படுகின்றன. இத்தொகுப்பில், மலையகப்பெண்கள், புதிய உலகம், தொழிலாளத் தோழர்கள், இரங்கள் பாக்கள், இனவன்முறைகள், புதுக்கவிதை, குறும்பா என்று அவரது ஆக்கங்களை வகைப்படுத்த முயற்சித்திருக்கிறேன். ஒவ்வொரு ஆக்கத்தின் கீழும் அது எழுதப்பட்ட ஆண்டையும், வெளிவந்த பத்திரிகையின் பெயரையும் குறித்திருக்கின்றேன்.

அந்தப்பத்திரிகைகளின் ஆசிரியருக்கும் என் நன்றிகள்.
என்றும் எப்போதும் என்னோடு இயங்கும் இலக்கிய நெஞ்சம் கவிஞர். சு. முரளிதரன் அவர்களுக்கும் எனது நன்றிகள்

இந்தக் குறிப்பை எழுதுகையில் நெஞ்சில் நிலவிவந்த ஒரு பாரம் சற்றுக் குறைவதாக உணருகின்றேன்.

மீண்டும் சந்திப்போம்.

இவ்விதம்

**சாரல் நாடன்**

கொட்டகலை
சாரலகம்

# பாட்டின் தலைப்பு – அகரவரிசை


| | | |
|---|---|---|
| -அ- | அக்கறை உண்டோ சொல்லு மச்சான் | - 017 |
| | அழகென்று சிரிக்குமிங்கே | - 101 |
| | அன்பெனும் போர்வை அளித்திடும் பெண் | - 023 |
| -ஆ- | ஆடி வாராய் | - 047 |
| | ஆள்வோரே கேளீர் | - 074 |
| | ஆ'டபூதிகளை அறுத்திடுவோம் பூண்டோடு | - 079 |
| | ஆசை மச்சானுக்கு | - 096 |
| -இ- | இக்கரைக்கு அக்கரை பச்சை | - 013 |
| | இருளே சதமா எனப்பாடு | - 127 |
| | இசைத்திடு விடுதலைச் சிந்து | - 129 |
| | இளைஞரின் எதிர்காலம் | - 014 |
| -உ- | உணர்வினை வெல்லும் பெண்மை | - 015 |
| | உணர்வெழுதும் முடிவுரைகள் | - 160 |
| | உழைப்பாளர் நாவினிலே | - 021 |
| | உறவு வேண்டும் | - 092 |
| -ஊ- | ஊருக்குழைச்சது போதும் மச்சான் | - 132 |
| -எ- | எங்கள் துயர் | - 002 |
| | எங்கும் இறைவன் எழில் வண்ணம் | - 041 |
| | எது கவிதை | - 043 |
| | எழுச்சித் திருநாள் | - 067 |
| | என்னையே நினைத்து வாழு | - 019 |
| | எந்நாளோ | - 091 |
| -ஏ- | ஏன் | - 022 |
| -ஒ- | ஒரு கவிஞனின் கண்ணீர்க்கதை | - 068 |
| | ஒற்றுமை என்னும் ஓரணி திரள்வோம் | - 073 |
| -க- | கல்விக் கனிதரும் கற்பகம் | - 059 |
| | கவிபாடு மச்சான் | - 099 |
| -கா- | காலம் சிரிக்கும் | - 103 |
| | காலம் வென்ற கவிமகள் | - 050 |
| | காலமே உனது கணக்கை நிறுத்தி வை | - 048 |
| -கு- | குறும்பாக்கள் | - 121 |
| -கே- | கேள்விக்கு பதில் என்ன | - 134 |
| -கொ- | கொந்தளிக்கும் உள்ளம் | - 075 |
| | கொட்டு முரசே | - 077 |
| | கொதித்தெழுவோம் | - 030 |

| | | |
|---|---|---|
| -ச- | சமாதானம் படைப்போம் | - 126 |
| | "சரத்" எனும் பெயர் சரித்திமாக வாழும் | - 063 |
| | சம்பளநாள் | - 087 |
| -சி- | சிந்தனைச் செய்வாய் | - 137 |
| | சித்தார்த்தன் செப்புகின்றான் | - 037 |
| -சீ- | சீக்கிரம் வழியொன்னு பண்ணு மச்சான் | - 138 |
| -சு- | சுமைதாங்கி | - 139 |
| -சொ- | சொந்தங்கள் | - 141 |
| -தா- | தாய்மைப்பேறு | - 143 |
| -தி- | திருநாமம் என்றும் வாழும் | - 061 |
| -தீ- | தீபங்கள் ஏற்றுவோம் | - 009 |
| | தீங்கவிப் பொருளானவள் | - 055 |
| -து- | துயர்கதையோ முடியவில்லை | - 082 |
| | துடுப்பில்லா படகு | - 086 |
| -தொ- | தொழிலாளர் வாழ்க்கையிலே | - 024 |
| -தே- | தேநீர் க(வி)தை | - 107 |
| -ந- | நண்பனுக்கு, ஒரு மடல் | - 109 |
| | நம்பிக்கைப் பொங்கல் வைப்போம் | - 145 |
| -நா- | நாலு பேர் பார்த்து சிரிக்கவிட்டான் | - 147 |
| | நாம் பெற்ற கைம்மாறு | - 149 |
| | நாணலைப் போல் தலை சாயாதே | - 031 |
| | நான்மறை பேசும் மெய்ப்பொருளே | - 057 |
| | நாள் வரும் | - 089 |
| -நீ- | நீ வாழ்ந்தால்தான் நாங்கள் வாழ்கிறோம் | - 115 |
| | நீறு பூத்த நெருப்புகள் | - 151 |
| -ப- | பண்பாடும் உள்ளம் | - 045 |
| -பா- | பாட்டினில் வாழும் பாரதி | - 152 |
| -பு- | புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம் | - 011 |
| | புத்தனுக்கோர் விண்ணப்பம் | - 034 |
| | புத்துலகம் படைத்திடுவோம் | - 003 |
| | புத்துலகு படைப்போம் | - 028 |
| | புதுயுகம் காண எழடா | - 100 |
| | புரட்சிமலர்கள் பூக்கட்டும் | - 033 |
| | புரட்சித் தீ எரியட்டும் | - 154 |
| | புதியகவிதைகள் | - 117 |
| -பெ- | பெண்தெய்வம் | - 084 |
| -பொ- | பொங்கி எழுந்திடுவோம் | - 090 |
| | பொங்கி எழுவீர் | - 029 |
| | பொங்கி எழு சிங்கமென | - 095 |
| | பொம்பள பாட்டுல திங்கனுமா? | - 136 |

தொகுப்பு - சாரல்நாடன்


-போ- போலிகள் - 112

-ம- மலையெலாம் உனது குரல் மங்காது ஒலித்திருக்கும் - 065
மலையகப் பெண்ணாள் - 094
மலைக்கொழுந்தி வெளியீட்டு விழா - 104

-மா- மாறுதல் - 119

-மு- முப்பெருந் தேவிகள் - 053

-மே- மேதினி போற்றும் மேதினம் - 157

-வ- வக்கிர மனங்கள் - 118

-வா- வாழ்வு - 119
வானொலியே நீ யார் சொத்து - 001
வாழ்க்கைப்பாதை - 156

-வி- விழித்திறவாய் - 080

-வெ- வெட்கமேன் அருகில் வாடி - 159

-வே- வேகம் விளைத்தெழுவாய் - 004
வேடதாரிகள் - 078

-யா- யாருக்குப் பரிசு - 026
யாருக்குப் பொங்கல் - 081

-ல- லயக்குழந்தைகள் - 114

-ஞா- ஞானி - 118

-ஜீ- ஜீவன் உயிர்த்தெழடா - 006

# நன்றிகள்

1960 - 1998 காலப்பகுதியில் வெளிவந்து குறிஞ்சித்தென்னவனின் கவிதைகளுக்கு முதல் அரங்கேற்றம் செய்து வைத்த ஏடுகளுக்கும் அதன் ஆசிரியர்களுக்கும்..

மாணவர் முரசு
காங்கிரஸ்
நம் நாடு
தேயிலை
மாவலி
செய்தி
கொந்தளிப்பு

தடாகம்
பெண்ணின் குரல்
விழிப்பு
குன்றின் குரல்
கொழுந்து

கலையமுதம்
இந்து கலாசாரம்
அகிலம்
இந்துமதி
கண்டி இலக்கியச் செய்திமடல்

தினகரன்
வீரகேசரி
சிந்தாமணி
அஞ்சலி
மக்கள் மறுவாழ்வு - சென்னை
தேசிய முரசொலி
குறிஞ்சிப்பூ

# கவிஞரின் வாழ்வும் கவிதைகளும்

## ~1~

மலையகக் கவிதை இலக்கியத்தை வளப்படுத்தியவர்களுள் குறிஞ்சித்தென்னவனுக்குத் தனியானதோர் இடமுண்டு. இவரது கவிதைகளுள் சிலவற்றைச் சேகரித்து '**தென்னவன் கவிதைகள்**' என்ற மகுடத்தில் 1987ம் ஆண்டு இவரது நண்பர்கள் வெளியிட்டிருந்தனர் அதற்கும் பத்தாண்டுக்கு முன்னமேயே கிறிஸ்தவ தொழிலாளர் ஒத்துழைப்பு ஒன்றியம் என்ற பேரில் அட்டன் நகரில் இயங்கிய ஜெவ்ரி அபயசேகர அவர்கள் இவரின் கவிதைகள் சிலவற்றை உள்ளடக்கிய நூலொன்றை வெளியிட்டிருந்தார்.

1977ல் '**உரிமையற்றோர் பேசும் ஒளிப்பிழம்புகள்**' என்று இவரது ஆறு கவிதைகள் - '**நாட்டை உயர்த்தியோர் துரோகியா?**', '**இதுவா நியதி?**', '**பொங்கியெழு சிங்கமென**', '**வாழ்வு வழங்கிட வாரீர்**', '**துயர்க்கதையோ முடியவில்லை**', '**உழைப்புக்கும் படிப்புக்கும் உறவு வேண்டும்**' அச்சுவாகனமேறின. 1978ல் '**விழிப்பு**' என்ற தொகுப்பில் '**புத்தனுக்கோர் விண்ணப்பம்**', '**புத்துலகம் படைத்திடுவோம்**', '**அவலங்கள் மடிய அருள் புரிவாயே!**' என்ற இவரது கவிதைகள் இடம்பிடித்தன. இக்கவிதைகளின் உணர்வை விளங்கி '**பிபிதென பெய**' என்ற பெயரில் சிங்களத்தில் அவை 1979ல் வெளியிடப்பட்டன. 1981ல் அதன் ஆங்கிலமொழி பெயர்ப்பு 'For the Dawning of the New' என்ற பெயரில் வெளியானது.

1967ல் சிந்தாமணி பத்திரிகையில் இவரைப்பற்றிய ஓர் அறிமுகக்கட்டுரை வெளிவந்தது. கவிஞர் மலைத்தம்பி அப்போது ஆசிரியர் குழுவிலிருந்து இவரை பேட்டிக்கண்டு எழுதியிருந்தார். அதில் "புத்தகம் வெளியிடுவது ஒரு பகற்கனவு" என்று இந்த 'புத்தகம் வெளியிடும் யோசனையைக் கவிஞர் நிராகரித்திருந்தார். பொதுவாகவே கவிஞர்கள் தாம் எழுதுவனவற்றைத் தொகுத்து நூலாக்கும் எண்ணம் இல்லாதவர்கள் என்பதை நாம் வேறு கவிஞர்களிடமும் காணுகிறோம். கவிஞர் குறிஞ்சிநாடன் ஆரம்பத்தில் தனக்குத்தம் கவிதைகளை நூலாக்கும் எண்ணம்

இருந்திருக்கவில்லை என்பதை ஒத்துக்கொள்கிறார். (**குறிஞ்சிநாடன் கவிதைகள்** - பக்கம் 7-1999) சுமார் 15 வருடங்களாக தான் கண்ட கனவு தனது நண்பர்களின் முயற்சியால் நிறைவேறுவதாக, **'குறிஞ்சித்தென்னவன்'** கவிதைகள் நூல் வெளிவந்தபோது, அகமகிழ்கிறார். (**குறிஞ்சிதென்னவன் கவிதைகள்** -பக்கம் 4-1987)

அந்தனி ஜீவாவும், சாரல்நாடனும், முரளிதரனும் இணைந்து தோற்றுவித்த **'மலையக வெளியீட்டகம்''** அவரது கவிதைகள் சிலவற்றைத் திரட்டி வெளியிட்டிருந்தது. உருவக வளமும், ஓசை நயமும் மிகுந்த கவிதைகளை பழகு தமிழில், மலைபிரதேசச் சூழலோடு உருவாக்கித்தருவதில் அவர் இமாலய வெற்றிகண்டவர். அவரது கவிதைகள் தினசரி பத்திரிகைகளில் மாத்திரம் இருப்பது, தினசரி பத்திரிக்கைகளைப் போல ஒருநாள் அல்லது ஒருவார வாழ்க்கையுடன் முடிந்துவிடும் என்பதை உணர்ந்த அந்த நண்பர்களின் முயற்சியால் வெளியான தொகுப்பைப் பார்த்து 'மலையகக் கவிதை உலகிற் சி.வி.வேலுபிள்ளைக்கு அடுத்த நிலையில் விளங்குபவர் குறிஞ்சித்தென்னவன்' என்கிறார் கலாநிதி க.அருணாசலம் (**மலையகத்தமிழ் இலக்கியம்** -தமிழ்மன்ற வெளியீடு பக்கம்186-1994)

அது ஒரு சிறிய கவிதைத்தொகுதி, கவிஞரின் ஆற்றலுக்கு நியாயம் செய்ததாகாது, எனினும் மேலதிகமாக பன்னிரண்டு கவிதைகளை இணைத்து மூன்று மாத இடைவெளியில் (முதற்பதிப்பு ஜனவரி 1987, இரண்டாம் பதிப்பு மார்ச் 1987) வெளியிட்டு அந்த நண்பர்கள் திருப்தியுற்றனர். விரிவான ஒருதொகுதி இருபது ஆண்டுகளுக்குப்பின்னர் இப்போதே வெளிவருகிறது.

மிகக்குறைந்த கல்வி அறிவுடன், சமூகத்தின் அடிமட்டத்தில் பிறந்து வளர்ந்து, அவர்களின் இன்பதுன்பங்களில் கலந்து, வாழ்க்கைப் போராட்டங்களில் தோய்ந்து, நேரடி அனுபவத்தைப் பெற்றுக் கொண்டவர்கள் இலக்கிய உலகில் புகுவதை சென்ற நூற்றாண்டின் ஐம்பது அறுபதுகளில் இலங்கையில் நிறையவே காணலாம். இக்காலப்பகுதியில் மலைநாட்டில் **'மலைமுரசு'**, **'மலைப்பொறி'** சஞ்சிகைகள் வெளியிடப்பட்டன. மலைமுரசு க.ப.சிவம், மு.கு.ஈழக்குமார் இருவரையும் இணை ஆசிரியர்களாகக் கொண்டு, கண்டியிலிருந்து 1957-1962 காலப்பகுதியில்

வெளிவந்தது. அதே காலத்தில் டிக்கோயாவில் இருந்து இரா.பாலா என்பவரை ஆசிரியராகக் கொண்டு **'மலைப் பொறி'** வெளிவந்தது. இவ்விரண்டு பத்திரிகைகள் மூலமே பெரும்பாலான இன்றைய மலையக இலக்கியகர்த்தாக்கள் அறிமுகமானார்கள். துரதிர்ஷ்டவசமாக தென்னவனின் கவிதைகள் இந்த வாய்ப்பினைப் பெற்றிருக்கவில்லை.

> **“நான் ஒரு தோட்டத் தொழிலாளி, நான் படித்தது தோட்டப்பாடசாலையில், அதுவும் ஐந்தாம் வகுப்புவரை தான். பதினொரு வயதில் தோட்டத்தில் தொழிலாளியாக வேலை செய்யத் தொடங்கினேன். இருபது வயதில் கவிதை எழுதத் தொடங்கினேன்..”** என்று கூறினாலும் அவரது ஆரம்ப எழுத்துக்கள் வெளி உலகின் கவனத்தைக் கவரவில்லை.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் வெளியிட்ட **'குறிஞ்சி மலரில்'** வெளியான காப்பியப்பகுதியில் மு.கு.ஈழக்குமார், சி.பொன்னுத்தம்பி, தமிழோவியன், வழுத்தூர் ஒளியேந்தி, வி.கந்தவனம் என்ற ஐந்து கவிஞர்களே இடம் பிடித்துள்ளனர். தென்னவனைக் காணோம். தென்னவனைக் கவிஞனாக மலையகம் அங்கீகரிக்க ஆரம்பித்தது, அவரது கவிதை **'குறிஞ்சிப்பூ'** வில் இடம் பெற்ற பின்னரேயே, மலைநாட்டுக் கவிதைகளை நூலாக்கிப்பார்த்த மு.கு.ஈழக்குமார் தன்னுடைய **'குறிஞ்சிப்பூ'**வில் இடம் கொடுத்த நாற்பத்தெட்டு கவிஞர்களில் குறஞ்சித்தென்னவனும் ஒருவர். அந்த தொகுப்பில் கவிஞர்களாக இடம்பிடித்தவர்களுள் சாரல்நாடன், தெளிவத்தை ஜோசப், இராம. சுப்பிரமணியம் ஆகியோரும் அடங்குகின்றனர். இந்த நாற்பத்தெட்டு பேரிலும் இறுதிவரை கவிதையே உயிர்மூச்சாகக் கொண்டு அத்துறையிலேயே சிறந்து விளங்கிய ஒருவர் குறிஞ்சித்தென்னவன். வி.சி.வேலு என்ற தன் சொந்தப் பெயரிலும், தென்னவன் என்ற புனைபெயரிலும் எழுத ஆரம்பித்த இவர், தமிழகத்திலிருந்து கவிதை எழுதுகிற தென்னவன் என்பவரிடமிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டுவதற்காக குறிஞ்சித்தென்னவன் என்ற பெயரிலும் 1967லிருந்து எழுதத்தொடங்கினார். அந்தப் பெயரே அவருக்கு இறுதிவரை நிலைத்திருந்தது.

தொழிலாளியாக வாழ்ந்து தொழிலாளியாகவே இறந்தவர்

குறிஞ்சித்தென்னவன். தோட்டத் தொழிலாளியாக தம் வாழ்வை ஆரம்பித்து >பின் தமது கவிதை ஈடுபாட்டால் பிற தொழிலை மேற்கொண்டவர்கள் பலர் இருக்கின்றார்கள் தொழிலாளர் கவி கோவிந்தசாமித் தேவரிலிருந்து (1911-1966) பாவலர் வேல்சாமிதாசன் வரையிலும் (1927-1997) மலையகக்கவிஞர்களின் வரலாறு இந்த வட்டத்தில்தான் சுழன்று வந்திருக்கிறது. சிலர் பெட்டினி வியாபாரத்துக்கு மாறினார்கள். சிலர் புடவை வியாபாரத்துக்கு மாறினார்கள், சிலர் வளையல் வியாபாரியானார்கள், சிலர் சாஸ்திரம் பார்க்கத் தொடங்கினார்கள், சிலர் தொழிற்சங்கத்தில் பணி ஆற்றினார்கள். நமது கவிஞரோ 1945ல் தமது பதினோராவது வயதில் தோட்டத் தொழிலாளியாகப் பேர் பதிந்து கொண்டவர் 1985 வரை அதே தோட்டத் தொழிலில் தொடர்ந்து இருந்து கொண்டே கவிதைகள் புனைந்து வரலானார். "ஊக்கம் மிகுந்த காலத்தில், தமது உணர்ச்சியை எழுத்திலே காட்டுவோம்" என்றெழுந்தவர்களில் குறிஞ்சித்தென்னவனும் அடங்குவார்.

## ~2~

நோர்வூட், தென்மதுரைத் தோட்டத்தில் முருகம்மாள், சுப்பையா தம்பதியினருக்கு 12-3-1934ல் மூன்றாவது பிள்ளையாக பிறந்தார். பெற்றோர்கள் அவருக்கு ஆசையுடன் வைத்தப் பெயர் வேலு. வாழ்க்கையில் வேலெடுத்து வீசுவதற்கு வேறு ஒருவர் துணை வேண்டாம், வேல் வடித்துக் கொடுப்பதற்கோ பிறர் துணை பெரிதுந்தேவை. நமது வேலுவுக்கோ இருபது வயதில் கவிதை வேலாக உதவிற்று.

இப்போதுபோல் தொழிலாளர்கள் ஒரே தோட்டத்திலிருந்து தொழில் செய்யும் காலமல்ல அது. பெரிய கங்காணிகளின் விருப்பத்தின்பேரில் தோட்டம்விட்டு தோட்டம் போய் வேலை செய்யும் காலமது. சுப்பையா தம்பதியினரும் தோட்டம் மாறி லபுக்கொல்லை, கொண்டகலைக்கு வந்து சேர்ந்தனர். ஐந்தாவது வரை தோட்டப்பாடசாலையிலேயே கற்றதன் பிறகு அந்தகாலத்தைய வழக்கப்படி வேலு தோட்டத்தில் பெயர் பதிந்து வேலை செய்யத் தொடங்கினர். அப்போது அவருக்கு பதினொரு

வயது. பதினொரு வயதுக்குள் தோட்டத்தொழிலாளியாக பெயர் பதியவேண்டும், இல்லாவிட்டால் பெயர் பதிவதற்கு ஆயிரம் கேள்விகள் கேட்கப்படும்.

அவருடைய சக தொழிலாளர்கள், அவரை ஒத்த வயதினர் தான். கொட்டும் மழையும், கொளுத்தும் வெய்யிலும் அவருக்குப் பழக்கமாகிப் போனது. தலையில் கம்பளியும், இடையில் படங்கும், தோளில் சாக்கும் போட்டுக்கொண்டு மலைகளில் ஏறி இறங்கப் பழகிப்போனார். அப்படி உழைப்பதில் அவருக்கு ஒரு வித்தியாசம் தெரியவில்லை. அப்படி உழைக்கும்போது மேற்பார்வையாளராயிருக்கும் கங்காணிகளும், கணக்கப்பிள்ளைகளும், உதிர்க்கும் தூசனச் சொற்கள் அவர் காதில் நாராசமாய் பாய்ந்தன. அவர்களுக்கும் மேலானவர்களாயிருக்கும் கண்டக்டர்களும், சின்னதுரையும் உதிர்க்கும் கடுஞ்சொற்கள் அவரை வாட்டத் தொடங்கின.

மாடாக உழைக்கும் நாங்களும் மனித ஜீவன்கள் தானே! எங்களை ஏன் இப்படி இழிச்சொற்களால் அழைக்கவேண்டும்? என்று எண்ணத்தலைப்பட்டார். பெரியாம்பிள்ளை, ராமையாத்தேவர், கோவிந்தசாமித்தேவர், எஸ்.எம்.ராஜப்பா, காசிரெங்கநாதன், பி.ஆர்.பெரியசாமி, சிதம்பரநாதப்பாவலர் ஆகியோரின் பாடல் புத்தகங்களை விலை கொடுத்து வாங்கிப்படித்தார். நவஜீவன் பத்திரிகையில் வெளிவந்த சிதம்பரநாதப்பாவலரின் **'ஜானகியின் துணிவு'** நாவலை ஆர்வத்துடன் வாசித்தார். (உண்மையில் 1952ல் வெளிவந்த இந்த நாவல் பற்றி எனக்கு அறியத்தந்தவர் கவிஞர் தென்னவன் அவர்கள் ஒருவரே) பத்திரிகைகள், புராண இதிகாசங்கள் என்று படித்து தனது அறிவை விசாலித்துக்கொண்டார். தமிழகத்திலிருந்து இலகுவாக கைக்குக்கிடைத்த **தென்றல், மாலைமுரசு, திராவிடநாடு, மன்றம்** போன்றவைகளைச் சேகரித்து கவிதைகள் எழுதத்தானே பழகிக்கொண்டார்.

மலையக இலக்கியப்பரப்பில் அனேகமான ஏகலைவர்கள் இப்படித்தான் தாமே உருவாகிக் கோலோச்சியிருக்கிறார்கள். தென்னவனும் ஒரு ஏகலைவனே. மலையக இலக்கியம் ஏகலைவர்களால் உருவான ஒன்று. பதினெட்டாம் நூற்றாண்டின் வாய்மொழி இலக்கியத்திலிருந்து இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டின் சிறுகதை, கவிதை, ஆய்வு என்ற பலதுறைபட்ட

இலக்கிய வடிவத்தின் செயற்பாட்டாளர்கள்வரை அனைவரும், தொடர்ந்து படிக்கமுடியாத ஏகலைவர்களே. இடையில் 1962ல் அவருக்கு அவரது பெற்றோர்கள் திருமணம் செய்து வைத்தனர். லெச்சுமி அம்மையாரை கரம்பிடித்தார், சொந்தக்காரப் பெண்ணான லெச்சுமியுடன் அவரது மணவாழ்க்கை மகிழ்ச்சியாவே கழிந்தது. கார்த்திகைபாலன், மணிமேகலை, தாமரைச்செல்வி, ஞானப்பிரியா என்று தமது பிள்ளைகளுக்கு பெயர் சூடி மகிழ்ந்தார்.

தேயிலைத்தோட்டப் பாமரத் தொழிலாளர்கள் மத்தியில் இவ்விதமான இலக்கியச்சுவை மிகுந்த பெயர்களைத் தம் பிள்ளைகளுக்குச் சூட்டி மகிழ்ந்தவர்களை மொழிஉணர்வு, கவிதை உணர்வு, கட்சிஉணர்வு என்று தம்மேலிட்ட உணர்வுகளால் உந்தப்பட்ட ஒருசிலரை காணுகிறோம், தென்னவனைக் கவிதை உணர்வுதான் முழுக்க இயக்கிவந்திருக்கிறது.

சாதாரண தோட்டத் தொழிலாளியாக வாழ்ந்த காலத்திலேயே பக்திப்பாடல்கள் இயற்றி தோட்டத்தில் நடக்கும் பஜனைகளின் போது பாடக் கொடுத்தார், தொழிலாளிகள் நடிப்பதற்கென்று நாடகங்களை எழுதிக் கொடுத்தார் **'வீட்டோ வீடு'**, **'ஒருநாள் கூத்து'** என்ற நாடகங்கள் குறிப்பிடத்தகுந்தன. பஜனைப் பாடல்களையும் பக்திப்பாடல்களையும் கவிதா உணர்வு இல்லாத யாராலும் பாடமுடியாது. **சுப்பிரமணிய ஆசிரிய விருத்தம், முருகன்பக்திமாலை, கதிர்காமவிருத்தப்பா, மலையகக்கும்மி, லபுக்கெல்லை கதிரேசப்பதிகம்** என்பவைகள் இவரால் பாடப்பட்டவைகள். கூடவே, கூட்டுப்பிராரத்தனைப் பாடல்களையும் இவர் பாடியுள்ளார் என்ற தகவல்களை இவரே கூறியுள்ளார் (பார்க்க 2.4.1967 **சிந்தாமணி வார இதழ்**)

1960 காலப்பகுதியில் மலைநாட்டிலிருந்து ஊடகங்களில் தமது படைப்புகளை இடம் பெறச் செய்வதென்பது யாவருக்கும் சிரமமானப்பணி. கற்றவர்களின் எண்ணிக்கையும் அதிகமில்லை. பத்திரிகைகளும், வானொலியும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, தமிழ்நாடு என்று தமிழர் வாழும் பகுதிகளையே தெரிந்தெடுத்து முன் நிறுத்தின. மலைநாடு என்பது உடல் உழைப்பைத்தரும் கூலிகளைக் கொண்ட பிரதேசம் என்ற எண்ணமே எல்லோரிடமும் மேலோங்கியிருந்தது. இந்த எண்ணத்துக்கெதிராக இங்குமங்குமாய் வெடித்துக்கிளம்பிய வேதனைக் குரல்களை ஒன்றுபடுத்தி 'மலையகம் நமது பிறந்த

மண்', இந்த மண்ணை விட்டு நம்மை பிரித்தெடுக்கும் எந்த முயற்சிகளையும் முறியடிப்போம், ஒப்பந்தங்களை கிழித்தெறிவோம்' என்ற இளைஞர்தளபதி இர.சிவலிங்கம் தலைமையில் இளைஞர்கள் அணிவகுத்தனர். அந்த அணிவகுப்பில் குறிஞ்சித்தென்னவனும் அவரது கவிதைகளும் இடம் பெற்றன.

இளமைத்துடிப்புடன் இலங்கை மாதாவின் கூந்தலில் இவர்கள் ஆர்வமுடன் சூடிய மலர்தான் '**குறிஞ்சிப்பூ**' என்ற கவிதைத் தொகுப்பு நூல். '**வெட்கமேன் அருகில் வாடி**' என்று தென்னவனின், இளமைக்குறும்புகளை எடுத்தியம்பும் கவிதை இதில் இடம் பெற்றிருந்தது. வானொலிக்கென, இவரால் எழுதப்பட்ட இக்கவிதை வானொலி நிலையத்தினரால் ஒலிபரப்புக்கேற்றதில்லையென்ற குறிப்போடு திருப்பி அனுப்பப்பட்டது. சீற்றம் கொண்டிருந்த தென்னவன '**வானொலியே நீ யார் சொத்து?**' என்று வினவினார். கே.ஜி.மகாதேவா வின் ஆசிரியத்துவத்தில் கண்டியிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த '**செய்தி**'யில் இது வெளியானது.

1969 களில் இராஜ்மலைச்செல்வன் (கே.எஸ்.இராஜூ) குமரன் (குமாரவேலு) மல்லிகைக்காதலன் (சா.காந்திமணி) என்று இயங்கிக்கொண்டிருந்த குழுவினருடன் பழக்கம் ஏற்பட்டவிதத்தில் தென்னவனும் எனக்கு பழக்கமானார். இராஜ்மலைச்செல்வனின் '**தாயகம்**' குறுநாவல் நூலுக்கு அவர்தான் பின் அட்டைப்படக் குறிப்பு எழுதி இருந்தார். அதுதந்த பிரபல்யத்தில் '**செய்தி**' பத்திரிகைக்கென என்னுடைய 'செவ்வி' ஒன்றை '**கதாசிரியரைக் காணும் கவிஞர்**' என்ற தலைப்பில் பேட்டி எடுத்து எழுதி வெளியிட்டு இருந்தார்.

தோட்டத் தொழிலாளியாக வேலை செய்த தென்னவன் கிடைக்கும் சொற்பக் கூலியில் தன்னையும், குடும்பத்தையும், கவனித்துக் கொண்டு கவிதை எழுதுவதிலும் கவனம் செலுத்தினார். அவர் சார்ந்திருந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கொண்டக்கலைத் தோட்டத் தலைவராகவும் கடமையாற்றினார். '**காங்கிரஸ்**' பத்திரிக்கையில் அவரது கவிதைகள் நிறைய வெளிவரத்தொடங்கின. '**கொட்டுமுரசே**', '**ஒற்றுமை என்னும் ஓரணி திரள்வோம்!**', '**வேடதாரிகள்**', '**போலிகள்**', '**ஆசாடபூதிகளை அறுத்திடுவோம் பூண்டோடு**' என்ற கவிதைகள் இவரது தொழிற்சங்க பணியில் மலர்ந்தவைகளே!

துடிப்போடு எழுதவும், துணிவோடு பணியாற்றவும் தொடங்கிய தென்னவன் நாளாக ஆக தமது ஆற்றல்கள் விழலுக்கு இரைத்த நீராவதை உணர்வு பூர்வமாகக் கண்டறிந்தார். தமது தொழிற்சங்கத்தின் நடவடிக்கைகள் மீது நம்பிக்கையிழந்தார். வாய்ச்சொல் வீரர்களாக இருக்கும் அதன் உள்ளூர் தலைவர்களின் எதிர்ப்பாளராக அவர் மாறலானார்.

**"தலைவரெனச் சொல்லிப்பெருந் தலைகளிங்கு வந்தார்**
**தனக்குவியல் சேர்ப்பதிலே நாட்டமெலாங் கொண்டார்**
**பல்லகரம் சேர்த்து பெரும் பதவிகளும் கண்டார்**
**பாட்டாளிக் கூட்டமெல்லாம் என்ன சுகம் கண்டார்"**

என்று பொருமிய அவர்

**"உன்னுதிரம் உறிஞ்சியுடல் உப்புவதை நீ**
**ஓர் நிமிடம் சிந்தித்தால் உன்வாழ்வு மலரும்**
**புண்ணதனில் வேல் பாய்ச்ச பொறுத்திருப்பதோடா**
**பொங்கியெழு சிங்கமென எந்தன் மலைத்தோழா!**

என்று தொழிலாளத் தோழர்களைத் துயிலெழுப்பும் கவிதைகளைப் பாடத் தொடங்கினார். தொழிலாளர் மத்தியில் புதியதொரு விழிப்பு உண்டானது. தென்னவன் மரணிப்பதற்கு முன்பு நோய் வாய்ப்பட்டார். நோயில் வீழ்வதற்கு முன்பு வரை, தனது வாழ்க்கை தான் நம்பிய தொழிற்சங்கப் பிரமுகர்களால் சூறையாடப்பட்டதை அவர் மறக்கவில்லை. கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் அவர்களை வசைப் பாடுவதையே வழக்கமாக்கிக் கொண்டார்.

ஒரு கவிஞனின் கண்ணீர்க்கதை என்று தான் 1989ல் எழுதிய கவிதையிலும் -

**"என்னை, எந்தன் கவிதை மலர்களை**
**எருவாய் ஆக்கி உணர்ந்த பேர்களோ**
**மன்னர் போலும்வாழ இங்கிவன்**
**வறுமைச் சேற்றில் வதையலாகினேன்"**

என்று உணர்ச்சியில் வெடிக்கிறார். தொழிற்சங்கத்திருடர்கள், சுயநலப்பதர்கள், வேடதாரிகள், கன்னக்கோலர்கள் என்றெல்லாம் அவர்களைச் சாடுகின்றார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் தோட்டச்சேவையாளர்கள் காங்கிரஸ் என்ற அணி ஒன்று இருந்தது. தோட்டங்கள் தேச உடமையாக்கப்பட்டு ஜனவசம, அரசபெருந்தோட்ட ஆக்கம் என்று

இருபெரும் நிர்வாகங்களின் கீழ்வந்தன. அரசியல் செல்வாக்குடையோர், தோட்டநிர்வாகத்தில் ஆதிக்கம் செலுத்தினர். தோட்டநிர்வாகிகள் சிலர் அரசியல் செல்வாக்கினால் தங்கள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து தமக்குக் கீழ்ப் பணியாற்றும் தமிழ் அதிகாரிகளை துன்புறுத்தத் தொடங்கினர். தம்மை அரசியல் பழிவாங்கலிலிருந்துக் காத்துக்கொள்ளும் நோக்கில் பலர் இலங்கை தோட்டச் சேவையாளர் காங்கிரஸை நாடினர். நானும் சேவையாளர் காங்கிரஸில் இணைந்தேன். அதன் பொதுச் செயலாளராக்கப்பட்டேன். அமைச்சர் எஸ். தொண்டமான் பொதுச் செயலாளர் எம்.எஸ் செல்லசாமி, நிதிசெயலாளர் வி.அண்ணாமலை, பெரி.சுந்தரம் ஆகியோரிடம் நெருங்கிப்பழகும் வாய்ப்பு உண்டானது. அந்தக்காலப்பகுதியில் காங்கிரஸின் அந்தரங்கச் செயற்பாடுகள் பல எனக்குத் தெரியவந்தன.

காங்கிரஸின் பெயரைச் சொல்லி உள்ளூர்ப்பிரமுகர்கள் செய்த அடாவடித்தனங்கள் கவிஞர் தென்னவனை காங்கிரஸுக்கு எதிராகத்திருப்பியது. அவர்களில் சிலர் லபுக்கொல்லை தோட்டத்திலேயே இருந்தமையால் தென்னவனின் வாழ்க்கைக்கு பெரும் இடஞ்சல் ஏற்பட்டது. தோட்டத் தொழிலைவிட்டு விலகியிருந்த அவரை -1985க்குப் பிறகு, காங்கிரஸ் ஆபிஸில் ஒரு சாதாரண பியூனாகக் கூட வேலைக்கமர்த்த இவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்பதை அறிந்து என்மனம் வேதனையுற்றது.

அவரது பேனாவிலிருந்து மைக்குப்பதிலாகக் கந்தகம் வெளியாயிற்று. அவை போட்டி தொழிற்சங்க பத்திரிகைகளில் **'இரத்தம் சொட்ட சொட்ட''** பிரசுரம் பெற்றன. தொழிலாளர் தேசிய சங்கத்தின் **'மாவலி'** பத்திரிகையும், இலங்கை தேசிய தொழிலாளர் சங்கத்தின் **'நம்நாடும்'** அவைகளைப் பிரசுரிப்பதில் ஆர்வம் காட்டின. அவைகளை அச்சில் கண்ட காங்கிரஸ் பிரமுகர்கள் எரிச்சலுற்றனர். அவரைக் காணவே அவர்கள் விரும்பவில்லை. அந்தனிஜீவாவுடனும், தென்னவனிடமும் பழகுவதைக் குறைத்துக் கொள்ளும்படி நான் காங்கிரஸ் மேலிடத்தால் அறிவுறுத்தப் பட்டேன். முன்பு போட்டிச்சங்கங்களில் இருந்து ஒருவரை ஒருவர் திட்டித்தீர்த்து கொண்டவர்கள் இன்று ஒரே சங்கத்தில் ஐக்கியமாகி பதவிபெற்று உயர்ந்துவிட்டார்கள்.

## ~3~

கொழும்பிலிருந்து நுவரெலியாவுக்குப் போகும் பிரதான பாதையில், றம்பொடையைத் தாண்டி உள்ளதுதான் அழகுதவழும் ஐந்நூற்றைம்பது ஹெக்டெயர் பரப்பளவு உள்ள லபுக்கொல்லை, கொண்டகலை தோட்டம் கவிஞர் குறிஞ்சித்தென்னவன் வாழ்ந்து இறந்த பூமி.

இதற்குச்சரியாக மேற்கே இருப்பதுதான் டன்சினேன் தோட்டம். முப்பதாண்டுக்காலம் (1964-1994) நான் வாழ்ந்த பூமி. பூண்டுலோயா நகரிலிருந்து ஆறுகல் தொலைவில் அமைந்திருந்த டன்சினேன் தோட்டம் மற்றெந்த பகுதிக்கூடாகவும் வெளி உலகத்துடன் தொடர்பற்ற ஒரு காட்டுப்பிரதேசம். ஷேக்ஸ்பியர் நாடகத்தில் 'டன்சினேன் காடே நடந்துவந்து உன்னைத் தாக்கும்' என்ற வசனம் என் வாழ்வில் நடந்துபோன உண்மை. மூன்றுகல் தொலைவு காட்டு பாதைக்கூடாக கொண்டகலையிலிருந்து டன்சினேனுக்கு நடந்துவந்துவிடலாம். முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் - 1971 காலப்பகுதியில் தோட்டப்புறங்களுக்கு பேருந்து வசதி கிடைக்காத நேரத்தில் எங்களுக்குத் தெரிந்த ஒரேவழி இந்த நடைபாதைத்தான். நுவரெலியாவுக்கோ, கண்டிக்கோ, கொழும்புக்கோ செல்ல வேண்டிய வேலை இருந்தால், லபுக்கலை காட்டுப்பாதைத்தான் எங்களுக்குக் கைக்கொடுக்கும். அருகருகான தோட்டங்களிலிருந்தபோதும் நாங்களிருவரும் அடிக்கடி சந்தித்துக் கொள்ள முடிவதில்லை.

காட்டுவழியாக நடந்துவந்து மீண்டும் அதேவழியாக வீட்டுக்குத்திரும்ப வேண்டிய ஒரு காலத்தில் லபுக்கலையில் 23-4-77ல் நடந்த ஒரு விழாவுக்கு தோழர் நேசமணியும், கவிஞர் குறிஞ்சித்தென்னவனும் என்னை அழைத்திருந்தனர். நேரம், தூரம் பார்க்காமல் கண்டி நுவரெலியா, பதுளை, ராகலை என்று ஓடித்திரிந்த என் கால்களை கட்டி பிடித்து போட்டது எனக்குத் தொழிலில் கிடைத்த பதவி உயர்வுதான். அதற்கு பிறகு காட்டுப்பாதை வழியாக நடந்துவந்து என்னைச் சந்திப்பது தென்னவன் மாத்திரமே. நுவரெலியாவின் சீதளக் காற்றில் என் உணர்வுகள் உறைந்து போகமலிருக்க உதவியவர்,

மாதத்தொருக்கொருமுறை இல்லம்வந்து என்னுடனோ என்மனைவியுடனோ கதைத்துப்போகும் தென்னவன் ஒருவரே.

அப்படி வருபவர் வாசிப்பதற்கென என்னிடமுள்ள புத்தகங்களை எடுத்துச் செல்வார். எழுதுவதற்கு ஏதுவாக 'மென்குமிழ் பேனாக்கள்' காகிதங்கள் எடுத்துச்செல்வார். தானெழுதிய கவிதைகளை நான் வாசித்துப்பார்க்க என்று விட்டுச்செல்வார். வீட்டு பாவனைக்கென தேயிலைத்தூள், கைச்செலவுக்கு பணம் என்று மனைவியிடம் வாங்கிச் செல்வதுமுண்டு. அவருடைய ஏழ்மைநிலையை அறிந்த என்மனைவி அவருக்கு நிறையவே உதவியுள்ளார்.

அவர் வெளிநாடு செல்லும் வாய்ப்புக் கிட்டியபோது அவருக்கு வேண்டிய காலணி, உடுப்பு, பணம் ஆகியவற்றைக் கொடுத்து என்னால் உதவிடமுடிந்தது. பேருந்து சேவை தோட்டத்துக்கூடாக தமது பயணங்களைத் தொடங்கிய 1984ன் பிற்பகுதியில் நிலைமைகள் மாறத்தொடங்கின. டன்சினேன் வழியாக பூண்டுலோயாவிலிருந்து நுவரெலியாவுக்கு பேருந்து செல்லத்தொடங்கியது. அடிக்கடி எங்கள் சந்திப்பு நிகழ்ந்தது.

என்னுடன் கதைக்கும் போது தன்னுடைய பிரச்சினைகளை சொல்லுவார். தொழில் செய்யுமிடத்தில் உத்தியோகத்தர்களின் கெடுபிடிகள், துரைமாரின் காட்டுதர்பார், தொழிற்சங்கங்களின் துரோகம், துன்பப்படும் பெண்கள், அவர்களிடையே அரும்பிவரும் கலைகள் என்று அவை விரியும்.

“நல்லவேளை நான் டன்சினேனில் இருக்கிறேன். நானும் நீங்களும் ஒரே தோட்டத்தில் இருந்திருந்தால் நம்மால் ஒரு வீட்டின் கூரையில் சந்தித்திருக்க முடியுமா?” என்று அவரிடம் கேட்டதுண்டு.

அப்போதைய நிர்வாகக்கெடுபிடி அப்படி இருந்தது. தோட்டத்து உத்தியோகத்தர்களுக்குத் தரப்படும் 'அப்பொயின்ட் மெண்ட்' கடிதத்தில், தொழிலாளர்களுடன் எவ்விதமானத் தொடர்பும் இருக்கக்கூடாது என்பது முதலாவது விதியாகும். தொடர்பு இருப்பது ஏதும் தெரியவருமானால் தொழிலை இழக்க நேரிடும் என்பது இரண்டாவது விதி. தொழில்மன்ற நடவடிக்கைக்குப் போய் தொழிலைப் பாதுகாத்துக்கொள்ள யாருக்குத் துணிவு வரும்? தொல்லைகளைத் தவிர்ப்பதற்கு, தொழிலாளர்களைத் தமது இல்லங்களுக்கு வருவதைத் தவிர்த்துக்கொள்வதே சிறந்தவழி.

தமிழோவியனும், தெளிவத்தை ஜோசப்பும் பதுளை தெளிவத்தை தோட்டத்தில் ஒன்றாக வாழ்ந்த காலத்தில், அவர்களுக்குள் நெருக்கம் வராமைக்கு இதுதான் காரணம். இந்த சங்கடமான நிலமையை வாழ்ந்து பார்த்தால் புரிந்துக்கொள்ள முடியும். ஒரே தோட்டத்தில் இருந்துக்கொண்டு இதயம் ஒன்றி பழகமுடியாத நிலமையில் எங்களைப் போன்று இன்னும் எத்தனைப் பேர் இருந்தனரோ! எண்ணத்தை எழுத்தில் வடித்து பத்திரிகைகளில் வெளியிடுவதற்கு எனக்கு பள்ளிநாட்களிலேயே பழக்கமிருந்தது. தோட்டத்தில் தொழில் செய்யப்புகுந்த பின்னர் அங்குள்ள கெடுபிடிகள் என்னை புனைபெயர் ஒன்றில் தஞ்சம் புகவைத்தன. சங்க இலக்கியத்தை தோட்டத்தில் தொழில் புரியும் காலத்திலும் வாசித்து லயித்துக் கொண்டிருந்ததால் சாரல்நாடன் என்னுடைய புனை பெயராயிற்று. தொழில் புரியுமிடத்தில் சொந்தபெயரிலும் - கருப்பையா நல்லையா, எழுத்துலகில் வேறொரு பெயரிலும் - சாரல்நாடன், இயங்கிவந்ததினால்தான், ஆங்கிலேய ஆட்சி இலங்கையிலிருந்து வெளியேறிய பின்னால் தோட்ட சாம்ராஜ்யத்தில் துரைமார்களாக கொடிகட்டிபறந்த திசேரா சகோதரர்களையும், குணதிலக்க சகோதரர்களையும் என்னால் வெற்றிக்காண முடிந்தது. (தோட்ட சேவையாளர்கள் இதன் உண்மையை நன்கறிவர்). அவர்களின் கீழ் பணியாற்றுவதென்றால் தோட்டஉத்தியோகத்தர்களுக்குச் சிம்மசொப்பனம். 1965-1995 ஆண்டுகளுக்கான காலப்பகுதி டன்சினேன் தோட்டத்தில் கழிந்தது. முப்பதாண்டுகள் அதுவும் செயலூக்கம் மிகுந்த இளமைக்காலம், தொழிலில் மேன்மையுற முடிந்தது, தொழிற்சங்க நடவடிக்கைகளிலும், இலக்கிய உலகிலும் என்னால் பிரகாசிக்க முடிந்தது.

1991ல் பூண்டுலோயா தமிழ் வித்தியாலயத்தில் நடந்த என்னுடைய **'சி.வி. சில சிந்தனைகள்'** நூல் வெளியீட்டுக்குப் பின்னர் விழாவில் கலந்துகொண்ட பலரும் அன்றைய இரவை என்னுடைய டன்சினேன் வீட்டில் கழித்தனர். பல அறைகளைக் கொண்ட விஸ்தாரமான பங்களா. எங்களது இலக்கியச் சந்திப்புக்கென்றே ஓர் அறை எப்போதும் ஒதுக்கப்பட்டிருந்தது. இருபத்திநான்கு மணிநேரமும் வெந்நீர் வசதி. இரவு வெகுநேரம்வரை விழித்திருந்தோம், கதைத்திருந்தோம், களித்திருந்தோம். தென்னவன், அந்தனிஜீவா, மாத்தளைவடிவேலன், க.ப.சிவம், முரளீதரன், மாத்தளை நமசிவாயம் என்ற சில பெயர்கள்

நினைவிற்கு வருகின்றன. தென்னவனுக்கு அறுபது வயதை எட்டிப்பிடிக்கும் காலம் வந்துவிட்டதால். அதை விமரிசையாக நடத்த எண்ணி அன்றைய இலக்கியச் சந்திப்பின் பிறகு அந்தனிஜீவாவிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. தென்னவனுக்கு மணிவிழா என்ற அறிவித்தலும் நாவலப்பிட்டியில் அதைக் கொண்டாடுவது என்ற தீர்மானமும் அந்த மாத குன்றின் குரலில் வெளியிடப்பட்டது. (பார்க்க மார்ச் 1992 **குன்றின் குரல்**) கவிஞன் உயிர் வாழும்போது கண்ட கனவு, ஈற்றில் 2002-மார்ச் மாதம் 30ந்திகதி அவரது மரணத்தின் பின் நான்கு ஆண்டுகள் ஆனப்பின்னர் கண்டியில் தினகரன் பிரதம ஆசிரியர் ராஜ சிறிகாந்தன் தலைமையில் நிறைவேறியது. அவரது துணைவியாரிடம் பொதுமக்களிடமிருந்து திரட்டிய ஒருலட்சத்து ஒரு ரூபாய் கையளிக்கப்பட்டது. இந்த நிதி திரட்டலுக்கு கே.பொன்னுதுரை, அருள் சத்தியநாதன், ஆர்.மகேஸ்வரன், இரா.அ. இராமன் ஆற்றிய பணிகள் அளப்பரியது.

## ~4~

இவரது ஆரம்பக் காலக்கவிதைகள் மலையகப்பேச்சுத் தமிழில் நெஞ்சைத் தொடும் விதத்தில் அமைந்திருந்தன. இந்தப்பாணி கவிதைகள் ஒரு காலத்தில் நிறைய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. மலையகத்தில் அரும்பிவந்த உணர்வுபூர்வமான விழிப்பினால் தங்கள் பிரச்சினைகளுக்கு உடனடித்தீர்வை எதிர்பார்த்தவர்கள், அப்படி ஒன்றும் நடவாததைக் கண்டு மனம் வெதும்பி பாடிய கவிதைகளாக இதைக்கொள்ளலாம். எழுதிக்கிழிப்பவனாக தான் சமூகத்தால் நோக்கப்படுவதை தென்னவன் கண்டார். அக்காலத்தில் கவி உலகில் பிரகாசித்துக் கொண்டிருந்த எஸ்.பி.தங்கவேலு **'எங்கள் நிலைதான் என்ன?** (28-10-1967 சிந்தாமணி) என்று வினவியபோது, குறிஞ்சிவாணன் **'உய்யவழி பாரு மச்சான்'** (09-12-1967 சிந்தாமணி) என்று பாடிய போது, **'எழுதிக்கிழிச்சது என்னமச்சான்?'**, என்றும் **'என்னத்த சொல்லி அழுதிடுவேன்?'** (17-12-1967 சிந்தாமணி) என்றும் பாடியவர் குறிஞ்சித்தென்னவன்.

அதே மொழிநடையில் **'சிக்கிரம் வழியொன்னு பண்ணு மச்சான்'**, **'ஊருக்குழைச்சது போதும் மச்சான்'**, **'பொம்பள பாட்டுல திங்கனுமா?'** என்ற கவிதைகள் அவரை மலையக மக்கள் மத்தியில் பிரகாசிக்க வைத்தன.

விடிய எழுந்ததிலிருந்து வீட்டுப்பணிகளை முடித்து வேலைக்குச் செல்லும் வரையிலும் தோட்டப்புறங்களில் பெண்கள் அனுபவிக்கும் துயரங்களை தம் வாழ்வில் கண்களுக்கூடாக கண்டிருக்கிறார். தனது மனைவி உதயவேளையில் குழந்தைகளுக்குப் பாலூட்டியும், மற்ற பிள்ளைகளுக்கு உணவூட்டியும், பின் அவசர அவசரமாக கூடையைத்தூக்கிக் கொண்டு வேலைக்குச் சென்றதையும், அதில் ஆடலும் பாடலும் இருப்பதையும் ரசித்திருக்கிறார். ஏழைத் தொழிலாளியை அவனது இயலாமையை, ஏமாளித்தனத்தை பாடும்போது கவிஞருக்கு தொழில் செய்யும்போது தான் அனுபவித்த கஷ்டங்கள் நினைவுக்குவரும்.

வேறெந்தக் கவிஞரும் பாடாத அளவுக்குத் தொழிலாளர்களை, அவர்களது துன்பங்களைப் பாடிட அவரால் முடிந்திருந்தது. **'என்னையே நினைத்து வாழு'** என்ற கவிதையில் தொழிலாளர்களின் நலன் பேணவேண்டிய தொழிற்சங்கத்தலைவன் ஒருவன் எவ்வாறெல்லாம் தொழிலாளர்களை வார்த்தை ஜாலங்களால் மயக்கிவிட முடிகிறதென்பதை அற்புதமாகக் காட்டுகிறார். “உன் வீடு ஒழுகுகிறதா? கவலைப்படாதே, மழையில் கரைவதா உன்னுடம்பு! பாட்டாளி உன்னுழைப்பால்தான் எங்களால் தோட்டங்கள் வாங்க முடிகிறது! கடமையைச் செய். பலனை எதிர்பாராதே, உரிமைகளைப் பற்றி எண்ணியும் பாராதே. அதை எங்களிடம் விட்டுவிடு. நாங்கள்தான் உன்னைப் பற்றி சிந்திக்ககூடியவர்கள். எனவே நீயிருக்கும் வரை-உனக்கு பிரச்சினைகள் இருக்கும் வரையில் நானிருப்பேன். எனவே என்னை நினைத்து வாழ வேண்டியது உன் கடமை” என்று முடிகிறது கவிதை.

பல கவிதைகள் தொழிற்சங்கத்தால் விளையும் தீமைகளை தொழிலாளர்களிடையே நிலவும் பிளவுகளை **“நாயினைப் போலவர் காலிடைச் சுற்றும் நாணமில்லாத்தன்மையை”** கூறுகின்றன. தேர்தல் காலத்தில் தேயிலை மாலையிடும் தொழிலாளர்களைக் கண்டாலே அவருக்கு இரத்தம் கொதித்துவிடுகிறது.

மலையகக்கவிதை என்றாலே குறிஞ்சித்தென்னவன் நினைவு வரும்படிக்கு அவர் பெயர் பதித்துள்ளார். அதனால்தான் **"மரபுக் கவிதைக்கு மலைநாட்டில் தென்னவன் ஒருவரே நினைவுக்கு வருகிறார்"** என்கிறார் கலாநிதி.க.அருணாசலம் (**மலையகப் புதுகவிதை ஓர் அறிமுகம்** - வயல் - 1993 செப்டெம்பர்)

எழுபதுக்குப் பின் அடுத்து வரும் இருபது ஆண்டுகளில் அவர் மலையகத்தின் முக்கியக் கவிஞராக பரிணமிக்கிறார். தான் எழுதும் கவிதைகளின் கருப்பொருளாக மலையகத்தையே முன்னிறுத்துகிறார். மலையகப் பிரச்சினைகளை பேசுவதையே தனது கவிதைகளின் உயிர்நாளமாக கொள்கிறார். பாமரத் தமிழில் தானியற்றிய கவிதைகளிலிருந்தும் வளர்ச்சி அடைகிறத்தன்மையை நாம் காணுகிறோம். பலராலும் போற்றப்படுகின்ற கவிஞராக வளர்கின்றபாண்மையைக் காண்கிறோம்.

**"எனக்குக் கவிதை தொழிலல்ல, எனது இரத்த நாளங்களில் ஓடும் உயிர்த்துடிப்பு, தீமையைக்கண்டு கொதித்தெழும் உணர்வின் வடிகால்"** என்று கூறும் கவிஞரின் வார்த்தைகள், அதன்பின் தன்னைச்சூழ உள்ள மனிதர்களையும், அவர்களை வழி நடத்துகின்ற தலைவர்களையும் பற்றியதாகவே இருந்தது. அவைகளில் ஏமாற்றம், ஏக்கம், எரிச்சல், பரிவு, பாசம் என்று பல மனித உணர்வுகள் வெளிப்படுவதைக் காணலாம்.

அவருக்கு ஐம்பதாவது வயது ஆரம்பமாகுகையில் (1983) ஜப்பானுக்குப் போய்வரும் வாய்ப்பு அவருக்கு கிட்டியது. அப்படி ஜப்பானுக்குப் போய் வருவது அத்தனை இலகுவானதா? 1972ல் இலங்கையில் நடந்த கல்விச்சீர்த்திருத்தங்கள் புதிய தலைமுறை ஒன்றை கிறிஸ்தவ மதத்தில் உண்டு பண்ணியிருந்தது. அதன் செயற்பாடுகளால் அது சாத்தியமானது. ஆயிரம் கனவுகளைச் சுமந்துகொண்டு குறிஞ்சித்தென்னவன் ஜப்பான் போய்வந்தார்.

போய் திரும்பி வந்த அன்றுதான் இலங்கையில் 'ஜூலை' இனக்கலவரம் வெடித்தது. அந்த நிகழ்வை ஜப்பானிலிருந்து, இலங்கை கொழும்பு 'பண்டாரநாயக சர்வதேச விமான நிலையத்துக்கு' வந்ததை அவர் எனக்கு நேரில் கூறியிருந்தார். அந்த நிகழ்வுக்குப்பின்னர் கொழும்பிலிருந்து தேயிலை

தோட்டத்துக்குவரும் இடைப்பட்ட வாழ்க்கையை உணர்வதற்கு வேறொரு நிகழ்வு அவருக்குத் தேவையற்றிருந்தது.

எங்கு காணினும் மனித உயிர்கள் மதிப்பிழந்த காட்சி **"புத்தனுக்கோர் விண்ணப்பம்"**, **"சித்தார்த்தன் செப்புகின்றான்"**, **"புரட்சிமலர்கள் பூக்கட்டும்"** என்று அவருக்குப் பேர் தேடிக்கொடுத்த கவிதைகளை அப்போதுதான் பாடினார்.

ஜப்பான் பயணம் அவர் எதிர்பார்த்த மாறுதல்களை அவரது வாழ்க்கையில் ஏற்படுத்தவில்லை. அதன்பின்னர் 1985ல் தோட்டத் தொழிலில் இருந்து விருப்போய்வு எடுத்துக்கொண்டு எழுதுவதையும், கூட்டங்களில் கலந்து கொள்வதையும் முழுநேரத் தொழிலாகக் கொண்டார். வத்தளையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த **'தேயிலை'** சஞ்சிகையுடன் (1989-1991) நெருங்கிய நட்பு பேணினார். அதன் ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில் **"எங்கள் வேதனைகளிலிருந்துதான் தேயிலைச் செடிகள் வளர்கின்றன. உங்கள் வேதனைகளிலிருந்துதான் தேயிலை மலர்கின்றது"** என்றெழுதினார்.

## ~5~

1986ல் அவரது வாழ்க்கையில் மிகப்பெரிய சோகம் ஒன்று நேர்ந்தது. தன் இருபது வயது நிரம்பிய பருவமங்கை மணிமேகலையின் அகால மரணத்தால் (19-07-1986) நிலை கலங்கி போனார். அவரது கவிதை **காலன்கவர்ந்த ஒரு கவிஞனின் மகள்** - 17-8-86ல் வெளியானது. அவரது கவிதையைப் பிரசுரித்த சிந்தாமணி **"ஒரு ஏழைக்கவிஞனின் மகளாய்ப் பிறந்து – இன்பத்தின் நுழைவாயிலில் அடியெடுத்து வைக்கும் பருவவயதினில் – எங்கள் இதயத்தில் ஆறாப் பெருந்துயராம் நெருப்பைக் கொட்டிவிட்டு, தன்னுடலில் மலர்களைக் கொட்டிக்கொண்டு, மண்ணுள் மறைந்து விட்ட எனது மகளுக்கு கண்ணீரால் கவியெழுதி காணிக்கை வைத்து அஞ்சலி செலுத்துவதைத்தவிர வேறு வழியறியா வகையறியா"** என்ற குறிப்பை இணைத்திருந்தது. அக்கவிதை ஈழத்து இலக்கிய நெஞ்சங்களைக் கதற வைத்தது. பதில் கவிதைகள் நாட்டின் நாலாபுறமிருந்தும் வந்துகுவிந்தன. அவைகளை **'சிந்தாமணி'** கட்டம் கட்டி பிரசுரித்தது. மலைநாட்டில்

இப்படி நடந்தது இதுவே முதன்முறை.

இதன் தாக்கம் மறைவதற்கேதுவாக ஐந்துமாத இடைவெளிக்குப் பிறகு மலையக கலை இலக்கியப் பேரவை கண்டியில் வைத்து எடுத்த விழாவில் 21-12-1986ல் குறிஞ்சித்தென்னவன் கௌரவிக்கப்பட்டார். அமைச்சர் செ.இராசதுரையின் பேச்சில் இவரை 'வாழும் பாரதி' என்று குறிப்பிட்டார். கவிஞர் வாழ்வில் இச்சம்பவம் ஓர் ஏறுமுகமாயமைந்தது. அவரது கவிதைகளைத் தொகுத்து அவரது நண்பர்கள் வெளியிட்டனர். பிரதேச அமைச்சர் இராசதுரை அவரைக் கௌரவம் செய்து 'கவிச்சுடர்' பட்டமளித்தார். மத்திய மாகாண சாகித்திய விழாவில் 'தமிழ்மணி' பட்டம் கிடைத்தது. கலாசார அமைச்சின் 'கலாபூசணம்' கௌரவம் கிடைத்தது. 1994ல் தமிழகத்திலிருந்து ஈழத்துக்கு வருகைதந்த கோமல் சுவாமிநாதன் அவரது கவிதைகளைக் கேட்டு பரவசமடைந்தார். தனது சஞ்சிகையின் மே மாத இதழில் அவரது படத்தையும் அட்டையில் இணைத்திருந்தார்.

மரபுக்கவிஞரான தென்னவன் சில புதுக் கவிதைகளையும் பாடியுள்ளார். ஆரம்பக்காலங்களில் பொதுவாக புதுக்கவிதையில் அவர் கவனம் செல்லவில்லை. **"புதுக்கவிதை என்று சீலிட்டு வெளியாகும் வசன கோர்ப்புகள் வெறும் அர்த்தமற்ற அழுகுண்ணிப் புலம்பல்கள்"** என்று வெலிமடை நகரில் நடந்த 'கொந்தளிப்பு' வெளியீட்டு விழாவில் அவர் பேசியுள்ளார். (பார்க்க ஆனி 77 **கொந்தளிப்பு**)

கொந்தளிப்பு முதல் இதழ் 5-12-1976ல் லபுக்கொல்லை தோட்ட மேற்பரப்பில் தொழிலாளர்கள் மத்தியில் வெளியிடப்பட்டது. தென்னவனின் மங்கல வாழ்த்துடன் விழா ஆரம்பிக்கப்பட்டது. அவரது பல படைப்புகள் கொந்தளிப்பில் வெளிந்துள்ளன.

1979ல் கிறிஸ்தவ தொழிலாளர் ஒத்துழைப்பு அமைப்பு நட்புறவு சுற்றுலா ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. அநுராதபுரம் சென்று அந்த மக்களுடன் பழகும் வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டது. அவரது கவித்துவப் பார்வை விசாலமாக்கப்பட்டது. இலங்கையில் **'குறும்பா'** என்ற பாடலை அறிமுகப்படுத்தியவர் மஹாகவி, அந்தப் பாடல்களில் மனம்லயித்துப் பல குறும்பாக்களை

குறிஞ்சித்தென்னவன் எழுதி உள்ளார். குறும்பா என்பது ஒருவகைப் புதுப்பாடல் என்பதை உணர்ந்து, அதை முன்னெடுத்துச் சென்ற பெருமை இவருக்குண்டு, அதை 'மஹாகவிக்கு பின்னர் குறும்பாவைச் சிறப்பாகக் கையாண்ட ஒருவர் குறிஞ்சித்தென்னவன்' என்ற செ.யோகராசாவின் கூற்று மெய்ப்பிக்கும் (**உருவநோக்கில் ஈழத்து நவீன கவிதை வளர்ச்சி** மல்லிகை 41வது ஆண்டு மலர்) இவரது குறும்பாக்கள் இதுவரை நூலாகத்தொகுக்கப்படாதது குறித்து அவர் கவலைத் தெரிவித்திருக்கிறார். கொழுந்து, மாவலி, தடாகம் என்ற ஏடுகளில் வந்த குறும்பாக்கள் சில இந்த நூலில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கொழுந்து ஏட்டில் இவை குறும்பூக்கள் என்ற நாமம் பூண்டு வெளிவந்தன.

தொழிலாளர் லயத்துக்கென வந்த தகரங்களைச் சுரண்டி கொழும்புக்குத் திருப்பி அனுப்பிய கொள்ளையர்கள், பறித்து வரும் கொழுந்துத் தளிருக்கு எடை கூடச் சொல்லி பெண்களுடன் பாலியலுக்கு முயலும் மலை உத்தியோகத்தர்கள், தொழிலாளர்களை ஏணியாகப்பாவித்து கங்காணியாக உயர்ந்துவிடும் தோட்டத்தலைவர்கள், மாவலி ஓடும் மலைநாட்டிலே குடிநீர் இல்லாத கொடுமை, வங்கிலோன் வாங்கி வாடுவிடும் குடும்பஸ்தர், தோட்டத்து கிளார்க், ஹோட்டல் கட்டும் சூட்சமம் என்று தமது குறும்பாக்களின் கருவை, மலைமக்களின் வாழ்க்கை சிக்கலுக்கூடாக அமைத்து அவர் குறும்பாக்களிலும் பெயர் பதித்தார். 'கற்பனை நயமும், உவமையும், நகைச்சுவையும், கருத்துக்களை சொல்கின்ற வேகமும், அவருக்கே உரித்தான கைவரப்பெற்ற இலக்கியப்பாணியும்'' அந்தனிஜீவாவைக் கவர்ந்து (கொழுந்து ஆசிரியர்) அவைகளுக்குப் பிரசுர களம் அமைக்க உதவிற்று.

**"பொருள் கோடி வருமென்று சதையுணர்வை தட்டிவிடும் புண்கவிப்படைப்பது, தெருக்கோடி சந்துகளில் சேர்த்திடும் குப்பைகள்''** என்று கருதுமிவர், தன் கவியுலகின் லட்சியங்களை '**எது கவிதை**' என்ற கவிதையில் கூறுகின்றார். துண்டுதுண்டாக சதையை வெட்டி எடுத்தாலும் லட்சியம் சாயாது என்று கூறிய பாரதியின் உறவினன் நான் என்று இரும்பூதெய்தும் கவிஞனை அவரில் காண்கிறோம். தன்வாழ்வின் ஆசையை **"காலமே உனது கணக்கை நிறுத்திவை''** என்ற கவிதையில் கூறுகின்றார். பாரதியும், பாரதிதாசனும், மகாத்மா

காந்தியும் தாம் கனவு கண்டவைகளை தம் வாழ்நாளில் சாதிக்கமுடியவில்லை. கனவுகாணும் கலைஞர்களின் ஆயுளை நீடித்துவை என்று காலனுக்கு கட்டளையிடுகிறார்.

“விழித்தெழு, துயில் எழு, கொதித்தெழு, பொங்கி எழு” என்று பல இடங்களில் குறிஞ்சித்தென்னவன் பாவிக்கும் கவிதைப் பிரயோகங்கள் திருப்பித்திருப்பி ஒரே விஷயத்தையே சொல்வதாகத் தெரிந்தாலும், ஒரு சமூக ஈடுபாடு கொண்ட கவிஞனால் இதைத் தவிர்த்துக்கொள்ள முடியவில்லை போலும் என்றே கூறத்தோன்றுகின்றது என்பார் மு.நித்தியானந்தன், தன்னுடைய **“மலையக சமுதாயத்தின் அடிமட்டக் குரலாக ஒலித்தவர்”** என்ற கட்டுரையில்.

16-3-1972 ல் எனக்கு திருமணம் நடந்தது, 18ந் திகதி தோட்டத்தில் வரவேற்பு விழா நடந்தது. என்னுடன் நட்பு பாராட்டிய காலத்தில் தோட்டத்து உயர்மட்ட உத்தியோகத்தர்களுடன் பழகும் வாய்ப்பு இவருக்கு கிடைத்தது. அன்றைய வரவேற்பில் குறிஞ்சித்தென்னவன் பாடிய 'வாழ்த்துப்பா' வந்திருந்த அனைவரையும் கவர்ந்தது. என்னுடைய நூல்வெளியீடு எங்கு நடந்தாலும் தமது பிரசன்னத்தால் என்னை மகிழ்விப்பார். **'மலைக்கொழுந்தி'** நூலுக்கு றம்பொடை தமிழ்மகாவித்தியாலயத்தில் அவர் பாடிய கவிதை என்னைக் கவர்ந்த ஒன்று.

பாரதி நூற்றாண்டு விழா கவிஅரங்கு, நுவரெலியா மலையக சமூக இளைஞர் மன்றத்தால் நடாத்தப்பட்டது. கவிஞர் குறிஞ்சிநாடன் தலைமையில் 28-3-1982ல் கூடி பா.தங்கம், குறிஞ்சித்தென்னவன், தேவதாசன் ஜெயசிங், சாரல்நாடன் ஆகியோர் 'சினிசிட்டா' நகரசபை மண்டபத்தில் கவிதை பாடி சபையோரின் கைதட்டலைப் பெற்றது மற்றுமொரு சம்பவம்.

மலையகக்கவிதை உலகம் இரண்டு தனிமனிதர்களுக்குக் கடமைபட்டிருக்கிறது. ஒருவர் ஆங்கிலத்தில் எழுதி புகழடைந்த சி.வி.வேலுப்பிள்ளை, மற்றவர் தமிழில் நிறைய எழுதி கவிஞராகப் பேர் பெற்ற குறிஞ்சித்தென்னவன். இலக்கணத்தை முன்னிறுத்தி இவர் அதில் பிழைவிட்டிருக்கிறார் என அவரது கவிதைகளை ஏற்றுக் கொள்ளதவர்கள் கூட

**"நித்தமும் கவி எழுதி எழுதி யென்**
**நீண்ட கரங்களும் மெலிந்து வாடின**
**சித்த மோ கவி சுரப்ப தன்றி வே(று)**
**சிந்தனைக்கிடம் தருவதில்லையே"**

என்று தன்னுணர்வுகளை கவிதையாக்கி மகிழ்ந்த தென்னவனை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

கவிதை எழுதுவதற்கு அகவெழுச்சி கட்டாயமாக இருக்க வேண்டும். பசி, தாகம் போலத்தான் இந்த எழுச்சி உணர்வும். எழுச்சி கொடுக்கும் பாடல்களையும், ஓவியங்களையும், சிற்பங்களையும் பார்த்தால் இந்த எழுச்சி ஏற்படும். குறிஞ்சித்தென்னவனின் கற்பனைவளம் நிறைந்த கவிதைகள், அவரின் தோட்ட அனுபவங்களையும், இலட்சியங்களையும், பிறரிடம் பகிர்ந்து கொள்வதற்கு கவிதை இலக்கியத்தையே ஊடகமாகக் கொண்டு வெற்றியடைந்ததையும் கூறி நிற்கின்றன.

அடித்தளமாக தொழிலாளர்களின் நலனையே ஓடு பாதையாகக் கொண்டு தன் கவிதைப் பயணத்தை மேற்கொண்ட குறிஞ்சித்தென்னவனின் கவிதைகளை முடிந்த அளவுக்குத் திரட்டி நூலாக்கியிருக்கிறேன்.

அவரது முதற்கவிதை எமக்குக் கிடைக்கவில்லை. அதனாலென்ன? தொடர்ந்து வந்த கவிதைகளை உட்புகுந்து பார்க்கலாம். அவரது சிந்தனைச்சிதறல்கள் தென்றலாய் முகத்திலடிக்கிறது. புயலாய் சீறிப்பாய்கிறது.

அவர் அதிகம் படிக்காதவர்தான். ஆனால் மொழியின் அழகு ரகசியங்களை அறிந்து வைத்திருந்தவர்.

அவரது கவிதை வரிகளுக்கு எவ்விதமான பொழிப்புரையும் தேவையில்லை. அவைகளில் சந்தம் இருந்தது, சமுதாயப் பார்வையுமிருந்தது.

**'பாலின் சுவைபோல கவிதைகள் பலவற்றைத் தமிழ் மொழியில் புனைந்து அவற்றுக்கூடாகவே தானும் பரவி வாழ்வேன்'** என்று வெகு உறுதியாகக் கூறிய கவிஞனின் (**காலம் வென்ற கவிமகன்**- இந்துகலாசாரம்-1992) வரிகள் சத்தியமானவைகள்.

## சாரல் வெளியீட்டகம் வெளியிட்டுள்ள பிற நூல்கள்

விருட்சப்பதியங்கள் தொகுப்பு --சுப்ராமைந்தன்--

மலையக இலக்கியம் --சாரல்நாடன்--
மத்திய மாகாண சாகித்தியப்பரிசு பெற்ற நூல்

மனுஷியம் சிறுகதை தொகுதி --மல்லிகை சி. குமார்--
மத்திய மாகாண சாகித்தியப்பரிசு பெற்ற நூல்

ஒரு நாடும் மூன்று நண்பர்களும் --மொழிவரதன்--
மத்திய மாகாண சாகித்தியப்பரிசு பெற்ற குறுநாவல்

மலையக இலக்கிய தளங்கள் --சு. முரளிதரன்--
மத்திய மாகாண சாகித்தியப்பரிசு பெற்ற நூல்

பிணைந்தின்னும் சாத்திரங்கள்
குறுநாவல் தொகுதி --சாரல்நாடன்--

வாழ்வற்ற வாழ்வு நாவல் --சி.வி. வேலுப்பிள்ளை
இலங்கை இலக்கியப் பேரவை பரிசு பெற்ற நூல்

வேரறுந்த மரங்கள் குறுநாவல் --சிக்கன்ன ராஜு--
மத்திய மாகாண சாகித்தியப்பரிசு பெற்ற நூல்

வரமும் வாழ்வும் நாட்டார் இயல் --சு. முரளிதரன்--
மத்திய மாகாண சாகித்தியப்பரிசு பெற்ற நூல்

தளிரே தங்க மலரே --மொழிவரதன்--
மத்திய மாகாண சாகித்தியப்பரிசு பெற்ற சிறுவர் இலக்கியம்

மலையகத்தமிழர் வரலாறு --சாரல்நாடன்--
தேசிய சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நூல்

சாதனையாளர் சாரல்நாடன் --கலாநிதி க. அருணாசலம்--

பேரேட்டில் சில பக்கங்கள் --சாரல்நாடன்--

கண்டி ராசன் கதை --சாரல்நாடன்--
மத்திய மாகாண சாகித்தியப்பரிசு பெற்ற நூல்

புதிய இலக்கிய உலகம் --சாரல்நாடன்--
மத்திய மாகாண சாகித்தியப்பரிசு பெற்ற நூல்

# வானொலியே! நீ யார் சொத்து?

மலைநாட்டுத் தமிழரென்றால் அறிவில்லாத
மண்டுக கூட்டமென்ற நினைப்பினாலே
கலைநிகழ்ச்சி எது நடந்த போதும் யெம்மை
கழிசடைகள் என்றொதுக்கி வைக்கின்றார்கள்!
சிலை முதலாய் நுண்கலைகள் யாவற்றுள்ளும்
திறன்படைத்தோர் பலரிங்கு இருந்தபோதும்,
ஒலி பரப்பு கூட்டுத்தா பனத்தோர் மட்டும்
உண்மைக்குத் திரை போட்டு மறைக்கின்றார்கள்!

'நாடகத்தில் இசைத்துறையில் வல்லோரென்று
நடிக்கின்ற' கூட்டத்திற் குதவி நல்கி:
ஆடலிலும் பாடலிலும் உயிர்த்துடிப்பை
அப்படியே காட்டுகின்ற எம்மவரை
கேடிழைக்கும் கெடுநினைவால் ஒதுக்கி வைக்கும்
கிஞ்சிற்றும் நேர்மையில்லா வானொலியே:
மூடரல்ல மலையகத்தார், அவர்கள் விடும்
மூச்செல்லாம் கலைமணந்தான் வீசும் பாராய்!

மட்டுநகர் யாழ்நகரில் தேர்வு வைக்கும்
வானொலிக்குப் பொறுப்புள்ளோர் இங்கு, விண்ணை
முட்டுகின்ற மலை சூழ்ந்த நாட்டினோரும்
விற்பன்னர் என்பதனை உணரவேண்டும்:
அவரென்றும், இவரென்றும் பேதங்காட்டி,
அர்ச்சனைகள் செய்பவருக் கிடங்கொடுக்க:
எவர் சொத்து வானொலிதான்? உங்களுக்கு
எழுதிவை த்த முப்பாட்டன் சொத்தா சொல்வீர்!

..1968 ஜுலை செய்தி..

# எங்கள் துயர்

தேயிலையே! மலைநாட்டார் துயரைச்சொல்ல
சிந்தை கொண்டேன், ஆனாலும் என்றனுக்கு
வாயில்லை, மலைநாட்டார் போல் அதனால்
மனதிற்குள் அழுகின்றேன்: எண்ணி, எண்ணி!
தாயில்லா பிள்ளையைப் போல் எம்மை விட்டு
தமிழர்களைத் துரத்துதற்கோ எண்ணிவிட்டீர்?
நோய் கொண்ட ஈழத்தீர்! அவருக்குப்பின்
நீடியநாள் நான்வாழேன் உண்மை! உண்மை!

பாலாக உதிரத்தை: தன்பிள்ளைக்குப்
பரிந்தூட்டும் தாய்போல தன்னுடலின்
மேலாக வியர்க்கின்ற நீராம் ரத்த
வியர்வையினை எனக்கூட்டி வளர்த்தவரை
தேளாக மாறியின்று, இரக்கமின்றி
"துரோக" மெனும் கொடுக்கதனால் கொட்டிவிட்டாய்!
மாளாத துயர்கடலில் அவரைத்தள்ளி
மற்றெவரால் பொருள்குவிக்க எண்ணிவிட்டாய்?

உடல்வளையார் மேலணிந்த நைலோன் டெர்லின்
உடைகசங்கார் "பியூக்" காரில் உலாவல் வந்து
கடற்கரையில் பெருங்கூட்டத் திரளின் முன்னே!,
கதையளப்பார், இவர்கள் உன் மக்களானார்.
உடல் மறைக்க கந்தையின்றி உணவுமின்றி
உழைப்பிற்கே வாழ்வெல்லாம் அர்ப்பணித்து
நடைபிணம் போல் வாழுகின்ற மலைநாட்டாரோ,
நஞ்சானார், இந்நாட்டின் பாரமானார்?

பெற்றவளே, மலைத்தாயே! உன்னருமைப்
பிள்ளைகளைக் கூறாக்கி ஒருபிரிவை
மற்றவளின் கரங்களிலே ஒப்படைக்க
மனந்துணிந்து விட்டாயோ? அவர்கள் செய்த
குற்றமென்ன? நீசொல்லு, உன்னடியில்
கொட்டியரத் தத்திற்கோ நீயவர்க்கு
நற்பரிசு தருகின்றாய்? வேண்டாம் அம்மா!
நன்றியில்லாப் பெண்ணென்ற பழியே வேண்டாம்!

..சிந்தாமணி..

# புத்துலகம் படைத்திடுவோம்

உன்னுடல் மீது ஏறி மிதித்து
உயர்ந்தவர் வாழ்வெல்லாம் - இனி
மண்ணுடன் மண்ணாய் கலந்து மறைந்திட
மலர்ந்திடும் சமதர்மம்

பொன்னெனத் தம்முடல் பேணிட அயலவர்
உன்னுடல் வதைத்தார்கள் - அவர்
உன்னடி வீழ்ந்து உயர்ந்திடும் நாள்வரின்
உயர்ந்திடும் சமதர்மம்

வயலினில் சேற்றில் மாடுடன் மாடாய்
வதைபட் டேபயிர் வளர்த்தோம் - இதை
அயலினில் ஒருவர் அறுவடை செய்யும்
அநீதி ஒழித்திடுவோம்

மாளிகை உயர்ந்திட கல்லுடன் கல்லாய்
வதைபட்டே சுவரானோம் - இன்று
வாழ்விடமின்றி வீதிகளோரம்
வாடும் நிலைமாற் றிடுவோம்!

தேயிலை யாலின் னாட்டிற் கேபெருஞ்
செல்வம் ஈட்டித் தந்தும் - வாழ்வில்
தேய்நில வாக ஒளியிழந் தென்றும்
துயருறும் நிலைமாற் றிடுவோம்

ஏழையர் செல்வர் என்றிடும் பேதம்
இல்லா தொழித்திடுவோம் - எம்மில்
தாழ்வுயர் வென்னும் சாக்கடை வீழ்ந்து
சஞ்சலம் நாமினி கொல்வோம்.

# வேகம் விளைத்தெழுவாய்!

விண்ணுயிர் மலையிடையே தொழில்
விதைத்திடும் மலைமகளே
உன் நிலை நினைக்கையிலே உளம்
உருகிடும் மெழுகெனவே

நாட்டிடை பொருள் வளமே மலை
நங்கையர் விரல்தருமே
வீட்டினில் துயர்நிலையே நெஞ்சில்
வேதனை நினைவுகளே!

உடலினில் பலமில்லையே இவர்
உணர்வினில் உயிர்ப்பிலையே உளம்
விரக்தியின் சுவடுகளே! இவர்
விடுதலை யார் நினைத்தார்?

எவரெவர் சுகமுறவோ இவர்
எருவென ஆனார்கள்
இவர் துயர் போக்கிடவே
இதுவரை எவர் நினைத்தார்?

நண்பர்கள் போல் நடித்தார் பல
நாட்டிடைக் கதைபடித்தார்
பொன்பொருள் மிகசேர்த்தார் - பெரும்
புகழுறும் நிலையடைந்தார்

சொல்லிடும் பொய்யுரையே - வேத
சுருதியின் பொருளென்றே
உள்ளுவதை ஒழியார் சொல்லின்
உண்மைப் பொருளறியார்!

எத்தனைக் காலங்கள் தான் - உனை
ஏய்த்திடும் எத்தர்களின் - மாய
சித்து வலைகளிலே - நீ
சிக்கித் தவித்திருப்பாய்!

பத்தடி அறையொன்றை - உன்
பரம்பரை வாழ்வதற்காம் - உனை
எத்திப் பிழைப்பவர்க்கோ - இங்கு
எத்தனை மாளிகைகள்!

உன்னையே நீ உணர்ந்து - உனை
உறிஞ்சிடும் அட்டைகளின்
மென்னியைத் திருகிடவே - புது
வேகம் விளைத்தெழுவாய்!

..1996..

# ஜீவன் உயிர்த்தெழடா!

சொந்த நிலமென ஓரடி மண்ணும்
சொந்தமி லாதவ னே! - முன்
வந்தவர் மறைந்திட வழிவழி வந்தவர்
வாழ்வும் இருள்மூ டி
இந்த மலையகம் சுந்தரம் உற்றிட
எத்தனை இன்னலுற் றாய்? - நீ
சிந்தனை செய், வெறும் சோற்றுப் பொதியல:
ஜீவன் உயிர்த்தெழ டா!

'கங்குல் விலகிடும், எங்களின் வாழ்க்கையில்
கதிரொளி பரவிடுமே': என
பொங்கிடும் ஆவலில் எத்தனை ஆண்டுகள்
போக்கினாய் வீணாக - உணர்வு
மங்கிய வாழ்வினில் சுதந்திரத் தின்ஒளி
மருவிடப் போவதில்லை, - உல
கெங்கும் சுதந்திரக் கனல் வளர்த்திடும்
எழுச்சியைப் பாராயோ!

எட்டடி அறையினுள் உலகினைக் கண்டு
இறுமாந் திருந்தவனே! - உனை
ஒட்டி யுறவேன் கட்டி அழுதவர்
உறவுக்கும் தோள்கொடுத்தாய்! - அவர்
எட்டி யுதைத்துனை ஏளனம் செய்யினும்
இன்பமென நினைத்தாய், - வெறும்
குட்டிச் சுவரினில் நித்திரை கொள்வதை
கோடி சுகமென் றாய்!

போலிகள் தம்மையே வேலிகளென்றும் நீ
　　　　பூரிப்பில் ஆழ்ந்திருந் தாய்! - அந்த
காலிகள் பயிரையே மேய்ந்து வளம்பெற
　　　　கண்டும் மரமானாய், - 'ஏ
மாளிகள்' என்றுனை எத்திப் பிழைத்தவர்
　　　　எத்தனை பேர்களடா! - இவர்
சோலிமு டித்திட நீயொரு கருவியா?
　　　　சிந்தையில் எண்ணிடடா!

கட்சி வலையினில் சிக்கவைத் தேயுனை
　　　　சுந்தர கோலமுஞ்செய்தே, - தினம்
பட்சித் திடும்முத லாளித் துவகொடும்
　　　　பாதகர் தோழமை யா?
எச்சிற் பிழைப்பா? சுதந்திர வாழ்வா?
　　　　எதுவென தேர்ந்திட டா!
அச்சம் தவிர்த்தெழு, ஆண்மை யுடையவன்
　　　　ஆம், எனில் மனிதன டா!

தேயிலை செழித்திடும் போலெவர் வாழ்வோ
　　　　செழித்திடும்! உன் வாழ் வோ - அட
நாயினும் கேவலம்!, நன்குணர் வாயெனில்
　　　　நாளை உயர்ந்திட லாம்! - கொடுந்
தீயினைப் போலுண் வாழ்வை எரித்தவர்
　　　　தோழமை யா தோ ழா! - தொற்று
நோயிவர், உண்மை நேயரைத் தேடு,
　　　　நிச்சயம் வாழ்வு யரும்!

'கண்களைப் போலவே உங்களைக் காப்பதெம்
　　　　கடமை' எனச்சொல்லி - என்றும்
எங்களின் உழைப்பினை விற்று எவரெவர்
　　　　ஏற்று மிகவடைந் தார்! - சீழ்
புண்களை போன்றவர், கொள்கையில் சோரம்
　　　　புரிந்திடும் கயவர்களாம்! - இவ்
வஞ்சக் கொடியரை, நஞ்சென வெறுத்திடு,
　　　　வாழ்வு மலர்ச்சி யுறும்!

மேடையில் நாடகப் பாணியில் ஆடிடும்
மேட்டிமைக் காரர்களின்
கூடை நிறைந்திடும் குப்பை யுரைகளை
கேட்டுச் செவிகுளிர்ந்தும், - உன்
பீடை தொலைந்தில, பேடிக ளாமிவர்
பேச்சும் முடியவில்லை: குளிர்
வாடையி லேயுடல் ஆடி நடுங்கிடும்
மலைமக னே உணர்வாய்!

காந்தியின் பெயரை கணக்கிலா இடங்கள்
காண்பவர் தமக்கெலாம் உரைப்பார் - மது
மாந்தியே 'இன்னில் மங்கைய ரோடு
மருவிச் சுகத்தில் திளைப்பார்!
வேந்துப் பணியெலாம் தம்தலை நீட்டி
மேல்வரு வாயை குவிப்பார்! - இதை
ஓர்ந்து உணர்ந்து ஓ... மனி தனாய் நீ
உயர்வது என்றோ?.. உரைப்பாய்!

சங்கத் திருடரை பிறன்மனை கவரும்
தருக்கரை தலைவர்க ளாக்கி
அங்கம் புளகாங் கிதமடைந் தேபெரும்
ஆனந்த வாரிதி திளைத்தாய்!
பங்க மடைந்திடும் வாழ்வினைத் திரும்பி
பார்க்க மறந்தவ னேநீ
பொங்கி, எழு: விழிப் பெருந்தீக் கனலினில்
பொய்யர்கள் வாழ்வு நீ றாக!

தலைநகர் தனில் குளிர் சாதன அறையில்
தளிருடலார் அரு கிருக்க
பலபல சுகங்களை அவரனு பவிக்க
பாட்டா ளிகளோ தொடர்ந்தும்
தலைமுறை தோறும் இவர்களின் ஏவல்
தனைச்செய் திடும்அடி மையாய்
உழைப்பதே விதியா ஓ.. மலை மகனே,
உணர்விலா கற்சிலை யாநீ?

..1994 குன்றின்குரல்..

# தீபங்களை ஏற்றுவோம்!

வீடெங்கும் தீபஒளியேற்றி - இருள்
மேவும்நிலையை அறவோட்டி
நாடெங்கும் இன்பநலம்பெருக - மலை
நங்கைய ரேகும்மி கொட்டுங்கடி!

உள்ளத்தில் உண்மை விளக்கேற்றி - அதன்
ஒளியினில் வாய்மை இருளகற்றி, - அன்பு
வெள்ளத்தில் வையத் துயிரினங்கள் - என்றும்
மூழ்கிக் களிகொளப் பாடுங்கடி!

நந்தமிழ்ப் பெண்கள் உழைப்பினிலே - இந்த
நாடு உணர்ந்திடும் போதினிலே - இளஞ்
செந்தளிர் கிள்ளும் வளைக்கரத்தின் - உயர்
சிறப்பை போற்றியே பாடுங்கடி!

வீட்டினி லும்வெளி வேலையிலு மெங்கள்
மேனி யுழைப்பே அதிகமடி! - இந்த
நாட்டினி லேமலைப் பெண்கள் நமக்கின்னும்
நாடுஞ் சுதந்திரம் உண்டோடி!

மேடை யதிர்ந்திட பெண்ணுரி மையென
வீணில் அழுது நடிச்சாங்க! - எங்கள்
பீடை தொலைந்திட வில்லை, யிவர் வெட்டிப்
பேச்சினை தள்ளி மிதித்திடடி!

எங்கள் வளைக்கரம் இங்கு அசையாது
இருந்திடில் நாடு உயர்ந்திடுமோ? - இதை
கங்குல் மனத்தவர் நன்கு தெளிந்திட
கைகொட்டி புரட்சிப்பண் பாடுங்கடி!

பெண்மைவாழ் கவென முன்னர் மகாகவி
பேசிவிட் டானடி, இன்னுமென்ன?
நம்மைத்தாழ் வாக எண்ணும் மதியிலார்
நச்சு மனத்தைக் கிழித்தெறிவோம்!

தொடர்ந்து வறுமைத் துயரகற்றி - நம்மை
சூழ்ந்த அடிமைத் தளையறுத்து, - ஒளி
படர்ந்த முகத்தின ராய்புது வாழ்வு
படைத்திட தீபங்கள் ஏற்றுங்கடி!

வாழ்வு கொடுப்பவர் நாங்களடி, என்றும்
வாடிநலிந்திட லோநியதி? - புது
வாழ்வு படைத்திட தாழ்வு அகற்றிட
மங்கைய ரேதீப மேற்றுங்கடி!

பாமை அசுரனைக் கொன்றத னாலிந்த
பண்டிகை தீபாவளி யென்பார்! - எனின்
தீமையை பெண்மைதான் வென்றதெனும் வெற்றி
தீபங்கள் ஊற்றி மகிழ்ந்திடு வோம்!

..1984..

# புதுமைப் பெண்ணாய் மாறிடுவோம்

காலையி லேபனி காயுமுன் னேகுளிர்
காற்றைக் கிழித்துமே ஓடுகின்றோம்! - தொழிற்
சாலையி லேசங்கு ஊதுமுன் னேபசுந்
தங்கத் தளிரினை கிள்ளிடுவோம்!

வெண்டை விரல்கள் விறைத்திடி னும்எங்கள்
மேனி குளிரில் நடுங்கிடினும், - இரு
கெண்டை விழிகள் பளபளக்கும், தளிர்
கிள்ளவோ கைகள் பரபரக்கும்!

தூரத் தெரியும் மலைமுகட் டில்எழும்
சூரியன் தன்பொற் கதிர்களினால் - எங்கள்
தேகந் தழுவி சுகித்திடுவான்! வண்ணச்
செம்பொற் துகள்தனை தூவிடுவான்!

முத்துக்கள் நூறு முகத்தில் மின்னும் - தங்க
மூக்குத்தி மின்னியே கண்சிமிட்டும்! - பிறை
நெற்றியில் குங்குமப் பொட்டு மின்னும் - எங்கள்
நெஞ்சத்தில் கற்புக் கனல் பிறக்கும்!

கூடை அசைந்து பக்கத்தி லும்வந்து
கூட்டும் 'கிறுக் கிறுக்' கோசையிலே - நெஞ்ச
மேடையி லேசதி ராடுமெண் ணங்களின்
வேதனை துன்ப ஒலிகேட்கும்!

பக்கநி ரைச்செடி சிக்கிடும் போதிலும்
பக்குவ மாகவி லக்கிச் செல்வோம் - எம்மைச்
சிக்கவைத் திருக்கும் அடிமைத் தளையினை
தூக்கி யெறியத் துணிவு கொள்வோம்

வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென
மேலுறும் எண்ணம் எங்கள் மனதில், - இனி
முட்டித் ததும்பி முளைத்து விடும் எம்மை
மூடிய பேரிருள் ஓட்டிடுவோம்

என்றும் அடிமைச் சிறையினி லேவைத்த
எத்தர்கள் கொட்ட மடக்கிடவே பெருங்
குன்று நிகர்த்த மனவுறுதி கொண்டு
கோதையர் போரிட முன்வருவோம்!

பெண்ணுக்கு கல்வி பெருந்தீது, உரிமைப்
பேசிடி லோஅது பெருந்தவறு, என்ற
எண்ணம் படைத்தவர் மண்ணிற் புதைந்திட
எண்ணற் கரிய கலைபடைப்போம்!

ஆக்கிப் படைப்பதும் ஆண்களுக்கேசுகம்
அளிப்பதும் பெண்கள் கடமை யெனும் - பழம்
போக்கையே தள்ளிமிதித்து நவயுகப்
புதுமைப்பெண் ணாகவே மாறிடுவோம்!

சாதிச் சமய சங்கறுத்து, பெண்கள்
தாழ்வுயெனும் தீய போக்கொழித்து: இம்
மேதினி யில்புது மாற்றம் படைத்து பெண்
விடுதலைக் கீதம் இசைத்திடுவோம்

பெண்ணுக்கு இங்கோர் தனிநீதி - என
பேசிடும் நூல்கள் எவையெனினும் - அவை
மண்ணில் புதைத்து மகிழ்ந்திடுவோம் - நவ
மாதர் அறங்கள் படைத்திடுவோம்!

பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் இந்த
பாரில் புரட்சி பலபுரிந்தே - எம்முன்
நேரிடும் துன்பங்கள் யாவையும் வென்றிடும்
நெஞ்சுர மிக்கவ ராய் வருவோம்!

போலித் தலைமை பொசுக்கிடுவோம் - இவர்
பொய்மைத் திரையைக் கிழித்தெறிவோம்!
பாலித்திடுவோம் புதுயுகத்தை, மலைப்
பாவையர் வாழ்வில் உயர்ந்திடுவோம்!

..1984..

# இக்கரைக்கு அக்கரை பச்சை

உழைத் துழைத்து தேய்ந்து போன
துடைப்பக் கட்டையாக
உசிர மட்டும் எடுத்துகிட்டு
இந்த ஊரு வந்தோம்!

தாயி நாடு என்று பெரும்
சந்தோசத்தில் வந்தோம்!
பாயி கூட இல்லாமலே
படுத்திருக்கோம் தெருவில்!

'லோனெ'டுத்து கடையை வச்சி...
ரொம்ப ஆசை பட்டோம்: இன்று
லோனு மில்லே, கடையுமில்ல
ரோட்டளந்து கெட்டோம்!

வீடுகட்ட கிணறு வெட்ட
லோனெடுத்தான் கருப்பன் இப்ப
வீடுமில்ல கிணறு மில்ல
வீதியிலே இருக்கான்!

தாய் நாட்டில் நிம்மதியா
வாழ்வோ மின்னு வந்தா...அட
நாய் நரியா நம்ம சுத்தி
புடுங்குறாங்க இங்கே!

சொந்த நாடு தஞ்ச மென்று
வந்து விட்டோம் மச்சான்! அட
எந்தப் பக்கம் திரும்பி னாலும்
கேக்குறாங்க லஞ்சம்!

வாரவுங்க நாலு தொழில
கத்துகிட்டு வந்தா... ஏதோ
வயித்துப் பாட்டு பிரச்சனையை
தீர்த்துக் கலாம் மச்சான்

இக்கரைக்கு அக்கரையில்
இருக்கும் பச்சை...கதையை
இனியு மிங்கு வாரவுங்க
தெரிஞ்சிக் கணும் மச்சான்!

..1980 செப்டம்பர் கொந்தளிப்பு..

# இளைஞரின் எதிர்காலம்?

சின்ன பையனும் சிகரட்புகைப்பான்
செவனியர்ஸ் ஓல்டை சுவைத்துக் குடிப்பான்
வண்ணக் கலரில் வீடியோபார்த்து
வந்தும் ஒத்திகை வடிவாய் செய்வான்!
பாடசாலைக்கு படிக்க அனுப்பினால்
கூடற்கலையை குறைவறக் கற்பான்
"ஏடா மகனே இது சரியா" வெனில்
நாடே இதில்தான் நடக்குது என்பான்.

"அரசாங்கமே அனுமதியளித்து
அனைவரும் குடித்து ஆடிபாடவும்
மது பார் ஆயிரமாயிரமாக
வளமார் நாட்டின் மூலைமுடுக்கெலாம்
பட்டினம் கிராமம் பாதையோரங்கள்
எங்கும் அமைத்து யாவரும் குடிமகன்
ஆக வசதிகள் அளிப்பதும், மக்கள்
வீட்டில் இருந்தே வீடியோ திரைப்படம்

பார்த்துக் களிக்கவும் பரிசு சீட்டுகள்
வாங்கி செல்வச் சீமானாகவும்
வழிகள் ஆயிரம் வகுத்திடும் அரசு,
இத்தனை செய்யும் எம்மரசாங்கம்
தீதாயிருந்தால், செய்யுமோ அப்பா!
யாதும் மக்கள் நலத்திற்கே ஆமாம்
ஆதலால் நீங்கள் அஞ்சுதல் வேண்டாம்!
அப்பா" என்றான் அறிவுள்ள மகனும்

சிகரட் கையில் இல்லாவிட்டால்
சிநேகிதர் இவனை மதிப்பதே இலையாம்
சுகம், சுகம் ஒரு தாளில் உளதாம்
சொர்க்கத்தை இங்கேகொண்டு வருமாம்
பாரில் நுழைந்தொருட்ரம் போட்டால்தான்
பல்கலையும் படிக்காமலேவருமாம்!
இளைஞர் தம் சிந்தனைஇப்படி யிருந்தால்
எதிர்காலம் இவர்வாழ்வு என்னவாகும்?

..1991 வீரகேசரி..

# உணர்வினை வெல்லும் பெண்மை

பொட்டுத் துலங்கிடும் நெற்றியி லேயிளம்
பிறையென நீறணிந்து, - முழு
வட்ட நிலவு முகத்தில் கிறீமுடன்
வாசனைப் பவுடரிட்டு, - இடை
கட்டிய சேலையின் மேலொரு ரெட்டு
கட்டி நடந்திடுவாள்! - இவள்
எட்டி நடக்கையில் ரெட்டு உரசியே
இசை யெழுப்பிடுமே!

கூடை அசையகால் கூட்டி நடக்கையில்
கூத்தின் இயல் பிறக்கும், - விழி
சாடையும் மார்பினை மூடிய ஆடையும்
சாற்றும் அபிநயங்கள், - கொடித்
தோடைச் சுளையெனும் செவ்விதழில் இன்பச்
சிந்து பிறந்து வரும், - நடம்
ஆடும் கலாப மயிலென வேபொன்னி
அசைந்து வருகையிலே!

மச்சான் வரும்வழி பார்த்திரு கண்களை
மலர வைத்திப்பாள், - தினம்
அச்சாரம் பெறும் இதழை மலர்த்தியோர்
அழகினை சிந்திடுவாள்!
பச்சைக் கிளியிவள் இச்சைக் கிசைந்தவன்
பக்கம் இருந்திடும் நாள், - எண்ணி
வெட்கத்தில் இவள்முகம் செக்கர் படிந்திடும்
வேளை நினைந்திடுவாள்!

கூதற்பனியில் குளிரும் உடலினில்
கூடும் நினைவுகளோ, - சங்
கீதம் இசைத்தே கிளரும் உணர்வினில்
கோதை குளிர்காய்வாள்!
ஆவணி வருவதை ஆவலி லேதினம்
அறிந்திட "நாட்காட்டி"
தாள்களைப் புரட்டித் தவிப்பது போல்பசுந்
தளிர்களைக் கிள்ளிடு வாள்!

மேலெழும் காதல் உணர்வினை நெஞ்சுள்
மறைத்திடு பெண்மையைப்போல், - கூடை
மேல்வரும் கொழுந்தினை ஆழ அழுத்தியே
மேலும் கொழுந்தாய்வாள்!
ஆலையில் ஒலித்திடும் சங்கின் ஒலியிவள்
அத்தான் அழைப்பதுபோல், - இரு
நீள செவிகளில் விழுந்திடும் அக்கணம்
நெஞ்சம் மயங்கிடுவாள்!

அன்னையிடம்தன் எண்ணத்தை சொல்லியே
அனுமதி கேட்பதுபோல், - அன்று
பெண்ணிவள் கொய்த தளிர்களின் நிறையின்
பெறுமதி காணநிற்பாள்!
மங்கள நாணினை தன்கழுத் தேற்று
மகிழ்ந்திடும் பொழுதேபோல், - உளம்
பொங்கிடும் மகிழ்ச்சி முகத்தில் படரும், பேர்
போட்டு வருகையிலே!

..1992..

# அக்கறை உண்டா சொல்லு மச்சான்

மாவும் அரிசியும் வாங்க முடியாத
வறுமை நிலையை எண்ணி - தினம்
ஆவி துடிச்சிடும் அங்கம் மெலிஞ்சிடும்
ஆரும் நினைக்கையிலே!

வரவுசெலவு திட்டமிதாம் எங்க
வாழ்வை அழிச்சிடும் திட்டமிது - எங்க
அருமை தலைவரு மாருங்களும் இதை
அப்படியே ஏத்துக்கிட்டாங்களா?

மந்திரி சீட்டுல உக்கார்ந்து நம்ம
மக்கள் குறைகளை சொல்லுவாங்க - என்று
இந்த முறையும் ஓட்டுகளை போட்டு
ஏத்தி வச்சோம் நாற்காலியிலே.

சந்தா பணத்தையும் மந்திரி சபையின்
சம்பளத்தையுமே எண்ணிக்கிட்டு
குந்தியிருப்பதற்கோ எங்க ஓட்டுகள்
கொடுத்து அனுப்பினோம் சொல்லு மச்சான்.

சாமான் வெலைங்க ஒசந்தது போல எங்க
சம்பளம் ஏதும் ஒசந்திருக்கா - இன்னும்
ஆமாஞ் சாமியா இருக்கீங்களே ஒரு
அக்கறை உண்டா இதுவரைக்கும்?

கொச்சிக்கா உப்பு பருப்பு நெனைச்சாலே
கும்பியில் நெருப்பு கொட்டும் மச்சான் - நீங்க
மெச்சிப் புகழ்ந்திடும் தலைவர்களுக்கு - எங்க
வேதனை கொஞ்சமும் உண்டா மச்சான்?

மாலைகளில் மது பானங்களில் நெஞ்சம்
மகிழும் இவர்களும் மந்திரியாம் - இங்கு
ஆலைகளில் கரும்பாக தொழிலாளர்
அல்லல் படுவதை யார் அறிவார்?

சாராயக் கடைகளை தொறந்து வச்சி பெரும்
சமுதாயச் சேவையினு சொல்லிக்கிட்டு
காரும் பங்களாவும் தேடிக்கிட்ட இக்
கயவரையா இன்னும் நம்பிடனும்?

நாட்டு நெலம அறிஞ்சிடனும் - அதில்
நம்மவர் நெலயும் புரிஞ்சிக்கணும், கள்ளக்
கூட்டங்களையினம் கண்டு பிடிச்சி நாம்
கொண்டு வந்து காரி துப்பிடனும்.

**..1990 ஜனவரி தேயிலை..**

# என்னையே நினைத்து வாழு!

உங்களின் உயர்வுக் காக
உடல்பொருள் ஆவியெல்லாம்
இங்குநாம் அர்ப்ப ணித்தோம்
என்றெல்லாம் மேடை தோறும்
சிங்கம்போல் கர்ஜனைகள்
செய்துதான் செல்வம் சேர்த்தோம்
எங்களைவிட பாட் டாளி
இனத்திற்கு நண்ப ருண்டோ?

தங்கமா ளிகையில் வாசம்
சரஸ்சல் லாபத் திற்கு
தங்கம்போல் மேனிமின்ன
தளதள இளமை யோடு
கண்களில் கணைபொ ருத்தி
கவர்ச்சியை தூத னுப்பும்
மங்கையர் அருகில் சொர்க்க
வாழ்விது எவருக் குண்டு?

வீடுகள் உனக்குச் சொந்தம்
வேலிக்கு அப்பாலுள்ள
மேடுகள் பள்ளம் சொந்தம்
விவசாய நிலங்கள், சுடு
காடுகள் உனது சொந்தம்
காண்பதெல் லாமுன் சொந்தம்
ஏடுகள் தோறும் நாங்கள்
எழுதிடல் இதுதா னப்பா!

வாக்குறி மைகள் கேட்டு
வாங்கினோம் எதற்கு? நாளை
வாக்குகள் போட்டு எம்மை
மந்திரி யாக்கப் பாரீர்
நாக்கினை வளர்த்து, அதில்
நாணயம் வளர்த்திடா யெம்
நோக்கினை பூர்த்தி செய்ய
நேயரே மறந்தி டாதீர்.

ஓட்டையா தகரம்? தண்ணீர்
ஒழுகிடும் போதோர் மூலை
நீட்டியே படுக்க வேண்டாம்
நில், விடி யும்வ ரைக்கும்
சாட்டையாய் வீசும் மழைத்
தாரையில் நனைபவன் நீ
வீட்டினுள் மழைபெய் தாலுன்
மேனியா கரைந்து போகும்?

பாட்டாளி என்ற சொல்லை
பலநாட்டில் சொல்லி யன்றோ
தோட்டங்கள் சேர்த்தோ மன்றி
செய்தவை பிறிதொன் றில்லை
வாட்டத்தை போக்கி உம்மை
வளமொடு வாழ விட்டால் - எம்
கூட்டத்தின் கதியென் னாகும்
கூறுஎன் அன்புத் தோழா!

வறுமையில் ஆழ்ந்து துன்பம்
வாட்டிய போதும், அதை
பெருமையாய் கொள்ம னந்தான்
பேதலிக்காதே, கண்ணன்
திருவவ தாரம் என்னை
சிந்தையில் எண்ணு, என்றும்
உரிமையை நினைத்தி டாதே
உழைப்பினை உயிராய் எண்ணு.

இந்திர போக வாழ்வில்
இருந்திடும் எம்போல்வாழ
சிந்தையில் எண்ணிடாதே
தொழிலாளி நீதானப்பா!
சிந்தை செய்வ துந்தன்
சிறப்புக்கு அழகே அல்ல
எந்தனை எண்ணு நெஞ்சில்,
இருப்பதில் அமைதி கொள்ளு.

உழைப்புக்கு ஏற்ற தான
ஊதியம் இல்லை, ஓர்நாள்
பிழைப்புக்கே எங்கள் பாடு
பெரும்பாடு என்று நீங்கள்
சலிப்புற்று பேசு கின்றீர்
சரியல்ல, உமக்கா கத்தான்
குளிர்பட்டு அணையில் உங்கள்
குறைபோக்க சிந்திக் கின்றேன்.

வானிருக் கும்வ ரைக்கும்
மதிரவி இருக்கும், மண்ணில்
நானிருப் பேன் எனது
நல்லடி யாரிருப்பார்
காண்துணை யாக நெஞ்சில்
கவலையா, சீச்சீ, வெட்கம்
ஏனினி துயரம்? விடு.
என்னையே நினைத்து வாழு!

..1988 அக்டோபர் மாவலி..

# உழைப்பாளர் நாவினிலே

வீர மறவர்திருக் கூட்டம்: இங்கு
　　　　வீணர்க் குழைப்பதிலோ நாட்டம்?
பாரை உயர்த்திடும் நம் கைகள் ஒன்று
　　　　பட்டாலே வந்திடுமோ துயர்கள்?
தீர உணர்ந்து எழுந்தோடி வரும்
　　　　தொழிலாளர் வர்க்கமொன்று கூடின்
நேரும் பகையெமக்குத் தூசு
　　　　நிச்சயம் வெற்றியெனப் பேசு!

ஏரைப் பிடித்து வயல் உழுவோர் - பெரும்
　　　　இயந்திரத்தில் நாளும் உழல்வோர்
கீரை சுமந்து விலை கூவி - கஞ்சி
　　　　குடித்து வயிறுவளர்க்கும் ஏழை
நீரைக் கிழித்து கடல் மீதில்
　　　　நித்தம் தொழி புரியும் பரதர் - இவர்
யாவரும் தொழிலாளர் வர்க்கம் இங்கு
　　　　நாமொன்று பட்டிலோ சொர்க்கம்!

..1983 பெப்ரவரி..

# ஏன்...?

நூறு நூறு அறிஞர் தோன்றி
நித்தம் செய்த போதனை
கூறு நூறு கொள்கை கொண்டார்
குணத்தை மாற்ற வில்லையே!
மாறு கொண்டு பகைமை மிஞ்சி
வஞ்சம் கொண்டு உலகிலே
போர் புரிந்து மாந்தர் கூட்டம்
பூண்டோடு அழிவதேன்?

மெய்யழிந்து பொய் மலிந்து
மேவி நின்ற தீமையால்
தெய்வம் போற்றும் செயல் மறந்து
சிறுமை மண்டி போன தேன்?
கை நிறைந்த பொருள் வழங்கும்
கருணை யுள்ளம் மாறி சோற்றுப்
பை நிறைக்க கொலை புரியும்
பாதகம் மலிந்த தேன்?

மதி வலியால் வாழ்வில் வெற்றி
மலியச் செய்த பேர்கள்தாம்
“விதி வலிது” என்று நம்பி
விரக்தி யுற்றுப் போனதேன்?
நிதி குவிக்க தீமை கோடி
நித்தம் செய்யும் பேரெலாம்
நதி குளித்து நம்பன் பாதம்
நாட இங்கு முயல்வதேன்?

பசித்திருக்கப் பார்த்திடாது
பகுத்து உண்டு வாழ்ந்தவர்
புசித்திருக்க ஒருவர் - பலர்
புலம்பி வாடல் என்னவோ?
வசித்திருக்க ஒருவர் வீட்டில்:
மற்றவர்கள் தெருவிலோ?
நிசித்திருக்க கழுத்தறுக்கும்
நீச மிங்கு சூழ்ந்ததேன்?

..1979 ஒக்டோபர்..

# அன்பெனும் போர்வை அளித்திடும் பெண்

தேயிலையின் பசுமையிவள் பார்வை!
சிந்தையிலே நான் காணேன் சோர்வை!
கோயிலிலே சிலைபோலும்
கோதையிவள் பொறுமைநிறை
சேயிழையாள் அன்பே என் போர்வை!

மண்நோகா மல்நடக்கும் பாதம்!
மணவாளன் சொல் இவளின் வேதம்!
பெண்ணியவார் பெருங்கற்பின்
பேரிமயம் பிள்ளைகளின்
இன்னொலியே இவளின்சங் கீதம்!

எவரிடத்தும் பகை யரும்பா உள்ளம்!
இருப்பதனால் இவட்கில்லை கள்ளம்!
நவயுகப் பெண் எனவீதி
நடை பயிலும் நங்கையர்க்கும்
இவள் வாழ்வு இலக்கியமாய் துள்ளும்!

பார்க்கின்ற போதெல்லாம் அம்பு!
பட்டுருவும் நெஞ்சத்தை முன்பு!
போர்க்கியவா நெஞ்சமவள்
பின்னோடி தஞ்சமென
வார்க்கின்றாள் இன்றெனக்கு அன்பு!

நானெழுதும் கவிதையின் நற் பொருளாம்!
நங்கையிவள் தருங்கொடையோ அருளாம்!
ஊனுடலில் ஒன்றாகி
உணர்வாகி, கவிதையென
தான் வருவாள் அவளெனது குருவாம்!

..1991..

# தொழிலாளர் வாழ்க்கையிலே

எழுவான் திசையில் எழும்பரிதி தோன்றுமுன்னே
எழுவான், தனைச்சூழ்ந்த இடரை நினைத்திதயம்
அழுவான், அதுவன்றி ஆகும் வினைபுரிய
வழிதான் அறிய மாட்டான் தொழிலாளி!

உணவின்றி உடையளித்து உறைவிடங்கள் தானமைத்து
பணங்குவித்து வைக்கின்ற பாட்டாளித் தோழர்களின்
நிணம் பிடுங்கித் தின்பவர்கள் நிதமும் சுகித்திருக்க நடைப்
பிணம்போல் திரிகின்றான் நம்மகத்துப் பாட்டாளி!

பேங்குக் கணக்கில்லை, பெட்டிகளில் பணமில்லை,
வாங்குகின்ற சம்பளமோ வயிற்றுக்கும் போதாது:
தாங்க முடியாத தரித்திரத்தின் சுமையழுத்தும்
ஏங்கியழுவதல்லால் என்செய்வான் தொழிலாளி?

எப்படியோ ஐம்பது சதம் இருப்பாக்கி சுவீப்பு
டிக்கட்டு வாங்கி தினந்தினமும் பூசைபண்ணி
தேங்கா யுடைத்துத் தீபதூபம் காட்டி,
பாங்கா யெனக்குப் பரிசுமட்டும் விழுந்ததென்றால்

மாடா உனக்கு வைத்திடுவேன் பால் பொங்கல்
ஆடுகோ ழியறுத்து ஆக்கிப் படைத்திடுவேன்
என்றெல்லாம் எண்ணி இருப்பான், கனவுலகில்
சஞ்சரிப்பான் அதிஷ்டம்தான் வரவே வராது

தன்மகள் மணமுடித்துத் தலைவனுடன் ஏகையிலே
என்ன கொடுப்பான் இவன்மகட்கு சீர்வரிசை,
கம்பளி யொன்றிடையில் கட்டும் படங்கிரண்டு
செம்பீயச் சாமான் சில கொடுப்பான் சீராக!

தங்க நகை நைலோன் சாரி வெள்ளிப் பாத்திரங்கள்
எங்கே கொடுப்பான் இவன் வயிறு காய்கையிலே
தொங்கட்டான் மூக்குத்தி தோடிரண்டு போட்டுவிட்டால்
எங்கள் இளங்கொடிக்கு என்னகுறை என்றிடுவான்!

ஊர்பேர் தெரியாத உதவாக்கரையெல்லாம் தொழிலாளி
பேரைத் தினஞ்சொல்லி பெருந்தனவானாகிவிட்டார்
ஊர் வாழ மக்கள் உயிர்வாழ உழைத்தவர்கள்
சீர்கெட்டு இன்பம் சிறிதுமின்றி வாடுகின்றார்!

மண்மீது கைபட்டால் மானந்தான் போகுதென்பார்
பொன்னும் பொருளும் புகழும் அடைந்திருக்க
மண்ணில் புழுவாய் வதையுறும் தொழிலாளி
எண்ணில் துயரம் இங்குறுவான் என்ன விந்தை!

வேறு

போராட்டம் பல போடுவான், இருக்கும்
பொருள்தனைத் தின்று ஆடுவான் - ஆற்று
நீரோட் டம்போல் பேசிடுந் தலைவர்
நெஞ்சம் சுமக்க மாலை போடுவான் பின்
மாறாட்டமாய் முடியும் போராட்டம்
மனந்தானுடைந்து வாடுவான் வாழ்க்கைத்
தேரோட்டவே பொருள்தனை இன்றி
தெருவில் பிச்சைக் கோடுவான்!

ஈழமேயென் இன்னுயிர் நாடென
எண்ணி யெண்ணி உழைத்தவன் - இன்று
வாழவோ அன்றி மாளவோ, என்று
வழியறியாமலே தவிக்கிறான் - என்றும்
ஆளவே வரும் கூட்டமோ இவனைச் சூ
தாட்டக் காயென எண்ணியே எந்த
நாளுமே விளையாடுவார் இவன்
நலமதை எவரும் எண்ணிடார்!

..1971 அஞ்சலி..

# யாருக்குப் பரிசு?

கொலை யுணர் வேறி உயிர் மலர் ஆயிரம்
கொட்டிடும் நிலை கூறாது
விலை மகள் ஆட்டம் விரும்பிடும் கூட்டம்
விருந்துயர் வார்க ளார்ப் பாட்டம்
நிலை பெறும் இடங்கள் கலை வளர் அரங்காம்
நிதம் விளம் பரம் இதற்(கு) ஊட்டம்
கலை வளர் பூமி மலையகம் இதனை
காண்பவர் கண்கள்தாம் குருடா?

போர் புயல் குண்டு மழையெனச் சொரிய
பூமியின் மேனி குருதி
நீர் புரண் டோடும் நிலையினைச் சொல்லும்
நெஞ்சுரம் இல்லா கயவர்
ஊர்ப்புறம் செல்வரின் உயர்மா ளிகையின்
ஓர் இர வுணர்வினை கலையாய்
கார்களில் வருவார் களிப்பதற் காக
காட்டில் பரிசுக ளுண்டாம்!

தலை நகர் வாழும் ஒருசில பேரை
தன்னடி போற்றிடு வோரை
கலைகளில் மன்னர் என பெரும் பரிசும்
கணக்கிலா செல்வமும் கொடுப்பார்!
மலை களின் மக்கள் வாழ்வியல், இவர்கள்
மனத்துயர், உணர்வினைத் தூய
கலை வடி வாக கவிதைக ளாக
படைத்திடும் கலைஞரைப் பாரார்!

பொய் யினை கற்பனை போர்வையால் மூடி
புண்படர் கலையாய் தருவார்
துய்ப்பது இந்திர போகம்: மக்கள்
துயர்நிலை மாற்றிட நாளும்
மெய்க் கலை படைப்பார் வீதியில் திரிவார்
வீட்டினில் வறுமையே சூழும்
நைச்சியம் பேசி நடிப்பவர் தமக்கே
நாளும்பா ராட்டும் பரிசும்!

நீரினுக் கேங்கும் நிலமகள் தாகம்
தீர்த்திடும் கார்முகில் போல
பாரினில் எளியோர் படுந்துயர் போக்கும்
பணியே பண்புளோர் செயலாம்
வாரிதி பெய்யும் மழைபோல், செல்வம்
வைத்திருப் போர்க்கே வழங்கும்
மேரென செல்வம் மிகவுடை யோரா
மேலவர் மனிதரில் கடையர்!

..1992 கொழுந்துளிப்பு..

# புத்துலகு படைப்போம்

அடிமையென்னும் பெருவிலங்கை
உடைத்தெறிந்து ஆண்மையோடு
ஆர்த்தெழுந்து வா!
உழைக்கும்மக்கள் உரிமைமறுக்கும்
உலுத்தர்கூட்டத் திமிரடக்க
உறுதிகொண்ட நெஞ்சினோடு
போர்தொடுக்க வா!

கொடுமைகண்டு அஞ்சிநீயும்
கூனிக்குறுகி ஏவல்செய்யும்
நிலையைமாற்ற வா!
மடமைச்சேற்றில் நாளுங்கிடந்து
எருமைபோல உணர்ச்சியற்று
வாழும்வாழ்வை நீக்கிப்புதிய
மலர்ச்சிகாண வா!

உழைக்கும்மக்கள் ஒன்று: அவர்கள்
உரிமைகாத்தல் இன்றுநமக்கு
உயர்ந்த பணியடா!
உரிமைக்காக போர்நடத்தி
உதிரம்சிந்தி உயிர்கொடுத்த
உழைக்கும்வர்க்கம் வாழ்விலின்று
உயர்ந்த நாளடா!

மனிதர்க்குள் உயர்வுதாழ்வு
வகுத்துவைக்கும் வர்க்கந்தன்னை
வதைத்த பேர்களாம்:
பணப்பேய்கள் தம்மை யொழித்திடவே
பாட்டாளிதானும் உயர்ந்திடவே
பாரில்உழைக்கும் மக்களொன்றாய்
கூடிச் செல்லுவோம்!

..1981 ஜூன்..

# பொங்கி எழுவீர்!

எழுவீர் எழுவீர் தோழர்களே
எதையும் தாங்கும் இதயங்களே!
புழுவாய் கிடந்து நலிந்தது போதும்
பொங்கி எழுவீர் சிங்கங்கள் போல

எழுவீர்

உச்சிமலையில் ஊத்தும் மழையில்
உழைத்துக் களைத்தோமே
பச்சைத் தளிரை பறித்தே பிறர்க்கு
பணத்தைக் குவித்தோமே

எழுவீர்

நச்சுப் பாம்புகளாய் நம்மைக் கடித்து
நாளும் வதைப்பவரை நமை
பிச்சிப் பிடுங்கிடும் பேய்களை வஞ்சப்
புல்லரை வென்றொழிப்போம்!

எழுவீர்

வெற்றிச் சூரியன் தெரியுதடா
வீணர்கள் கூட்டம் மறையுதடா
ஒற்றுமை ஒன்றே மேலுறும் மார்க்கம்
உணர்ந்தே வெற்றிச் சங்கினை ஒலித்தே!

எழுவீர்

உலகில் வாழும் பாட்டாளி
ஒரே வர்க்கம் நம் கூட்டாளி
அலை போல் எழுவோம் கொடுமை மலையை
அசைப்போம் விடுதலை கீதம் இசைப்போம்!

எழுவீர்

..1986 ஏப்ரல்..

# கொதித்தெழுவோம்

மனித உரிமைகள் இதுவென உலகோர்
வகுத்த கொள்கையை உடைப்பில் போட்டு,
இனிய முகத்துடன் தார்மிகம் பேசும்
ருத்தி ராசப் பூனைகள் தம்மை
புனித மாம்பொது மைத்துவம் காணும்
புத்து ணர்வுகொண் டெழுந்தொழி லாளர்
அணிதொ டங்கிடும் போர்தனில் வேள்வி
ஆகுதி யாக கொடுத்திட வேண்டும்!

ஏற்றத் தாழ்வுகள் எதுவும் இன்றி
எவரும் இங்கு சமமே யாக
வேற்று மையிலும் ஒற்றுமை காணில்
விளையு மோயினப் பகைகள் இங்கு
ஆற்றல் கொண்டவ ராம்தொழி லாளர்
அவரின் கைகளே நாளை உலகை
மாற்றும் கைகள் பொதுமைப் பூங்கா
மலரவைக்கும் வலிமைக் கைகள்!

ஒருவர் வாழ்வை பறித்துத் தன்னவர்க்
குரிமை யாக்கும் உலுத்த செயலினர்
ஒருவர் உழைப்பைச் சுரண்டி, மற்றவர்
உயரும் வாழ்வை நலமெனச் சொல்லும்
திருடர், சமூகத் துரோகியர் தம்மை
தூக்கி யெறிந்து சமத்துவம் பேணும்
திருநிறை பொதுமை உலகினைக் காணத்
துடிக்கு மாந்தொழி லாளர் வர்க்கமே!

ஒற்றுமை யென்னும் வேள்விக்களத்தில்
உரிமை வேட்கைக் கனலது மூட்டி
கொட்டும் குருதி நெய்யினை வார்த்து
குறிக்கோள் புதுமலை யகமது காண
வெற்றி முரசம் கொட்டிப் பகைமேல்
வீழும் அரிமாப் போல் தொழி லாளர்
கொற்றத் தவிசுகள் தூள் தூளாக
கொதித்தே எழுவார் புதுயுகம் காண்பார்!

..1982 ஆகஸ்ட்..

# நாணலைப் போல் தலைசாயாதே

உழைப்பவன் நீ, யிதை உண்பவன் யாரென
உணர்கிலா அறிவிலி யாக,
பிழைபடும் வழியினில் பிழைத்தவன் ஆகி
பிறர்புகழ் போற்றியே வந்தாய்
உளையெனும் வறுமைக் குழியினில் வீழ்ந்தும்
ஓ....உணர் விலாவெறுஞ் சடமாய்
குழைவுறும் சொல்லும், குறு நகை முகமும்
கொண்ட புண் கொடியருக் குழைத்தாய்.

தேயிலைத் தளிரினில் மாலைகள் தொடுத்து
தீயரின் கழுத்தினில் போட்டாய்,
தாயுடன் சேயும் உறுதுயர் மறந்தே
சங்கத்தில் ஐக்கியமானாய்.
வாயுடன் தொண்டை நீர்வரண் டிட, "பெரும்
வள்ளலே வாழ்க!" வென் றுரைத்தாய்
நாயினைப் போலவர் காலினைச் சுற்றி
நாணமி லாமலே திரிந்தாய்.

ஆயினும் என்ன, உன் வாழ்வினில் மலர்ச்சி
அணுகிய தாயிது வரைக்கும்?
தேய்பிறை யாகவுன் வாழ்வு அமையயித்
திருடர்கள் வாழ்வோ வளரும்
ஆய்ந்துணர்ந் தறிந்திடும் அறிவிலி யாக
அண்மிய தேர்தல்வெள் ளத்தில்
சாய்ந்திடும் நாணல் போல்தலை சாய்ந்தே
தன்னலப் பதர்களை தேர்ந்தாய்.

எத்தரும், சுயநலப் பித்தரும் எம்மை
ஏளன மாய்நினைத் தோரும்
குத்தகை "பார்" நகை மாளிகை
கொண்டவரும் எனப்பல பேர்கள்
மொய்த்தனர் ஈக்களைப் போலுனை உண்ணுயிர்
மூச்சாம் வாக்கினை நாடி
கத்திடும் தேர்தல் மழைத்தவ ளைகளை
காவல னாகவே தேர்ந்தாய்

விலைக்கு வாங்கிடும் கடைச்சரக்காநீ
வியத்தகும் மானிடன் உலகம்
நிலைத்திட உழைப்பெனும் மாபெரும் சக்தி
நிலைத்தவன் மற்றவர்க் கெல்லாம்
தலைமகன் நீ, உணர்ந் திடு, யினி யெவர்க்கும்
தலைகுனிந் தே புகழ் பாடி, தே
யிலை தளிர் களினால் மாலைகள் போட்டு
இளித்தவா யினி யாகாதே!

..1988 ஆகஸ்ட் மாவலி..

# புரட்சி மலர்கள் பூக்கட்டும்!

தெருப்பொறுக்கி நாய்களினும் கடையர் செய்த
சிறுசெயலை மன்னிப்போம்! மறப்போ மின்னும்
உருப் பெருக்கி காட்டுவதால் என்ன நன்மை
உண்டு? இவ் வுலகினரின் உள்ளமெலாம்
வெறுத்திகழ்ந்து நகைக்கின்ற நிலையைக் கண்டோம்!
வேறென்ன வேண்டும்புவி நமதுபக்கம்
உருக்குலைந்த எம்வாழ்வை செப்பனிட்டு
உறுதிகொண்டு உழைப்போமிங் குண்மைவெல்லும்!

சரித்திரத்தைப் பின்னோக்கிப் பார்ப்போமானால்
சத்தியமே ஜெயித்த தெனும் சான்று காண்போம்!
சிரித்தவர்கள் எப்போதும் சிரித்ததில்லை
தெரிந்த கதை, அழுதவரும் சிரிப்பதுண்டு!
பிரித்துவைத்து பகையூட்டி வாழ எண்ணும்
பித்தர்கள் இனங்கண்டோம்! பின்னுமென்ன?
சொரித்தவளை கூச்சல் இன வாதப் பேச்சு!
தோள்கொடுப்போம்! வருமிடற்கு துணிந்துநிற்போம்!

இருவிழிகள் நீர்சோர இரங்கற் பேச்சு
எவரெவரோ பேசுகின்றார், உலகின்கண்ணைத்
திரைபோட்டு மறைப்பதற்கு செய்யும் சூழ்ச்சி:
தெரியாதா? எங்களுக்கு: பலவிதத்தும்
பரிதாபத் துக்குரிய வர்களுக்கோ
பயனுள்ள செயல் ஏதும் செய்தாரில்லை
ஒருநீதி, எனஆள்வோர் பேசும் பேச்சில்
உண்மையில்லை என்பதனை உணர்வாய் தோழா!

பொய்த்தலைமை பூண்டறுத்து பொடிப்பொடியாய்
போமாறு புரட்சியெனும் வேள்விசெய்து
மெய்த்தலைமை தொழிலாளர் வர்க்கத்துள்ளே
வேண்டுமெனும் உணர்வோடு விரைந்தெழுவோம்!
செயற்றிறமை, மதிநுட்பம், தெளிந்தஞானம்
தொழிலாளர் தங்களுக்கும் உண்டு என்றும்
கைத்திறமை ஒன்றினிலே மட்டுமல்ல
கருத்தினிலே புரட்சிமலர் பூக்க வேண்டும்!

..1983..

# புத்தனுக்கோர் விண்ணப்பம்

போதிமரத் தூயவநின்
பொன்னடிக்கோர் விண்ணப்பம்
யாதுயிர்க்கும் தீதிழைக்கா
நின் கருணை மனத்துதித்த
தீதறு நற் கொள்கையெலாம்
செகத்தோரின் உளங்களிலே
சோதிமணி விளக்கெனவே
சுடர் விட்டு ஒளிவீச

எண்டிசையும் மன்னவர்வந்து
இருதாள் வணங்குகின்ற
மண்டலத்தை ஆள்கின்ற
மணிமகுடம் தனைத்துறந்தாய்!
தொண்டுபுரிந் தேழைகளின்
துயர்துடைக்க மக்கள் மனம்
மண்டுமிருள் மயக்கறுத்து
மணிவிளக்கை ஏற்றிவைத்தாய்!

அன்பு எனும் நீருற்றை
அனைவருக்கும் சலியாது
என்புருக வாரிநிதம்
நிறைத்தாய் உயிரினங்கள்
தென்பில் நிலைத்திருக்கும்
திருக்காட்சி கண்டுமனம்
இன்புற்றாய் அந்நிலையே
இன்பமுறும் சொர்க்கமென்றாய்!

நீகண்ட கனவெல்லாம்
நிச்சயமாய் இந்நாட்டில்
தான் தோற்றுவிட்டதையா
தர்மத்தின் உறைவிடமே!
நாணின்றி நின்பெயரை
நாளெல்லாம் கூவிவிட்டு
தீநின்ற நெஞ்சினராய்
தீங்குபுரி வோர்மிகுந்தார்!

வஞ்ச நெருப்பினையே
வைத்தொருசார் மக்களினை
நஞ்செனவே வெறுக்கின்றோர்
நாட்டின் தொழுநோயாம்!
பஞ்ச சீல நெறிதனையே
பற்றும் மனிதரிங்கு
பஞ்சமோ நின்திருவாய்
பகர்ந்த மொழிகளெல்லாம்?

மன்னுயிரும் தன்னுயிராய்
மதிக்கின்ற வான்கருணை
நின்னுடைய மனம்: இங்கோ
நின்பெயரைத் தினங்கூறி
தன்னலத்தை வளர்த்திடுவார்
சான்றோராய் நடித்திடுவார்!
உன்புனித கொள்கையெலாம்
உடைப்பினிலே போட்டிடுவார்!

தேனீயாய்ப் பாடுபட்டு
சேர்த்துள்ளச் செல்வமெல்லாம்
கேள்விகள் இன்றி கொள்ளை
கொண்டார் கொடுமைமிக்கார்!
பால்மணம் மாறிடாத
பாலகர் தமையும் கொடு
வாள் கொண்டு தாக்கினார்கள்
வன் கொடுமையாளர்கள்!

சட்டங்கள் இருந்தும், நீதிச்
சபைகள் தாம் இருந்துமென்ன?
துட்டரின் செயல்கள்தான்
தொடர்ந்தன நாட்டில் இன்று!
பட்டங்கள் பெற்றோர் உயர்
பதவியில் இருந்துமென்ன?
கொடிய எங்கள் செந்நீர்க்
குருதிதான் ஓடக்கண்டோம்!

புத்தனே, நின்கருணை
பொய்கைதான் வரண்டுப்போச்சோ?
நித்தமும் கருணை, அன்பு
நீருற்றி நீவளர்த்த
சத்திய விருட்சம் மண்ணில்
சாய்ந்ததோ? மனுக்குலத்தின்
உத்தமா! நினது செவ்வாய்
உரைத்த பொன்மொழிகளெல்லாம்

இத்திரு நாடதனில்
ஏட்டினில் சுரைக்காய் ஆச்சே!
பத்தரை மாற்றுச் செம்பொன்
பரிதியாய் மீண்டுமிந்த
நித்திலக் கோர்வையன்ன
நீள்புகழ் ஈழமண்ணில்
உத்தரிப் பாயிங்குள்ளோர்
உள்ளந்தான் புனிதம்காண!

..1983 செப்டம்பர்..

# சித்தார்த்தன் செப்புகின்றான்!

போர்வழி யொன்றே நேர்வழி யென்று
பொங்கி யெழுந்த அசோகன்
சீரிய எனது போதனை கேட்டே
தூயஅன் பாளனாய் ஆனான்.
வாரிதி சூழும் மானிலம் பலவென்
மாண்புறும் சீலமைந் தேற்று
நேர்மையும் நீதியும் நெகிழ்வுறும் அன்பும்
நெஞ்சில் நிறைந்தவராக

வாழ்ந்தனர் முன்னாள், மகிழ்ந்ததென் நெஞ்சம்
மானிலம் பயனுறும் என்றே:
"ஆழ்ந்தபே ரன்பே அடித்தளம், வாழ்வின்
அளப்பரும் மாபெரும் சக்தி:
சூழ்ந்த பேரிடர்கள் யாவையும் வென்று
துலங்கிடும் அணையா ஜோதி!"
வேந்தனாய் பிறந்தும் யாவையும் துறந்தமெய்
வேட்கையில் பிறந்தவென் கொள்கை!

முத்தா ரத்தின் முன்னின் றொளிரும்
முழுவை ரம்மெனும் ஈழம்
கத்தும் கடல்சூழ் கவின்திரு நாட்டில்
கணக்கிலா கோயில்கள் எனக்காம்
நித்தமும் நியமம் நிஷ்டைகள் பூசை
நிகழ்த்துவர் ஆயினும், மக்கள்
சித்தத்தில் எனக்கோர் சிறிதெனு மிடத்தை
தேடுகின் றேனிலை யந்தோ!

ஆசையும் சூதுபொ றாமையும், காமம்
ஆணவம், கொலைவெறி, களவும்
நீசச் செயலும் நிறைந்துள நெஞ்சி லென்
நெறிகளுக் கிடந்தான் ஏது?
வேசம் போட்டே என்னடி யார்போல்
விளைத்திடும் தீமைகள் கோடி!
நாசம் புரிந்திடு வோரே இனியு மென்
நாமம் உரைத்திடல் வேண்டாம்!

பெறுதற் கரிய உயிர்களைப் பறித்தபின்
பெண்டிர் மானம் போன பின்:
சிறுமதி யாளர்கள் செய்ததிக் கேடென
செப்புகின் றீரே, உலகம்
வெறுத்திடும் தீமை விளைத்திடும் போது
வேடிக்கைப் பார்த்திருந் தீரே!
பெருந்தீ பரவிட நெய்வார்த் தின்று
பேசிடு கின்றீர் நீதி!

ஒருபுறம் கொலைவெறித் தாண்டவ மாடி
உயிர்களைப் பலிகொளும் வேளை
மறுபுறம் எனக்குத் திருவிழா! எந்தன்
மனதைப் பிழிகிற தையோ!
தெருதோறும் ஆடலும், பாடலும் மக்கள்
திரண்டெழும் ஆனந்த கோஷம்
இருசெவி களிலும் கேட்டிடும் போது
ஈட்டியாய் நுழைகிற தையோ!

வள்ளுவன் என்றொரு ஞானத் தமிழன்
மாணிக் கத்திரு வாசகன்
தெள்ளிய தமிழில் தேனிசை மழையாய்
தேவா ரம்அருள் மூவர்
அள்ளும் கருணை அன்பின் கடலாம்
அருளின் வடிவாம் இயேசு
விள்ளும் புனித குர்ஆன் தந்த
மேலோன் முகம்மது நபியும்,

எத்தனை எத்தனை ஞானிகள் மாந்தர்
இன்புறும் நெறிகளை படைத்தார்
இத்தனை பேர்களும் உரைத்தவை விழலுக்
கிறைத்தநீர் போலது வாச்சே!
சத்திய நெறியின் கழுத்தினை அறுத்து
தார்மீகம் பேசிடு கின்ற
பித்தரைக் கண்டே நாணுறுகின்றேன்
பின்னையும் என்பெயர் கூறேல்!

ஞானப் பயிர்தான் செழிக்கும் பாரத
நாட்டிடைப் பிறந்தஎன் கொள்கை
சீனத் தவர்பர் மாஜப் பான்முதல்
தென்கிழக் காசியா வெங்கும்
வானத் தருவென வளர்ந்தது அந்நாள்
வையஞ் சிறக்குமென் றிருந்தேன்
ஈனச் செயல்களென் றென்னால் இகழ்ந்தவை
யாவுமே இன்றுகைக் கொண்டார்!

போதி மரங்கள் எங்கும் வளர்ந்த தென்
போதம் வளர்ந்திட வில்லை:
மாதந் தோறும் விழாக்கள் மக்கள்
மனங்களில் விளக்கம் இல்லை
வீதிகள் ஓரம்என் வாழ்க்கை விளக்கம்
விளம்பரம் தோரண கோலம்!
கோதிலென் நெறிகள் குப்பையில் நீதி
குலைந்தது, வெறுமைக் கோலம்!

கணக்கிலா போதம் உள்ளக்
கருத்திலோ பேதம், நாளும்
தனத்திலே மோகம், நெஞ்சத்
தடத்திலே இரத்த தாகம்,
மனத்திலே அன்பு இல்லா
மானிடப் பதரே! கேளீர்!
எனக்கினி விழாக்கள் வேண்டாம்
ஏமாற்றும் பூசையும் வேண்டாம்!

# எங்கும் இறைவன் எழில் வண்ணம்!

காலைக் கதிரின் ஒளிக்கிரணக்
கைகள் மண்ணைத் தழுவுகின்ற
கோலங் காணும் போதிலுளங்
கொள்ளும் மகிழ்ச்சிக் கீடுண்டோ?
ஞாலப் பெண்ணின் உடலெங்கும்
நாளின் தலைவன் கைவண்ணம்!
ஏலு மட்டும் அனுபவிப்பாய்
என்ன நட்டம் உனக்கிங்கே?

அந்திச் செவ்வான் மலைமுகட்டில்
அமரும் பரிதிக் கவின்காண
இந்த இருகண் போதாவோ?
எத்தனைக் கண்கள் வேண்டுமடா!
சிந்தை முழுதும் பேரின்பம்!
சுகமோ உடலின் அணுவெங்கும்
எந்தப் பொருளின் வடிவினிலும்
இறைவன் உள்நின் றொளிர்கின்றான்

பாடும் பறவைக் கூட்டங்கள்
பாய்ந்து செல்லும் மிருகங்கள்
ஓடும் நதிகள், உயர்மலைகள்
ஊஞ்சலாடும் மேகங்கள்
ஆடும் மரங்கள் செடிகொடிகள்
அருவி சுனைகள் பொழில்கள்தன்
ஊடும் இறைவன் எழில் வண்ணம்
உணர்வாய் உனக்கீ டெவர்சொல்வாய்

வீசும் தென்றல் மென்மையிலும்
மோதும் புயலின் வன்மையிலும்
ஓசையிட்டு பெருக் கெடுத்து
ஓடும் ஆற்றின் ஒலியினிலும்
பேசும் மாந்தர் இதயத்தே
பிறக்கும் எந்த சொல்லினிலும்
ஈசன் குரலே கேட்பர்யேல்
இன்பம் அதுபோல் ஏதுண்டோ?

எண்ணத் தொலையா விண்மீன்கள்
எழிற்கண் சிமிட்டில் இரவுப்பெண்
வண்ணத் துகிலின் கருநீல
வனப்பில் வெள்ளித் தட்டேந்தி
உண்ண வெண்ணெய் கட்டிதனை
உலகின் மாந்தர் எவருக்கும்
விண்ணில் எடுத்து வரும்பாங்கில்
மேலாம் பொதுமை நிலைகாண்பாய்!

..1982 ஜனவரி..

# எது கவிதை?

ஒரு கோடி கவிதைகள் படைத்தென்ன வாழ்வினில்
உழைப்பவன் இதயம் பொங்கி
வருகின்ற உணர்வுகள் வடிக்கின்ற கண்ணீர்கள்
மனத்தினில் நினையா ராகி
பொருள்கோடி வருமென்று சதையுணர்வை தட்டிவிடும்
புண்கவி படைப்பின்: இவை
தெருக்கோடி சந்துகளில் சேர்ந்திடும் குப்பைகள்
சுவைத்திடா அழுகலென்பேன்!

உரிமையற் றொருகூட்டம் ஒடுக்கியும் அடக்கியும்
உதாசீனப் படுதல் கண்டும்
சிறுமைகள் உற்றென்றும் அடிமைகள் போலவே
சீவனை இழத்தல் கண்டும்
தெருநாய்கள் ஓசையில் திகம்பரக் கவிதைகள்
தினந்தினம் எழுதின் இவை,
பெருஞ்சாக்க டையில்வரும் மலத்தினில் நெளிந்திடும்
புழுக்களென் றேசொல்லுவேன்!

சாதியின் பேராலும் சமயத்தின் பேராலும்
தாங்கொணா கொடுமையுற்றும்
நாதியற் றேவெறி நாய்களால் கடிபட்டு
நாள்தோறும் இறத்தல் கண்டும்
நீதியும் சட்டமும் ஒருபக்கம் சார்தலை
நித்தமும் கண்டும், உடல்
பாதியாய் காட்டுமிளம் பாவையைப் பாடின் இவை
படர்நச்சுப் பாசியென்பேன்!

தார்மீகப் போர்வையால் மதவெறி மிஞ்சிடும்
தன்முகம் மறைத்துக் கொண்டு
போர் வெறி மீறிடும் உள்ளத்தை சமாதானப்
பேச்செனும் திரையில் மூடி
சீர்மிகும் வாழ்வினை, சிதைத்திடும் கொடுங்கோலின்
தீமையைப் பாடிடாது.
வார்தனக் கன்னியின் வடிவினைப் பாடின், இவை
பிணத்தினும் கேடுயென்பேன்!

தோழமைக்குள் வாழ்ந்தவரை சூழ்ச்சியில் பிரித்திவர்க்குள்
தீர்ந்திடாப் பகைமை யூட்டி
வாழ வழி ஏதுமிலா வறியவரின் உணர்வினிலே
வஞ்சத்தை நாளும் ஏற்றி
ஆளநினைக் கின்றசர்வ அதிகாரக் கும்பல்களின்
அராஜகப் போக்கை கண்டும்
காலழகும் மேலழகும் காட்டுமிள நங்கையரின்
கவின் பாடின் சீ! ச்சீ! என்பேன்

“சதையை துண்டுதுண் டாக்கினும் ஜீவனோ
சாயாது” எனும் பாரதி
கதையைநீ தெரிந்தவன் காட்டிலும் மேட்டிலும்
கயவருக் கஞ்சி ஓடி
வதையவும் அன்னையின் மாண்பெலாம் வீதியில்
வஞ்சரால் அழிதல் கண்டும்
எதையெதையோ கவிதையென எழுதியே இன்பத்தில்
என்றும் திளைப்ப தோநீ!

அறம்பிழைத்த மன்னர்தமை அஞ்சிடா தவையினிலே
ஆட்சி முறை வகுத்துக் கூறி
திறம் பிழைத்த மக்கள் மனம் செம்மையுற வாய்மைமிகும்
செந்தமிழில் கவிதை பாடும்
உரம்மிகுந்த கவிஞர்களின் உறவினனென் றாவினியுன்
உள்ளத்தில் உரிமை வேட்கைக்
குரல்கனன்று தீப்பிழம்பாய், கொதித்துவர, கவிதொடுத்து
கொடுமைக்கு முடிவு கட்டு!

**..1987 மக்கள் மறுவாழ்வு மலர்05..**

# பண்பாடும் உள்ளம்!

சோலைக் குயில்களெல்லாம்
சுந்தரப்பண் பாடி, எனை
ஞாலம் புகழ் தமிழில்
நற்கவிதை பாடெங்கும்,
மேலைத் திசையினிலே
வீழ்பரிதி, செவ்வானின்
கோலம் எனைப்பார்த்து
கெஞ்சும் கவியெழுத!

கண்சிமிட்டும் தாரகைகள்
காலைக் கதிர்சிந்தும்
பொன்துகள்கள், பூந்தென்றல்,
பூம்பொழில்கள், குளிர்பொய்கை
விண்முட்டும் மாமலைகள்
விசையருவி, சிற்றாறும்,
என்நெஞ்சை தொட்டிழுத்து
"இன்கவிதை பாடெ"ன்கும்!

கண்பார்க்கும், இயற்கை எழிற்
காட்சியெலாம், எனைப்பார்த்து:
பண்பார்த்த தமிழினிலே
பாடு கவி பாடெ" ன்கும்
மண்படர்ந்த பசுமை எழில்
மரகதப்பாய் விரித்திருக்கும்
பொன்படர்ந்த வளவயல்கள்
"புதுக்கவிதை பாடெ" ன்கும்!

இயற்கை எழில் யாவும்
　　　“எனைப்பாடு, பாடெ”ன்கும்
வியர்வை வழிந்தோட
　　　மேனி உழைப்பினையே
அயராது நல்கும் தொழி
　　　லாளர் நிலைகண்டு,
புயலாய் எனதுள்ளம்
　　　புரட்சிப்பண் பாடிடுமே!

சேற்றில் தினமுழன்று
　　　செந்நெல் பயிர்விளைத்தும்
ஈற்றில் பயன் காணா(து)
　　　ஏங்கும் உழவன் நிலை
மூட்டை பலசுமந்து
　　　முதுகெலும்பு கூனான
பாட்டாளித் துயர்கண்டே
　　　பாடும் உள்ளம் கோடிகவி!

வண்டி இழுத்திங்கு
　　　வதைப்பட்டு வாழ்வோரை
நொண்டி, முடம், ஊமை
　　　நோயுற்றோர் தம்மையெலாம்
கண்டு இதயத்துள்
　　　கனன்றெழும்பும் தீப்பொறியாய்
எண்டிசையுந் தொழிலாளர்
　　　இடரொழிய கவிபாடும்!

குன்றின் அடியில் லயக்
　　　கூடச் சிறைகளிலே
என்றும் அடிமைகளாய்
　　　எவரெவர்க்கோ நிதமுழைத்து
குன்றாய் பொருள் குவித்து
　　　கொடுத்தும் வறுமையிலே
நின்று, தவிப்போரின்
　　　நிலையுயர கவிபாடும்!

..1987 ஜனவரி..

# ஆடி வாராய்!

தென்றலில் தளிர்கள் ஆட,
சேயிழை ஆடை, ஆட
பொன்றளிர் இடையில் பூவைப்
பொன்வளைக் கரங்கள் ஆட,
இன்றிவர் துன்ப மெல்லாம்
இரவிமுன் பனிபோல் ஓட,
குன்றுடைப் பெண்ணே, கைகள்
கொட்டி கொட்டி ஆட வாராய்!

தண்புனல் ஊற்றெடுக்கும்
சரிவினில் தளிர்கள் ஆய்ந்து
கண்புனல் சொரிய, நெஞ்சின்
கனலினில் உருகும் மலைப்
பெண்களின் துன்பமெல்லாம்
போய்த் தொலைந் திடவே புதுப்
பண்ணிசைத் தெம்மையே மாற்றும்
பதர்ஓட ஆடி வாராய்!

பொன்முகம் நகையில் லாடப்
பேச்செலாம் கவிதை பாட,
விண்மதி யாட மேடை
விரித்திடும் மேக மாட
பொன்மணி கழுத்தி லாட
புத்தொளி விழியி லாட
என்மலைப் பெண்ணே, தமிழ்
இசை பாடி ஆடி வாராய்!

கூடையோ முதுகில் ஆட,
குளிர்ந்தமென் னுடலோ குளிர்
வாடையில் ஆட, கால்கள்
வைத்திடும் அடிபெ யர்த்து
கேடெலாம் ஓட ஏற்றிக்
கிளர்மொழி? புரட்சிக் கீதம்
பாடிநீ யாடி வாராய்
பசும்மலை யகத்துப் பாவாய்!

..1990..

# காலமே உனது கணக்கை நிறுத்தி வை!

காலமே, எனக்குநீகாவலன் உனது
கடமையைச் செய்யும் ஏவலனாக
ஞாலம் பொலிவுற, நாளுஞ் செந்தமிழ்
நற்கவி பாடிடும் குறிஞ்சிப் பாவலன்
காலைப் பரிதியின் கதிரொளி எந்தன்
கண்ணில் சுடர்விட காண்பவை, என்மன
ஆழத்தே உணர்வுக் கனலாய் மூண்டெழும்
ஆம், கவிதைப் பிழம்பென வெளிவரும்!

பொய்மைக் காட்டைப் பொசுக்கித் தீயவாம்
புன்மைக் கயமைகள், பெருவிட அரவுகள்
வெம்மைத் தீயினில் வெந்து கருகிட
மேலாம் அன்புப் பயிர் தழைத்திட
செம்மை அறங்கள் செழித்து வளர்ந்திட
தீந்தமிழ்க் கவிதை நீரினைப் பெய்திட
என்னை உனது கருவியாய் கொண்டாய்
எனது கையினில் எழுதுகோல் தந்தாய்!

ஆயினும் எந்தன் பணியினில் நிறைவு
அடைந்தனோ இலை: முன்னவர் எத்தனை
ஆயிரம் ஆயிரம் கவிதைப் படைத்தனர்
ஆம், பயனிலோ அமைதி காண்கிலர்.
தாயினும் சாலப் பரிவு காட்டியே
சமூகம் மேலுறும் வழிகள் காட்டினர்
தூய அவர்களின் சிந்தனை மலர்ந்த
தெய்வப் பாடலும் மாற்றம் காண்கில!

சங்கப் புலவரும் சமயக் குரவரும்
        சாத்திர வேத புராணக் காரரும்
இங்கெம் பாரதி, பாரதி தாசனும்
        இன்னும் எத்தனை அறிவுச் செல்வரும்
மானிட உணர்வுக் காய்நெறி வகுத்தனர்
        வையம் செழிப்புறும் பணிபல செய்தனர்
சாணள வேணும்எம் குணத்தில் மாற்றமோ
        தான் இலை யேஇது உனது தவறா?

புரட்சி மணங்களை புவியில் தூவிய
        பாரதிப் பூவோ பாதியில் உதிர்ந்தது
வரட்சி யுற்ற உனது மனத்தின்
        வர்மமோ? கவிஞனில் வைத்த கோபமோ?
கருணை வடிவாம் காந்தியை உந்தன்
        கரத்தில் அணைத்துக் களித்தாய் இதுஉன்
பெருமையா? அல்ல, உன் பேதமைச் செயலா?
        பேசு, காலமே! உன் கணக்கில் பிழைத்தாய்!

இந்த மலையக மண்ணின் உயிர்ப்பாய்
        இயங்கும் மானிடப் பயிர்கள் என்றும்
சுதந்திரக் காற்றும் சுபீட்ச ஒளியும்
        நிரந்தர மற்று நீளிருட் குகையுள்
வதைபடும் அவல வாழ்வினில், ஒளியை
        நிரந்தர மாக்கி, நினையும் செயலும்
ஒன்றாய் கலந்து உணர்வு திரண்டு
        கவிதைப் பிழம்பாய் கனிந்திடும் போது
காலமே உந்தன் கணக்கை நிறுத்தி வை
        கவிஞனின் வாழ்வின் கணக்கை கூட்டி வை!

**..1994..**

# காலம் வென்ற கவிமகள்

பவளம் பதித்த இதழாளே
பாகில் தோய்த்த மொழியாளே!
குவளை மலர்ந்த விழியாளே!
கொண்டல் படிந்த குழலாளே!
அவலம் படிந்த வாழ்வெனும்
அன்னாய் உந்தன் அருளாலே
கவலை யற்றுப் பறவையென
கானம் பாடி மகிழ்ந்திடுவேன்!

பாவும் பாவின் இலக்கணமும்
படியா எனையும் பரிந்தணைத்து
நாவிற் கவிதை நடம்புரிய
நாலு கவியின் இயல்பினையும்
பூவின் மணமாய் உள்ளத்தில்
புரிய வைத்தே எழுதுவித்தாய்
தாவும் எந்தன் கவிப்பூக்கள் எண்
திசையும் பரவி மணங்கூட்டும்

கூட்டும் பொருளும் கேடிழைக்கும்
கூடா நட்பின் கூட்டம் போல்
ஈட்டும் பொழுதே எங்கெங்கோ
ஏகும் வறுமை இருள்சூழ்ந்து
வாட்டும் அதனுள் ஒளிக்கீற்றாய்
வழியை உந்தன் கடைக்கண்ணோ
காட்டும் யானோ நடக்கின்றேன்
கவலை இல்லை கலைமகளே!

கவிதா எனநீ கேட்பது என்
கருத்தில் ஒலிக்கும் போதே நான்
தவிப்பேன், துடிப்பேன், எனையுமோர்
தாயே! பொருட்டாய் கொளல் நினைத்தே:
புவித்தாய் குளிரும் மழையாய் நின்
பொற்பா தத்தில் பூச்சரமாய்
சுவைத்தே னாக கவித்தேனை
சொட்டாய் அல்ல சொரிந்திடுவேன்!

அரசும் முடியும் வெண்குடையும்
அகிலம் அஞ்சும் படைவலியும்
முரசும் கொடியும் இருந்தாலும்
மூவா அறிவின் துணையில்லோர்
திறலும் விரலும் செங்கோலும்
தேயும் குறளின் செம்மொழியாம்
நிறையும் நெஞ்சத் தறிவொன்றே
நிலத்தில் அழியா பெருஞ் செல்வம்!

நிதியோ கோடி கோடி யென
நிதமும் குவித்து வைத்துள்ளோர்
துதிகள் பாடிப் பிழைப் போரும்
தொண்டு செய்யும் அடிமைகளும்
கதையாய் வாழ்வு முடிந்த பின்னே
கருத்தில் நினையார் கலைமகளின்
பதமே பெற்றோர் புகழ்பெறுவார்
பாரில் இறந்தும் உயிர்வாழ்வார்!

மறைநான் கினது கருப் பொருளும்
வுளமார் குறளின் உயிர்ப் பொருளும்
உருள்மா வையம் உய்வதற்கே
உனது செவ்வாய் மலர்ந்தவைகள்
பிறையின் நுதலாய் வெள்ளன்னப்
பேடே படைப்போன் முதலோர்க்கும்
இறையே! இனிமைச் செந்தமிழின்
இயலே! கூத்தே! ஏழிசையே!

இயலா மனத்தை இயக்கியுந்தன்
எழில்சேர் பாதத் தினையெந்தன்
மயல் சேர் நெஞ்ச மீதிருத்தி
மருளாம் இருளை நீக்கிமன
வயலில் அருளை மழையாக
வர்ஷித் தாய்நான் மறையரசி!
கயல் சேர் பொய்கைக் கமலத்தின்
திருவே உந்தன் கழல்மறவேன்!

மறவா துணையென் மனத்தவிசில்
வைத்தே தொழவும் வையமெலாம்
இறவா புகழ் சேர் பைந்தமிழ்மின்
இயலாம் கவிதை கோடியென
இறைவீ உந்தன் இணையடியில்
என்றும் தூவி பணிந்திடுவேன்!
பரவிப் பாடி புகழ்ந்திடுவேன்
பாணேர் வெண்மைப் பசுங்கிளியே!

பொன்னும் பொருளும் புவியாளும்
போகம் வந்தின் புற்றாலும்
அன்னாய்! எனக்கு நீ தந்த
அருளுக் கிவைகள் ஈடாகுமோ?
மன்னும் உயிர்கள் உள்ளவரை
வளஞ்சேர் தமிழில் அடியேனும்
பண்ணும்க விதைப் பொருளெல்லாம்
பகரும் உந்தன் பால் மணத்தை

பகலும் இரவும் இலையென்றால்
பாரில் நாளில் மதிப்பென்ன?
புகழும் இகழும் இலையென்றால்
புவியில் பிறப்பின் பொருளென்ன?
திகழும் அறிவுச் சுடரெந்தன்
சிந்தை வானில் ஒளிவிடுங்கால்
சுகமும் துயரும் ஒன்றாம் பூஞ்
சோலை வாழும் சுகவனமே!

வாழும் வகையை அறிவித்தே
வஞ்சம் கரவா மனந்தந்தாய்
சூழும் மாயை இருள்வென்று
சூழ்ச்சி வலைகள் தனையறுத்து
நாளும் வாய்மை வழிநின்று
நல்லோர் இணக்கம் மேற்கொண்டு
பாலின் சுவையாய் பைந்தமிழில்
பாக்கள் புனைந்தே பரவிடுவேன்.

..1991 இந்துகலாசாரம்..

# முப்பெரும் தேவிகள்

மலைமகள்

வெற்றி திருமகளே நெஞ்சில்
வீரந் தருபவளே!
சுற்றி வரும்பகை தூள் தூளாக்கியே
முற்றும் அழித்திடும் மோகன ரூபியே,
கற்றைக் குழலுமையே, - நீல
கண்டன் உயிர்த்துணையே!
செற்றலர் மூவெயில் பற்றி யெறித்திடும்
செஞ்சடை யோன்விழிச் சுடர்க் கனலாகிய - (வெற்)
தாயின் கருவினுக்கும் உயிரச்
சக்தி யளிப்பவளே
தீயின் சுடரென தோன்றும் விழியுடன்
தீயைக் காய்ந்திடும் - பார்மகளேயுமை - (வெற்)

மோனத் தவமியற்றும் - முனிவர்
மூச்சில் உறைபவளே
தேன்தமி ழிசையுடன் பாடல் பொழிந்திட
'ஞானக்' குழந்தைக்கு பாலினை யூட்டிய
சக்தியென் றேயுரைப்பார், - மனச்
சஞ்சலம் தீர்ப்பவளே
எத்திசை யிலுமுன் சக்தியிலாவிடில்
இவ்வுல குயிர்களின் இயக்கமும், இல்லையடி! - (வெற்)

அலைமகள்

செங்கமலம் மீதுறையும் தேவி புவிச்
செல்வமெல் லாமருளும் திருவே!
அங்கமெலாம் பொன்னுதிரும்
ஆனந்த மயிலே
தங்கமணி மார்பன் திருத்
தோளணையும் உயிரே - (செங்)
வாக்கிலும் மனத்திலும்
மதியிலும் குணத்திலும்
நோக்கிலும் வளத்தினை
நிறைப்பவள் நீயே! - (செங்)
ஊக்கம் உடையவர் பால்
உறைந்திடும் தாயே! உளம்

உறத்துதிப் பார்க்கே
உதவிடும் நீயே! - (செங்)
உழைப்பின் பயனாய்
விளைபவள் நீயே
உலகின் செம்மையில்
ஒளிர்பவள் நீயே! அறம்
பிழைத்தவர் பொருளெலாம்
போக்கிடுவாய்! வாய்மை
பிழையார் வறுமை போக்கிடுவாய் - (செங்)

கலைமகள்

கலைஞான வடிவான ராணி! உள்ளக்
கமலத்தி லேயமர்ந்து களிப்பூட்டும் வாணி!
நிலையான அருட் செல்வம், கல்வி, - இந்த
நிலத்திலுள் ளோர் எவர்க்கும்
தரும் ஞானச் செல்வி! - (கலைஞான)

குழந்தையின் முகம் போல் மலர்ந்த தாமரையில்
குலவிடும் நின்றன் கரத்தில் நான்மறை!
செழுங்கனி இதழ் திறத்தால் செந்தேன் மழையோ!
செங்கையின் யாழ்மொழியும் கான மழையோ!
(கலைஞான)
இசையும் கூத்தும் இயலும் இணைந்த
எழிலே இன்பத் தமிழே! உயிரே!
அசையும் காற்றின் ஒலியே! அகத்தின்
அன்பின் உணர்வே! அமுதே! கரும்பே!
(கலைஞான)
பளிங்காய் தெளிந்த புலவர்கள் நெஞ்சின்
பைந்தமிழ்க் கவியே கவியின் பொருளே!
விலங்காம் மனஇருள் விலக்கிமெய் ஞான
விளக்கினை ஏற்றும் வித்தகி நீயே!
(கலைஞான)
குயிலின் இனிமைக் குரலின் உயிராள்!
குழலின் நாதத்தில் குலவும் இசையாள்!
பயிலும் முத்தமிழ்ப் பாட்டின் சுவையாள்!
பாரதி யாள் ஞானச் சாரதி யாள்: தெய்வ
(கலைஞான)

# தீங்கவிப் பொருளானவள்

பார்க்க வி, பர மற்கொரு இட
பாகத் திஉயிர் யாவிலும்
தீர்க் மாயுறை கின்ற வள், எனை
செந்த மிழ்க்கவி யாத்திட
ஊக்கு விப்பவள் உணர்வெ லாங்கவி
ஒலிக்கும் சக்தியாய் உறைபவள்,
வாக்கி லும்என் மனத்திலும் உண்மை
வடிவ மாகிநி றைந்தாள்!

ஆக்கலு மதை காத்தலும் நலம்
அருளலும் பின் மறைத்தலும்
தீக்கன லென அழித்த லும்மறு
தோற்ற மாக படைத்தலும்
நோக்க மேசெயலாகக் கொண்டவள்
நித்தமும் இவள் பணிகளாம்
நாற்கவி யுந்தரும் நாமகளாய் என்
நாவி லுறைந்து பா நல்கு வாள்!

மும்மல இருளை தம்மருட் கண்ணால்
முற்றும் நீக்குவாள், அறுபகை
வெம்மிருகங்கள் உலவுங் காட்டையே
வெட்டி எரித்து தீய்ப்பவள்!
செம்மை அறங்களை போற்றும் மனங்களில்
சேர்ந்து நலங்கள் விளைப்பவள்
எம்ம னத்திலும் நின்று உணர்வெலாம்
இன்தமிழ்க்கவி யானவள்!

பொய்மை யுற்ற மனங்களை என்றும்
பொசுக்கு வாள், விழிப் பார்வையால்
மெய்மை அறங்களை பேணுவார் தமை
மேலு றும்படிச் செய்குவாள்
சேய்ய தானச ரோருகம் மேவி
திருமகளேனத் தோன்றுவாள்
துய்ய தான செந்தமி ழாகியென்
தீங்கவிப் பொரு ளானவள்!

அலைமக ளென வடிவந் தாங்கியே
ஆம், வளந்தரும் திருவினால்
கலையறிவுடன் மனந் தெளிவுற
கமல வெண்மலர்க் காட்சியாள்
மலை என உளம் நிலை தளர்ந்திடா
வலிமை தரும் அரி வாகனி
நிலைதளரினும் மனம் தளர்விலா
நெஞ்ச மேவிடும் நிரந்தரி!

பொன் மனத் தீ, மறை புகழ் மனத் தீ, யெமை
புரந்திடும் அருள் மனத்தீ!
இன்மனத் தீ, நலம் ஈ, மனத் தீ, இயல்
இசைமனத் தீ, நடத்தீ,
சின்மயத்தீ, சிவத் தீ, யாகத் தீ, யென்
செழுங்கவி யாரத்தீ!
என்மலத் தீயெனை எரிக்கா தருள் மழை
ஈந்திடும் குளிர் மனத்தீ!

விண்மலர்க் கானிடை தாரகைப் பூக்களில்
மிளிர்ந்திடும் ஒளிநிறத்தீ!
மண்ணுயிர் மலர்களின் வாக்கினில் வாய்மையாய்
மலர்ந்து சிரிப்பவளாம்
பொன்மணி ஆரமும் பண்மலர்த் தாரும்
பூட்டிய மார்பகத்தீ
என்கவிப்பாமலர் சூட்டி மகிழ்ந்திட
இசைந்திடும் எழிலரசி!

..1991 இந்துகலாசாரம்..

# நான்மறை பேசும் மெய்ப்பொருளே

சுவைநறுந் தேன்சொரி, புதுமல ரொளி விடும்
சகுணகம் பீரி, செவ் வதனி!
சிலை, அறு முகன்தனை அருள்சிவ காமி, நின்
திவ்விய பூங்கழல் துணையே!
எவரெதை வழிபடின் என்? அது அதுவாய்
இயங்கிடும் இயல்புடை தேவி!
அவை யிவை யெனும்பே தம்மொழித் துயிர்கள்
அனைத்திலும் தானென உயிர்ப்பாய்!

மழைத்தடங் கண்ணியென் மனத்தட திசைவளர்
வளர்ந்தரும் கற்பகத் தருவே!
கழைப் பசந் தோளீ! கனகப வாணி, பொற்
கதிர்ஒளி வீசிடும் மார்பீ!
அளிநிறை யகத்தி, யென் ஆணவ மழித்துன்
அடிமலர் யானுற அருளும்
நளினபொற் கொடியே! நவநிதிக் குவையே!
நற்றமிழ் கவிசொல வருளே!

பிறப் பிறப் பில்லா பெருநிலை யருளும்
பேரருட் சக்தி, செம் பொன்னிடு;
நிறத்தழல் மேனி நிறைந்தொளி வீசும்
நித்தில வடமது மின்ன
அறத்தவி சதனில் அமர்ந்துல காளும்
அங்கயற் கண்ணி யிவ் வுலகம்
புரந்தருள் தாய், என துணர்வினோ டொன்றி
பூந்தமிழ் கவிசொல வருவாளே!

சொற்பல வாகினும் பொருளது ஒன்றெனும்
தொன் மொழி தமிழதின் இயல்போல்
பற்பல பெயர்களில் அழைக்கினும் அப்பெயர்
அனைத்திலும் உயிர்ப்பவள் நீயே!
சிற்பர சொரூபினி சினமயா னந்தினி
திசைமுகன் படைப்பினுள் உயிரே!
நற்பொருள் மிகுகவி நலமெனக் கருளும்
நான்மறை பேசும் மெய்ப்பொருளே!

குவைநிதி சேர்த்துன் குளிர்மல ரடிவைத் (து)
கேள், எனின் மயங்கிடு பவளோ?
சுவை யொளி..முதலாம் புலன்க ளைம் பொறியும்
சுடர்விடும் ஓர்முனை கொண்டு
புவனலோ சனியுனை மனந்தகம் வைப்போர்
புந்தியி லுறைந்திடும் அனையே!
பலவினை யறுத்துமெய்ப பதமருள் தயாபரி!
பைந்தமிழ்க் கவியரு ளாயே!

..இந்துகலாசாரம்..

# கல்விக் கனிதரும் கற்பகம்!

சேலுறும் பொய்கைத் தாமரைப் பூவுறை
தேவி, நின் திருக்கர யாழின்:
ஏழிசை நரம்பில் எழுந்திடும் தேனார்
இசையினில் மயங்கா உள்ளம்:
பாழுறும் வெளியாய் பயனில வாகும்,
பார்முதல் பூதமைந் தண்டக்
கோளுடுக் கள்முதல் கதிர்மதி யாவும்
'ஓம்' எனும் நின் ஒலி வடிவாம்.

நேற்றா? நேற்றின் முதல்தின மா? இலை
நூறுநூா றாயிரம் ஆண்டா?
தோற்றம் அறியா தொன்மொழியாம் செந்
தமிழே மானிடர் உணர்வின்
ஊற்றுக் கண்ணாம், ஒளித்திரள் சேர்க்கையின்
முதற் சொல் லானவள் நீயே!
காற்றின் ஒலி வேய்ங் குழல் நுழைந்தோடின்
கானம், அது நின் குரலே...!

**வேறு**

செல்வத்தை உடையவரேனும்
திறல் படைத் தவர்க ளேனும்
உள்ளதை இழந்த போது
ஒருவரும் திரும்பிப் பாரார்
கல்வித் தெய் வத்தின் கடைக்
கண்ணருள் பெற்ற வர்தாம்
வெல்லுவார் உலகை தங்கள்
மேம்படும் அறிவி னாலே!

கல்வியே வாழ்வின் தேட்டம்,
மற்றெலாம் நீரின் ஓட்டம்,
கல்வியே மனித வாழ்வின்
கருந்தனம், வாய்மைமேவும்
கல்வியே தீமைக் கள்ளி
களைத்திடும் கருவி யாகும்,
கல்வியே அழியாப் புகழ்க்
கனி தரும் கற்பக மரம்!

கீழ்வான் சிவந்து வரக்
கிளர்ந்தெழும் பரிதி தோற்றம்
மாயிருள் அகற்றும், வையம்
மலர்ந்திட, மனித குலம்
வாழ்வாங்கு வாழ்ந்து, பிறர்
வாழ்வுக்குத் தீபமாகும்
நாலாயும் புலவர் நெஞ்சின்
நிமிர்ந் தெழும் அறிவின் தோற்றம்!

வெண்கம லம்போல் நெஞ்ச
மேடையை தூய்மை யாக்கி,
பண்பொழி கின்ற செவ்வாய்ப்
பசுங்கிளி பதுமத் தோனின்
பெண்திரு மயிலை, எண்ணெண
பெருங் கலை வடிவத் தாளை
பண்ணரங் கேற்றிப் பொன்னார்
பதத்தினைப் பணிதல் செய்வோம்!

..1995 கார்த்திகை அகிலம்..

# திருநாமம் என்றும் வாழும்!

திருமறையின் கருத்தெல்லாம்
செயல் வடிவில் உயிர்பெற்று
நிறைமதியாய் ஒளிவீசி மக்கள்
நெஞ்சமதன் இருள் கெடவே,
குரு நகரின் மதபீடக்
குருவாக பல்லாண்டு
திருவுடனே ஆற்றிய உம்
சேவையினை மறப்பரிதோ?

இனம் கடந்து மதம் கடந்து
இந்நாட்டு மாந்தர்களின்
நலன் கருதி நீர் புரிந்த
நற்பணிகள் சொல்வரிதோ
சினம் கடந்த நெஞ்சின ராய்
சிரித்திருக்கும் முகத்தினராய்! மக்கள்
மனம் நடந்த பேராயர்
மறைந்த தெங்கள் விதிவசமோ?

தொழிலாளர்க் கின்னலென்றால்
துடித்தெழுந்து குரல் கொடுக்கும்
தலைவனென முன் வருவீர்?
தன்னலத்தை சுட்டெரிப்பீர்!
வழியறியா வகையறியா
வாழ்வறியா பாமரர்க்கோர்
ஒளி வீசும் மெய்ச்சுடரே
உறங்கினையோ நீள்துயிலில்

பல்வேறு சமயத்தார்
பல்வேறு கருத்துடையார்
எல்லோரும் மதிக்கின்ற
இனிய மனத் தூயவனே!
உள்ளூறும் உணர்வெல்லாம் -மக்கள்
உயர்வுக்கே உரமாக்கி
சொல்லும் செயலாலும்
தூய மறை நெறியற்றி

செல்லுமிட மெலாம் ஓர்
தேவனெனக் காட்சி தந்த
நல்லொளியே! நாயகமே!
நந்தா மறை விளக்கே!
கல்லான மனங் கூட,
கனிந்துருக கருணைமழை
எல்லோர்க்கும் பொழிமுகிலே!
எங்கே நீர் போய் மறைந்தீர்?

தேவனது சந்நிதியில்
சென்ற சில மாதங்கள் (முன்)
நாம்பட்ட பாடெல்லாம்
நயந்துரைக்க சென்றீரோ?
காம்பறுந்த பிஞ்சுகளாய் - புயற்
காற்றினிலே, மக்களுடல்
பூவிதழாய் உதிர்ந்த நிலை
பொறுக்காது விண்ணரசின்
காவலனுக் குரைத்திட நீர்
கடும்பயணம் சென்றீரோ

உடலினால் பிரிந்தீர் எங்கள்
உணர்வினில் கலந்தர்! நேரும்
இடரினைத் துயரை என்றும்
எதிர்படும் பகையை நாமே
இடறுவோம், உமது நாமம்
எம்மையே வழிநடத்தும்!
திடங்கொள்வோம், எங்கள் செயற்
துளியெலாம் உம்பேர் கூறும்!

கடலுடன் விண்மீன் மதியென்று
காற்றுடன் கனல் நீர் மண்ணும்
படர்வெளி பரிதி யோடு
பாருள வரைக்கும், எங்கள்
உடம் பொடு உயிர்த் துடிப்பு
உள்ள நாள் வரைக்கும், அன்பு
சுடர்மணித் துயர், ஆயர்
திருநாமம் என்றும் வாழும்!

..1984 பெப்ரவரி..

# “சரத்” எனும் பெயர் சரித்திரமாக வாழும்!

உழைப்பவர் குரலாய் ஓங்கி ஒலித்த
ஒரு குரல் ஓய்ந்ததே! உயர்ந்த
மலைகளில் வாழும் மக்களின் நெஞ்சம்
வடித்திடும் உணர்வின் ஊற்றே!
இனவெறி மிக்கோர் இருந்திடும் மன்றில்
எழுந்திடும் துவேஷ நெருப்புக்
கனல்நடு வினிலும் நீதியின் கூராய்
தனியொரு வனாய்நீ ஒலித்தாய்!

பாட்டாளிகளின் கூட்டா ளியென
பகல்வே டம் இடும் பேர்கள்,
மூட்டிய வெறித்தீ மூண்டெழுந் துயிர்களை
முற்றாய் அழித்திடும் வேளை
நீட்டிப் படுத்து நின்துயில் கொண்ட
நீசரில் நீயொரு புனிதன்
காட்டிய பரிவும் கனிந்தஉள் ளன்பின்
கருணையை நாம் மற வோமா?

இடையில் உடைதான் நழுவிடும் போது
இருகை உதவிடல் போலும்
இடருறும் போது உதவிடும் பண்பு
இலங்கிடும் உயர்ந்த நெஞ்சம்
படர்ந்திடும் விடநோய் இனவாதத்தை
பரப்பிடும் பேர்களின் நடுவே
தடுப்பதற் கொருவன் நீயென இருந்தோம்
சதிசெய் ததேவிதி யந்தோ!

தார்மி கத்திரை மறைவினில் அதர்மம்
தலைவிரித் தாடி இங்கே,
பேரிகை கொட்டி பெருங்களிப் போடு
பேயாய் அலைந்திடும் போதும்
ஓரினம் மற்றோர் இனத்தினை அழிக்க
உவகை யுற்றிடும் போதும்
ஊரினை காக்கும் உரிமைகொண் டோர்கள்:
ஊமையாய் மாறிய போதும்,

கரவினை நெஞ்சில் கடல்போல் தேக்கி
கனிவுரை பேசி, ஏ மாற்றும்
பிரபலங் கள்பெரும் போலிகள் பொய்யர்
பேரின வாதிகள் உலவும்
அரசியல் வானில் துருவதா ரகையாய்
அமைந்தொளி விசிய நீயோ
மறைந்தனை எங்கள் மனங்களில் வீழ்ந்த
மாபெரும் பேரிடி யந்தோ!

இனமத பேதமின்றி
இங்குள்ள பாட்டாளிகள்
மனங்களில் நின்பெயர்தான்
மறையாது வாழும், தொடர்
பணியெலாம் நினது எண்ணம்
பரவிடும்! பொதுமை மேவும்
நனிமிகும் உலகம் எல்லாம்
நண்பா நின் பேர்தான் வாழும்!

..1986 மே கொந்தளிப்பு..

தொகுப்பு - சாரல்நாடன்

# மலையெலாம் உனது குரல் மங்காது ஒலித்திருக்கும்!

பொங்குதமிழ் மணக்கின்ற
புசல்லாவை மாநகரில்
செங்கதிரோன் உதித்ததென
திருவுடனே பிறந்தவனாம்
தங்கமகன் இராஜலிங்கத்
தமிழ்மகனாம் இங்கிவன்பேர்
பொங்கிவரும் மாவலிபோல்
புகழ்பூக்க வாழ்ந்திருக்கும்!

ஊற்றெடுத்து மலைமடியில்
ஓசையிட்டு பாடிவரும்
ஆற்றொலியில் நின்னுடைய
அழகுதமிழ் ஒலித்திருக்கும்
காற்றினிலே மிதந்துவரும்
கனகமணி ஓசையிலும்
நாற்றெடுத்து வயலினிலே
நடுகின்ற மங்கையரின்
பாட்டொலியில் பிறக்கின்ற
பைந்தமிழ்போல் வாழ்ந்திருப்பாய்!

கல்விக்கண் இல்லாது
காலமெல்லாம் மலையகத்து
செல்வங்கள் குருடர்களாய்
சீர்கெட்டு வாழாமல்
நல்லறிவு பெற்றவராய்
நற்கலைவல் லுணராய்,
கல்விவிளக் கேற்றிவைத்தாய்
'கலாசாலை சரஸ்வதி'யில்

சொத்துசுகம் தேடாது
தொழிலாளர் நலமொன்றே
சொத்தாக எண்ணியவன்
தொழிலாளர் தங்களையே
விற்றுப் பொருள் சேர்த்த
வீணரிடை நீ மனிதன்
புத்துணர்வுப் பூ மலர
புதிய விதை போட்டவன் நீ

சத்தியமே உருவெடுத்த
தனித்தலைவன், காந்திவழி
நித்தம்மற வாதுழைத்த
நேயன், மலை யகத்தவரின்
சித்தமெலாம் நிறைந்தவனே உன்
திருவுடல்தான் மறைந்தாலும்
உத்தமனே உனதுகுரல்
ஒலித்திருக்கும் மலைகளிலே.

..1983 பெப்ரவரி குன்றின்குரல்..

தொகுப்பு - சாரல்நாடன்

# எழுச்சித் திருநாள்!

கெடுமதி யாளரின் கொடுங்கோலாட்சியில்
கிஞ்சிற்றும் இரக்கம் இலா அரக்கர்
கொடுங்கரம் சிக்கிபல் சிறுமைகளுற்று
குகையாம் கரிச்சுரங்கங்களில் நாளும்
அடியுதை பட்டு அஞ்சி நடுங்கி
அல்லல் பட்டாற்றா தழுதப்பாட்டாளிகள்
வடித்த கண்ணீர்க் கிறுதி கண்ட நாள்:
மாண்புறும் திருநாள்! மேதினம் இந்நாள்!

உழைப்பாளர்களின் குருதியோ ஆறாய்
ஓடிய போதிலும் மனந்தளராது
கொலைப்பா தகரின் கொட்ட மடக்கி
குவலய மெங்கும் பாட்டாளிகளின்
உளம், போ ராடும் உணர்வில் திளைத்து
உரிமை வேட்கை கிளர்ந்தெழவைத்த நாள்
இலை, பிற திருநாள் எளியோர்க் கென்றும்
இந்நாள் பொன்னாள் எழுச்சித் திருநாள்!

சாதிப் பிரிவால் சமயப் பிரிவால்
தன்னலம் பேணும் முதலாளித்துவ
நீதியற்ற சமூக அமைப்பால்
நித்தமும் பகைமைப் பூசல்களாலே
மோதி அழியும் இழிசெயல் மாறி
மேலாம் பொதுமை வாழ்வு கண்டிட
பேதமற்று உலகளாவிய
பெருந்தொழிலாளர் போற்றும் திருநாள்!

~ 1988 மே குன்றின்குரல் ~

# ஒரு கவிஞனின் கண்ணீர்க்கதை

கவிதைக் கன்னியின் காதலில், அவள்
        கடைக்கண் வீச்சினில் மயங்கி நாளுமே
புவியில் உற்றிடும் போகம் நீக்கியே
        போக்கினேன் காலம், செந்த மிழிலே
சுவை தருங்கவி நூறு நூறென
        சுரக்கும் நெஞ்சினில் பொருள்த னை, மிக
அவ மி வையென வெறுக் கலாயினேன்
        அதன்ப யனின்று அடைய லாயினேன்!

புத்த கங்களை வாங்கி குவித்தேன்,
        பொழுதெ லாமிவை படித்துக் களித்தேன்,
பத்திரி கைகளில் சஞ்சி கைகளில்
        பவனி வந்தன எந்தன் கவிதைகள்,
நித்த முங்கவி எழுதி எழுதியென்
        நீண்ட கரங்களும் மெலிந்து வாடின,
சித்த மோகவி சுரப்ப தன்றி வே(று)
        சிந்தனைக்கிடம் தருவ தில்லையே!

நன்று! நன்று! கவிதை நன்றென
        நண்பர் கூறும் புகழ்மொழி கேட்டு,
தென்ற லின்மென் சுகத்தை யுணர்ந்தேன்!
        தோளில் மாலைகள் மணத்தை நுகர்ந்தேன்!
ஒன்று மறந்தேன், வாழ்வுக் கிவையெலாம்
        உதவு மா?என, ஓர்ந்து பார்த்திட,
அன்று மறந்ததை இன்று நினைக்கின்றேன்
        ஆம்! பொருளின் தேவை யுணர்கிறேன்.

காவி யம்புனைந் தேன், பல நூறு
கவிகள் பாடினேன் ஆயினு மென்ன?
வாழ்வி லேவளம் காண வில்லையே,
மனத்தைப் போர்க்கள் மாக்கி தீயென
ஏவி னேன் கவிக் கணைகள் பற்பல
இருந்து மென்ன வாழ்வி லேஒளி
மே வ வில்லை பொருள்வலி முன்னே,
முற்றுந் தோல்வியே வாழ்வு கானலே!

இறந்த பின்னெனக் கெடுக்கும் விழாக்கள்
எத்தனை! எத்தனை! ணண்ணிப் பார்க்கிறேன்,
“சி றந்த கவிஞன்” எனப்புகழ்ந் திடுவார்,
தீஞ்சுவைக்கவிதை திலகமென்றி டுவார்
பரிந்து எந்தன் கவிதைக ளைப் பலர்
பந்து போலெறிந் தாடிக் களிப்பார்,
இறந்து கொண்டிருக் கும் எனக் குதவ
யாருளர்? போலி வேடதாரிகள்!

“பொன்னையும்பொருள் தன்னையும் போற்றும்
புவியில் உந்தன் கவிதை யாலெமக்
கென்ன பயனிர வுக்குண வாகுமோ?”
“ஏனடா வுனக் கிந்த பைத்தியம்!”
அன்னை சொன்னவை இன்னுங் காதினில்
அதிர்ந் தொலித்திடும், ஆயினும் கவிதை
இன்னு மின்னும் எழுதிக் கிழிக்கிறேன்,
ஏடுகளை, ஆம்! நானோர் பைத்தியம்!

இலக்கி விழாக்கள் கவிய ரங்குகள்
எத்தனை! எத்தனை! கலந்து கொண்டவை
முழக்கிய கவிதைகள் ஆயிரம்அதன்
மூச்செ லாம்பொது நலத்தின் தாகம்,
நிலத்தில் எவரும் சமமே என்றிடும்
நினைவே கவிதைக ளாக மலர்ந்தன
அளப்பி லாயென் நெஞ்சின் ஆசைகள்
அத்தனை யுங்கன வாகிப் போனதே!

பட்டம் பதவி இவைகளுக் காக
படித்திருந் தேனால், மற்றவர் கைக்கு
எட்டாக் கனியாய் இருந்த போதிலும்
எந்தன் வாழ்வு சிறப்புறு மன்றோ!
குட்டிச் சுவராம் தோட்டப் பள்ளியில்
கூடிய ஐந்தாம் வகுப்புடன் கல்வி
முற்றுப் பெற்றால் பெற்றவ ரைப்போல்
மீளாச் சிறை லயக் கைதியாய் ஆனேன்!

மேலுங் கற்றிட மனதினில் ஆர்வம்
மீதுறும்: ஆயினும், வறுமையின் தாக்கம்
மேலுற, ஆசையில் மாபெறும் தேக்கமிவ்
வேளை நெஞ்சிலோ அளவிலா ஏக்கம்!
பாலும் பழமுமா உண்டு வளர்ந்தேன்?
பஞ்ச ணையிலா உறங்கி எழுந்தேன்?
கூழும் இன்றி பசியில் துடித்தேன்!
கிழிந்த படங்கில் உறங்கி வளர்ந்தேன்!

பெற்றவர் தொழிலையே பிள்ளை மேற் கொண்டேன்
பேய்மழைக் காற்றில் மலைகளில் ஏறி
நித்தமும் தேயிலைத் தளிரினைப் பறித்து
நெஞ்சிலாக் கொடியருக் கஞ்சி நடுங்கியும்
திட்டும் வசையும் தினந்தினம் கேட்டும்
தொழில் புரிந் தேன்பல ஆண்டுகள் ஆயினும்,
பத்திரிகைகளைப் படிக்கும் ஆர்வமோ
பற்றிக் கொண்டதே பாவி யேனெனை!

பார்பரந்த மக்கள் வாழ்க்கையும்
பற்பல நாட்டு சரித்திரம் பற்றியும்
சீர்மிகுந் தமிழின் தொன்மையுந் தமிழர்
திறல் புகன்றிடும் இலக்கியம், அவர்தம்
நேரிய அரசியல் நெறிக ளும் ஒரு
நிகரி லாஅவர் வீரமும் காதலும்
போர்முறை நியதியும் வாணிப வளர்ச்சியும்
பொழுதெ லாம்படித் துளம் பூரிப்பேன்!

எங்கு நோக்கினும் பசுமையின் தேக்கம்
எம்மவர் கைகளின் உழைப்பின் ஆக்கம்
பொங்கும் அருவிப் புனல்வழிந் தோடி
பொன்மகள் நிலமகள் பூரிக்கச் செய்யும்
அங்க மெங்கினும் தேயிலை பூத்து
அழகு சிரிக்கும் மலைகள்! அதனில்
இங்கு உற்றயென் அன்னை தந்தையர்
இருகண் சொரிந்த நீரும் கலக்கும்!

ஆங்கவர் கண்ணீ ருடனவர் எண்ணம்
ஆசைக் கனவுக ளோடவர் உடலும்
ஈங்கு புதைந்து மண்ணில் கலந்து
இற்றுரமாக, இதய வுணர்வுகள்
ஓங்கி வளர்த்த மரங்களாய் தேயிலை
உருவாய் மாறி எத்தனை செல்வம்
பாங்குடன் குவியும் அன்னவர் சந்ததி
பாரில் இழந்த சடப்பொருள் ஆனார்

அன்று எம்மவர் வாழ்வினை எண்ணி
அகம் மகிழ்வுரும், அடுத்த கணமோ
இன்று எம்மவர் இங்கு மலைகளில்
எண்ணி லாமிடர்பட்டு மடிவதை
தின்று உமிலும் எச்சிற் பொருளென
தீ......ம னத்தவர் எம்மை வெறுப்பதும்
கண்டு கண்டு கனன்ற நெஞ்சினில்
கவிதை யூற்றுச் சுரக்க லாயின

வளமை யுற்றதென் கவிதை ஆயினும்
வறுமை யுற்றதென் வாழ்வு, மனத்தின்
இளமைக் கால கனவுகள் போல
எனது கவிதை பயன்களும் ஆகவோ?
தலைமை, உலகில் எதற்கும் தாங்கிடும்
தனந்த னைச்சிறி தேனும் மதித்திடா
உளம் இன்றதன் தேவையிளன் பயன்
உணரும் போதிலோ உடல்த ளர்ந்ததே!

"சங்கத் தாலே வாழ்வு வளம் பெறும்!"
தணியா ஆவல் இதய மீதுற
இங்கென் வாழ்வை உரமாய் ஆக்கினேன்.
இடர்க ளூற்றுச் சிறையில் வாடினேன்!
பங்கு முற்றதென் வாழ்வு சுயநலப்
பதர்க ளாம் தொழிற் சங்கத் திருடரால்,
எங்கு நோக்கினும் எம்பெயர் கூறி
ஏய்த்து வாழ்ந்திடும் வேட தாரிகள்.

கன்னக் கோலர்கள் எங்கள் வளத்தினைக்
கவரும் வஞ்சகக் கொடிய மனத்தினர்
தன்னலப் பதர்கள் தம்மை போற்றிச் செந்
தமிழிற் கவிதைகள் பாடினே நந்தோ
என்னை, எந்தன் கவிதை, மலர்களை
எருவாய் ஆக்கி உயர்ந்த பேர்களோ
மன்னர் போலும் வாழ இங்கிவன்
வறுமைச் சேற்றில் வதைய லாகினேன்!

..1989..

# ஒற்றுமை எனும் ஓரணி திரள்வோம்

கொட்டும் பனியில் குளிரில் நடுங்கி
        கூடை கூடையாய் கொழுந்தினை ஆய்ந்தும்
சற்றும் ஓய்வு தான்சிறி தின்றி,
        தன்னலப் பேய்கள் வாழ்வதற் குழைத்தோம்
கிட்டிய பயனே? அடிமைகள் என்னும்
        கீழ்நிலை, மனிதரென் றுணர்பவர் யாருளர்?
எட்டு அடியும் சொந்தம தில்லா
        இளித்த வாயராம் இனியும் வாழ்வதோ?

உரிமைகள் அற்றின் நாட்டினில் பற்று
        உள்ளவ ராக உழைத்தே வந்தோம்
சிறுமைகள் கோடி உள்ளது அன்றி
        சிறிதேனும் இன்பம் அடைந்தோமா? இனியும்
எருமையைப் போல அடிமைச் சேற்றில்
        என்றும் கிடந்து உழன்றது போதும்
ஒரு அணி நின்றெம் உரிமைகள் பெறவே
        உணர்ந்தெழு! வெற்றி! நிச்சயம் உண்மை!

சிந்தனை தெளிவு பெற்றவன் நீ யெனில்
        சிலிர்த்தெழு! இல்லையெனில் செம்மறியாட்டு
மந்தைகள் போல அடிமையாய் என்றும்
        வதைப்படு! துயர்படு! வஞ்சகர் தாள் தொழு!
நெஞ்சினில் வீரமும் நேர்மையும் உள்ள
        நீயொரு மனிதன் எனும் நினைவிருந்தால்
அஞ்சிடோ மென்று உரிமைகள் பெறவே
        ஆர்த்தெழு ஒற்றுமை அணியினிலின்றே

ஆட்சியி லென்றும் அமர்ந்திடும் பேர்க்கு
        அடிவரு டித்துதி பாடுவ தேயெம்
மாட்சி யெனநினைத் தேபல முறை தான்
        வாங்கிய தழும்புகள் மறைந்திட வில்லை
சூழ்ச்சி வலைகளில் சிக்கவைத் தெம்மை
        தொடர்ந்தும் அடிமை விலங்கினைப் பூட்டி
ஏய்த்து நம்மை ஏழைய ராக்கும்
        எத்தரைத் தள்ளி இன்புற வாராய்!

**..1972..**

# ஆள்வோரே கேளீர்!

மலைமீது மழைபொழிந்து மண்ணெல்லாம் குளிரும்!
வரையெல்லாம் தேயிலைகள் வளர்ந்து எழில் மிளிரும்!
கலகலெனும் வளையல்கள் சலங்கை யென ஒலிக்கும்!
கவின்பரத நடனமென கரங்கள்சுழன் றாடும்!
சலசலக்கும் அருவியொலி சுகராகம் போடும்!
இளந்தளிர்கள் விரல்களிடை இனியகதை பேசும்!
இவையெல்லாம் மலையகத்தின் இனியதிருக் காட்சி!

மரகதம் போல் பசுமை கொஞ்சும் மதர்த்து நிற்கும் மலைகள்
வள்ளலென செல்வமெலாம் வரையாது வழங்கும்
குருதிநிற தேநீரை அருந்தும்புவி மாந்தர்
குதூகலிக்கத் தன்புகழை நிலைநாட்டும் மலைகள்
பெருகிவரும் ஆறுகளோ ஒளிவழங்கும் நாட்டில்
பெரிய தொழிற்சாலைகளை இயக்குமிதன் சக்தி!
இருட்குகையாம் லயமறையில் எத்தனையாண் டுகளாய்
இருக்கின்ற எம்மவர்க்கோ வாழ்விலொளி யில்லை!

சுதந்திரத்தின் மாண்பெல்லாம் ஏடுகளில் படித்தோம்!
சுகபவனி வருபவரின் சொற்பொழிவில் கேட்டோம்!
இதயமகிழ் வோமெங்கள் இடர்தொலையு மென்றே
ஏமாந்தோம், இலவுக்கு காத்தகிளி யானோம்!
மதிப்பற்ற பொருளாகி மலிவான சரக்காய்
மனிதர்தம் உரிமைகள் ஏதுமற் றிங்கே
பெருந்தோட்டச் சிறைக்குள்ளே கைதிக ளானோம்!
பேச்சுமூச் சில்லாத பொம்மைகளாய் ஆனோம்!

இன்னாடே சொந்தமெனும் எண்ணத்தில் வாழ்ந்தோம்!
ஏச்சுக்கும் பேச்சுக்கும் முகங்கொடுத்து வந்தோம்!
'தன்னாட்டு மக்களிவர்' என எண்ணும் நெஞ்சம்
தானிங்கு அதிகார வர்க்கத்தில் பஞ்சம்!
பொன் நாடி பொருள் நாடி புகழ்நாடி நாளும்
பொய்நாளும் சொற்கோடி பேசுவதாற் பயனென்?
நன்னாடாய் இன்னாடு உணர்ந்திடவே எங்கள்
நலன்நாடல் முதற்பணியாம் ஆள்வோரே கேளீர்!

..1974..

# கொந்தளிக்கும் உள்ளம்

எங்கும் பசுமை தங்கும் மலைகள்:
அங்கு உறையும் அருந்தொழி லாளர்
சூம்பிய முகங்களில் செழிப்பினைக் காணோம்!
ஏங்கிய கண்களில் இருள்தான் மேவும்!
எதிர் படும் முகங்களில் ஏமாற்றத்தின்
பிரதிபலிப்பு, பெரிதாய் தோன்றும்!
கலங்கிய உளத்தின் கவலை தன்னை
துலக்கிடும் முகங்கள் சோர்வினைக் காட்டும்!

"மிடிகள் தீர்ந்திடும் மேலுறும் வாழ்க்கை"
என நினைத்தவன் வாழ்க்கையி லேபெரும்
இடிவிழுந்தது! விலை உயர்வினால்:
படி அரிசியை பறித்த செயலினால்
வீடுகள் தோறும் இருள், மண் ணெண்ணை
விலைஉயர்வு, நினைத்திட உள்ளம்
வேதனை யாலே வெம்பி யழுது
குமுறி எழுந்திடும் அலைகடலாக
கொந்த ளித்திடும் இதயங்க ளாயிரம்!
பிள்ளையார் பிடிக்க நினைந்து மண்ணை
பிசைந்துரு வாக்கிய பின்னே அதுதான்,
பொல்லாக் குரங்காய் முடிந்தது மன்றி!
பிடுங்கிய தாமெனும் கதையாய் ஆச்சே!

எத்தனை வீடுகள் இருளில் மூழ்கின:
எத்தனை இதயங்கள் துயரில் ஆழ்ந்தன:
எத்தனை இன்பக் கனவுகள் கலைந்தன:
எத்தனை விழிகள் நீரில் மிதந்தன!

கால்பேஸ் கடற்கரையில் கயமை புரிவதற்கு
வாய்ப்புகள் ஏராளம்! அரசினரின் தாராளம்!
உல்லாச மாளிகைகள் ஓங்கி உயர்ந்திருக்கும்
சல்லாப கூடங்கள், சரஸமிடும் மாடங்கள்,
பார்க்கின்ற இடமெல்லாம் பலவர்ண ஒளிக்கற்றை,
நோக்கின்ற நோக்கில் நூறாயிரம் அசிங்கம்!

போர்ப்பாட்டு பாடி புரண்டுவரும் பேரலைகள்
ஊர்பாட்டு நிலைகண்டே ஓடிவிடும் பின்வாங்கி:
ஆர்க்கின்ற கடல்நெஞ்சின் ஆழத்தே கொந்தளிப்பு!

கடைவீதி நடைபாதை கழிவுச்சே ரிடங்கள்
காண்கின்ற இடமெல்லாம் கையேந்தி வாழும்
உடையற்றோர் உணவற்றோர் ஓலங்கள் ஒலிக்கும்:
உல்லாசப் பொருள்களோ தெருவை நிறைக்கும்:
அன்றாடத் தேவைக்கு ஏற்றது வான
அவசியப் பொருள்களின் விலைகளோ கைக்கு
எட்டாத உயரத்தில் ஏறிப் பறக்கும் - கடைகள்
எங்கும் வானொலிப்பொட்டி டீ.விகள் நிறையும்
மேலும் மேலும் விதவிதமான
மேட்டுக் குடியினர் விநோதப் பொருட்கள்
சூழும் கடைகள் தோறும் சிரிக்கும்!
தொழிலாளர் வாழ்வினில் வறுமை சிரிக்கும்!

வீதிகள் தோறும் மேலெழில் பாலம்
விசிர்நீர் பொறிகள் சந்திகள் தோறும்!
வண்ண விளக்குகள் கண்ணைப் பறிக்கும்
வருவோர் தங்கள் பொருளைப் பறிக்கும்!
இத்திரு நாட்டினில் இதுதானே காட்சி!
ஏழைகள் துயருக்கு ஏதிங்கு மீட்சி?
இப்படி யான இந்திர சால
செப்படி வித்தையில் சிந்தை மயங்கி
வேதனைத் தீயில் வெந்து கருகி
வீழ்ந்தவர் வாழ்விலோர் விடிவெள்ளி தோன்ற
உரம்பெற்று உரிமைக் குரல்தான் எழுப்ப
உணர்ச்சிப் பிழம்பாயென் உள்ளம் கொந்தளிக்கும்

..1980..

# கொட்டு முரசே!

வாழ ஒருவர், பலர் வாடும் பொல் லாவுலகை
தூளாக்கு வோமென்று கொட்டு முரசே! எங்கள்
துன்பம் தொலைந்ததென்று கொட்டு முரசே!

நாடுநலமுறவே நாளும் உழைத்தவரின்
பீடு சிறந்திடவே கொட்டு முரசே! பகை
பேய்கள் ஒழிந்ததென கொட்டு முரசே!

அடிமை விலங்கொடித்தெம் மிடிமை யகற்றிடவே
ஆர்த்தெழுவோம் என்றேநீ கொட்டுமுரசே! உரிமை
போர்பரணி பாடுகென கொட்டுமுரசே!

உண்பதற்கும் உடுப்பதற்கும் ஒன்றுமிலை என்ற நிலை
மண் புதைந்து போகவென கொட்டுமுரசே! வாழ்வில்லை
வந்திடுக இன்பமென கொட்டு முரசே!

உள்ளவர்கள் இல்லார்கள் உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள்
பொல்லாயில் வமைப் பொழிய கொட்டுமுரசே! மண்ணில்
எல்லோரும் சமமென்றே கொட்டு முரசே!

கல்லார்கள் என்ற இழிச் சொல்லை ஒழித்துக் கலை
வல்லோர்கள் ஆனோமென்று கொட்டு முரசே! இனி
வாழ்வில் உயர்வோ மென்று கொட்டு முரசே!

..1973..

# வேடதாரிகள்

கோயிலுக் கோடுகின்றாய் - கரம்
கூப்பித் தொழுகின்றாய்!
வாயினில் ஏதேதோ பல
மந்திரங்கள் உரைப்பாய்
தூய்மை யுடையவன் போல் - வெண்மை
தோய உடையணிவாய்!
தீய புரிவதற்கே நெஞ்சில்
சிறிதும் தயக்க மிலாய்!

கூட்டத்தில் பேசிடுவாய் - ஒற்றுமை
கோசம் முழக்கிடுவாய் - மன
நாட்டத்தில் வேற்றுமையை பேணி
நன்கு வளர்த்திடுவாய்! பணத்
தேட்டத்தில் என்னாளும் - உன்
சிந்தை செலுத்திடுவாய்! பசி
வாட்டத்தி லுள்ளவர்க்கே ஏதும்
வழங்க நினைத்தறியாய்!

கேடு நினைத்திடுவாய்! பிறர்க்கு
கெடுதி புரிந்திடுவாய்! பல
வீடுகள் தோறும் சென்றே தினம்
வேதம் படித்திடுவாய்! ஒரு
ஈடி லிறைவனின் பேர் -வாயில்
எச்சிற் படுத்திடுவாய்! பொறாமைக்
காடுஅகத்திருக்க அன்பின்
கனிச்சுவை பேசிடுவாய்!

துஷணம் பேசிடுவாய்! நட்பில்
சோரம் விளைத்திடுவாய்! பெண்ணின்
'பூஷணம் கற்பு' என்பாய்! பிற
பெண்களில் இச்சை வைப்பாய்!
வேஷமென சேற்றில் - நாளும்
வீழ்ந்து புரண்டிடுவாய்! சுத்த
ஆஷாட பூதியாடா செயல்
அத்தனையும் வேஷமடா!

தொகுப்பு - சாரல்நாடன்

# ஆஷாட பூதிகளை அறுத்திடுவோம் பூண்டோடு!

குன்றென நிமிர்ந்த தோளெங்கே?
குன்றா உளத்தின் துணிவெங்கே
சென்றன? என்றும் அடிமையெனும்
சிறையில் கிடந்து வாடுவதோ?
இன்றுனை ஏய்த்து வாழ்பவர்கள்
எத்தனை எத்தனை பேர்களடா!
என்றுநீ உணர்வாய் உனைச்சூழ்ந்த
இருளாம் பேரிடர் களைந்திடுவாய்?

அரசியல் என்னும் சதுரங்க
ஆட்டந் தனிலே காய்களென
வருடங்கள் பலவுனை வைத்தாடி
வந்தவர் தம்மால் உன்வாழ்வில்
இருள்தான் மிகுந்த திதையின்னும்
எண்ணா திருப்ப தேனோடா?
வருவாய் உழைக்கும் வர்க்கத்தின்
வலிமை காட்டி கிளர்ந்தெழுவாய்!

உரிமைக் குரலை எழுப்பிடுவாய்! -இதை
உணரார் மமதை அடக்கிடுவாய்!
பொறுமை, கடமை, எனநாளும்
போதிப் பவரின் வாழ்வுதனை
ஒருசற் றுணர்ந்து பார்ப்பாயேல்
உண்மை தெரியும் எமதுழைப்பைச்
சுரண்டும் வர்க்கத் திருள்மனத்தின்
சூழ்ச்சிப் பொறியாம் சுவைச் சொற்கள்!

எத்தனை, எத்தனை புறக்கணிப்பு
எத்தனை எத்தனை கழுத்தறுப்பு
இத்தனை செய்தும், பசுத்தோலை
இழுத்துப் போர்த்தி எம்மிடையே
சொத்தைப் பல்லவி 'தார்மீகம்'
தொடர்ந்தும் பாடி வருகின்றார்!
பித்தர்கள், பொய்யரிவ் வாஷாட
பூதிக ளின்பூண்டறுத்திடுவோம்!

..1974..

# விழித்திறந் தெழுவாய்!

தூங்கியது போது மினித்
துயிலெழுவாய் மலைமகனே!
விடிந்தது பொழுது
விழித்திறந் தெழுவாய்!

அடிமை இருட்சிறை அதனிற் பலநாள்
மிடிமை யுற்று வேதனைப் பட்டு
கல்லாய் மரமாய் உணர்வுக ளற்று
காலந் தள்ளினாய் இற்றை நாள் வரை
மதியினில் மனிதன் தன்னடி பதித்து
மதியினில் வல்லோன் தானெனக் காட்டிய
காட்சியைக் கண்டும் கருங்கல் சிலையாய்க்
காலந் தள்ளுவ தழகோ? இனியும்

தூங்கியது போது மினித்
துயிலெழுவாய் மலைமகனே!

பலநாள் முன்னே உன்னரும் முன்னோர்
பதித்தனர் தன்னடி ஈழமண் ணதனில்
காடாய் மேடாய் கிடந்தயிம் மண்ணை
நாடாய் வீடாய் மாற்றினார் உழைப்பால்
உழைத்து உழைத்து ஓடாய்ப் போன
ஓரினம் உன்னினம், உலகோர் அறிவர்
எனினுமின் நாட்டில் எவர்தா னுணர்ந்தார்?
எம்மவர் செய்த நன்றியை மறந்தார்!

தூங்கியது போது மினித்
துயிலெழுவாய் மலைமகனே!

தொகுப்பு - சாரல்நாடன்

# ஆஷாட பூதிகளை அறுத்திடுவோம் பூண்டோடு!

குன்றென நிமிர்ந்த தோளெங்கே?
குன்றா உளத்தின் துணிவெங்கே
சென்றன? என்றும் அடிமையெனும்
சிறையில் கிடந்து வாடுவதோ?
இன்றுனை ஏய்த்து வாழ்பவர்கள்
எத்தனை எத்தனை பேர்களடா!
என்றுநீ உணர்வாய் உனைச்சூழ்ந்த
இருளாம் பேரிடர் களைந்திடுவாய்?

அரசியல் என்னும் சதுரங்க
ஆட்டந் தனிலே காய்களென
வருடங்கள் பலவுனை வைத்தாடி
வந்தவர் தம்மால் உன்வாழ்வில்
இருள்தான் மிகுந்த திதையின்னும்
எண்ணா திருப்ப தேனோடா?
வருவாய் உழைக்கும் வர்க்கத்தின்
வலிமை காட்டி கிளர்ந்தெழுவாய்!

உரிமைக் குரலை எழுப்பிடுவாய்! -இதை
உணரார் மமதை அடக்கிடுவாய்!
பொறுமை, கடமை, எனநாளும்
போதிப் பவரின் வாழ்வுதனை
ஒருசற் றுணர்ந்து பார்ப்பாயேல்
உண்மை தெரியும் எமதுழைப்பைச்
சுரண்டும் வர்க்கத் திருள்மனத்தின்
சூழ்ச்சிப் பொறியாம் சுவைச் சொற்கள்!

எத்தனை, எத்தனை புறக்கணிப்பு
எத்தனை எத்தனை கழுத்தறுப்பு
இத்தனை செய்தும், பசுத்தோலை
இழுத்துப் போர்த்தி எம்மிடையே
சொத்தைப் பல்லவி 'தார்மீகம்'
தொடர்ந்தும் பாடி வருகின்றார்!
பித்தர்கள், பொய்யரிவ் வாஷாட
பூதிக ளின்பூண்டறுத்திடுவோம்!

..1974..

# விழித்திறந் தெழுவாய்!

தூங்கியது போது மினித்
துயிலெழுவாய் மலைமகனே!
விடிந்தது பொழுது
விழித்திறந் தெழுவாய்!

அடிமை இருட்சிறை அதனிற் பலநாள்
மிடிமை யுற்று வேதனைப் பட்டு
கல்லாய் மரமாய் உணர்வுக ளற்று
காலந் தள்ளினாய் இற்றை நாள் வரை
மதியினில் மனிதன் தன்னடி பதித்து
மதியினில் வல்லோன் தானெனக் காட்டிய
காட்சியைக் கண்டும் கருங்கல் சிலையாய்க்
காலந் தள்ளுவ தழகோ? இனியும்

தூங்கியது போது மினித்
துயிலெழுவாய் மலைமகனே!

பலநாள் முன்னே உன்னரும் முன்னோர்
பதித்தனர் தன்னடி ஈழமண் ணதனில்
காடாய் மேடாய் கிடந்தயிம் மண்ணை
நாடாய் வீடாய் மாற்றினார் உழைப்பால்
உழைத்து உழைத்து ஓடாய்ப் போன
ஓரினம் உன்னினம், உலகோர் அறிவர்
எனினுமின் நாட்டில் எவர்தா னுணர்ந்தார்?
எம்மவர் செய்த நன்றியை மறந்தார்!

தூங்கியது போது மினித்
துயிலெழுவாய் மலைமகனே!

கூடுவிட்டிங் கெம்மாவி
        குடிபோகும் நாள் வரைக்கும்
பாடுபட்டு இம்மண்ணில்
        பலவளங்கள் ஈட்டி வைத்தோம்
நாடு நலம் பெற்றிடவே
        நல்லபணி செய்து வந்தோம் - ஆனாலெம்
துன்பம் தொலையவில்லை
        துயர்கதையோ முடியவில்லை

        வெய்யில் பனியென்றும்
                வீசும்புயற் காற்றென்றும்
        பெய்யும் அடை மழையும்
                பெரிதென்று எண்ணாமல்
        செய்யும் தொழிலே
                தெய்வமென்றே எண்ணிவந்தோம் - ஆனாலெம்
        துன்பம் தொலையவில்லை
                துயர்கதையோ முடியவில்லை

பிற்போக்குக் காரர்களால்
        பின்தள்ளப் பட்டீர்கள்
முற்போக்குக் காரர்நாம்
        முறியடிப்போம் இன்னல் என்றோர்
எப்போக்குக் காரர்வந்தும்
        இன்னல் களையவில்லை
துன்பம் தொலையவில்லை
        துயர்கதையோ முடியவில்லை

# பெண்தெய்வம்

கூடையை முதுகில் தாங்கி
கோணலாய் உடல் வளைத்து
சாடையில் விழிகள் நோக்கும்
தன்னிலை பிறழ்ந்து சென்ற
ஆடையை கரங்கள் நீண்டு
அள்ளியே மார்பை மூடும்!
வாடையில் மேனி யாட
வரையிடைக் கால்கள் ஓடும்

'சிலீர்' என மோதுங் காற்றும்
சில்லிடும் பனியும் சேர்ந்து
குளிரினில் உடல் நடுங்க
கோதையின் கரங்கள் நீண்டு
தளிரினைப் பறிக்கும் நேர்த்தித்
தவிப்பினில் அழகு ஆடும்!
'கலீர்' என வளைகள் சொல்லும்
கதைகளோ அனந்தம் கோடி

மரகதப் பாய் விரித்து
மயக்கிடும் பசுமைக் காட்சி!
மரங்களோ நெடிதுயர்ந்து
வா! வென அழைக்கும் காற்றில்!
வரிசையாய் நிரையில் நின்று
வளைகரம் நீட்டி! நீட்டி!
விருந்துகொள் வனப்பு பெண்கள்
இளந்தளிர் பறிக்கும் காட்சி!

தளிரது நிறைந்த கூடை
தானது முதுகில் ஆட
மலைச்சாரல் மீதெம் பெண்கள்
வருகின்ற நடையில் வண்ண
இளமயில் கூட்டம் ஆடும்
எழில் கண்டேன்! இன்பங் கொண்டேன்,
உளமதில் அடடா! எண்ண
உயர்தமிழ்க் கவிதை யூறும்!

தன்னலம் பேணி டாதார்
தன்பிள்ளை தன்குடும்பம்
நன்னிலை அடைவதற்கென்
நாளுமே எண்ணிடாதார்
இன்னிலம் வாழ்வதற்கே
இராப்பகல் தொழில் புரியும்
பொன்னுள்ளம் கொண்டார் மலைப்
பெண்கள் நம் தெய்வ மடா!

# துடுப்பில்லா படகு

நன்றி கொன்ற பேர்க்கிந்த
நாநிலத்தில் வாழ்வில்லை
என்ற றைந்தான் வள்ளுவன் தன்
இதயக் கருத்தை குறளினிலே
இன்றோஇன வெறியர் எம்மை
ஏகச் சொன்ன போதும் நாம்
தொன்று தொட்டு வாழ்ந்துவரும்
தொடர்பும் அற்றுப் போய்விடுமோ?

புலியும் கரடி வாழ்ந்த அடர்
புதர்கள் மலிந்த வனமெல்லாம்
வலிமை மிகுந்த எம்கரத்தால்
வளமை கொழிக்கும் நாடெனவே
பொலிவுபெற்ற பின் எம்மை
போகச் சொன்னால் சிரியாரோ?
அழிவை நாடி இந்நாட்டின்
அரசும் போதல் நலமில்லை!

உதிரம் கொட்டி செடிகள் நட்டு
உயிரைக்கொடுத்து வளர்த்திட்டோரம்
சிதற அடித்து எம்மினத்தை
சீரழிக்க எண்ணி விட்டார்!
மதியிலாத இவர் செய்த
வஞ்சக ஒப்பந்தமிதே
துடுப்பிலாத படகினிலே
துணியுமாறு போலுமே!

# சம்பள நாள்!

பத்தாந் திகதியில் சம்பளமாம், சின்னப்
பையனுக் கோ, பெருங் கொண்டாட்டம்!
“மொத்தமாகச் சம்பளம் வாங்கி டுவா, அம்மா
முழுசா ஒருரூவா தந்திடுவா”! என
சித்தம் நிரம்பிய ஆசையிலே, தன்
தோழர் பலருக்கும் சொல்லி வைத்தான்!
முத்தம்மா சம்பளம் வாங்கி வந்தாள் - அவன்
முதுகுல நாலு கொடுத்து வச்சாள்!

“வாழைப் பழம்...மிட்டாய் முறுக்கு...வடை....!
வாங்குங்க! வாங்குங்க!” என்று, இந்த
ஏழைங்க காசைப் பிடுங்கிட வேவந்த
வியாபாரி கள் இடும் கூச்சல்களும்
ஊளை ஒழுக வாய் எச்சில் வடிய, தன்
உள்ளத்தி லேபெரும் ஆசையுடன் - அம்மா
சேலைமுந் தானையைப் பற்றிக்கொண் டேவரும்
செந்தா மரையோ சிணுங்கிடுவாள்!

“சீவி முடிச்சி, சிரிக்கலைன்னா? நல்லா
சிங்காரம் பண்ணி தலைக்கலைன்னா?
பாவிப் பயஅரைப் பேருபோட்டான்? அவன்
பாடையி லேபோக, மாடாக என்
ஆவி துடிக்கச் சுமந்துவந்தும், தினம்
அரைப் பேரு போட்டுல்ல வச்சிருக்கான்!”
கேவி யழுது புலம்பிக்கொண் டேவரும்
குப்பாயி நெஞ்சில் பெருநெருப்பு!

“காமாச்சிக்கு எம்பத் தஞ்சி ரூவா அவ
கையில வாங்கிட்டா பாத்தியாடி? சுத்த
சோமாறி வேலைக்குப் போகமாட்டா, போனா
சொத்தவேலை, துப்புப் பட்டிடுவா!
ஏமாளி கந்தன் அவபுருசன் - அவ
இழுத்த இழுப்புக்கு வளையுறானே!” என
ரோமஞ் சிலிர்க்க வசைப்பாடும் சின்ன
ருக்கு மணிக்கோ, வயித்தெரிச்சல்!

"சீட்டுப் பணத்த நான் கட்டுவேனா? பட்ட
சில்லறக் கடன அடைப்பேனா? அந்தச்
சேட்டுப்பய மலை போலவந்து பெருந்
தொல்லை கொடுப்பான் கடன்கேட்டு
ஈட்டுக் கடையில வச்ச நகையினை
இந்த மாசம் திருப்பலன்னா, ஏலம்
போட்டுடு வானாம்! என்னசெய் வே" னென
புலம்பும் வள்ளியொரு பக்கத்திலே!

"பள்ளிக்கூடம் போகும் சின்ன மகளுக்கு
பாவாடை ரவிக்கை தைக்க வேணும்
வள்ளி, மகளின் சடங்குக்கு அஞ்சிரூ
வா, வாச்சும் மொய்யா எழுதிடனும்
கொள்ளைக்கா ரப்பய ஒத்த கடைக்கும்
கொடுத்திட னும் போன மாசக்கடன்"
உள்ளத்தில் எண்ணி அடுப்பரு கில் சும்மா
உட்கார்ந் திருக்கிறாள் பாப்பாத்தி!

"நாட்டுக்குப் போயி குடிச்சிப்புட்டு, சில்
நாதாறிப் பசங்களக் கூட்டிவந்து, கரு
வாட்டுக்கறிவேணும் என்று, என்னையிந்த
மனுசன் புடுங்கியே தின்னப் போறான்!
வீட்டுல என்ன சொகத்தக் கண்டேன்? இந்த
வெத்து மனுசனக் கட்டிக்கிட்டு?" என
நீட்டி முழக்கி வசை பாடும் சின்ன
நீலா வதிக்கோ பெருங் கோவம்!

சம்பள நாளிது வீட்டி லிருக்கிற
சந்தோச மெல்லாம் பறந்திடும் நாள்!
வம்பும் தும்புகளும் பேசிடும் நாள்! இவர்
மண்டை யுடைந்திடும் நாளிதடா!
கம்புத் தடிகளைத் தூக்கிடும் நாள் பொலிஸ்,
கச்சேரி, கோர்ட்டுக்குப் போயிடும் நாள்!
வெம்பியழுதிடும் பெண்களின் குரல்கள்
வீடுகளில் கேட்கும் நாளிதடா!

# நாள் வரும்!

மண்ணைப்பொன் னாக்கிய மலையக மக்களின்
வலிமை மிகுந்த கைகள் - உயர்
விண்ணைய ளாவியங் கெண்ணரும் அற்புதம்
விளைவிக்கும் நாள் தூரமில்லை!

கவ்வாத்து வெட்டிடும் கைகளிதுவென
கண்டு நகைக்காதீர் - இது
செவ்வாய் கிரகமும் சென்றங்கு கற்பகத்
தேயிலை நாட்டிடுமே!

ஆடுகள் மாடுகள் போலவே வாழ்ந்தவர்
அடிமைத்தளை யறுத்தே, - எம்
அறிவின் துணையால் உலகமெல்லாம் புகழ்
அடைந்திடும் நாள் வருமே!

இனவெறி யூட்டி இவர்களின் வாழ்வை
எரியிட் டழித்திடினும் - உயர்
மனத்தின் வலியால் உலகினி லே புது
வாழ்க்கை அமைத்திடுவார்!

சத்தியம் வாய்மை சாய்ந்ததில் லைபுவி
சரித்திரம் கண்ட உண்மை! - அநீதி
எத்தனை காலங்கள் வாழ்ந்திடும்? நாமின்பம்
எய்திடும் நாள் வருமே!

# பொங்கி எழுந்திடுவோம்

நாட்டின் வருவாயில் நூற்றுக்கு எண்பது
நாங்கள் உழைத்ததடா - செல்வம்
ஈட்டி கொடுத்தநம் வீட்டிலோ வறுமை
இருள் நிறைந்ததடா!

நாட்டைக் கடனின்றி மாற்றுவோம் என்றவர்
தீட்டிய திட்டங்களால் - மலை
நாட்டுத் தொழிலாளர் கூட்டமெல் லாங்கடன்
மூட்டை சுமக்குதடா!

வெங்கலப் பாத்திரம் தங்கநகைகளும்
வித்து முடித்துவிட்டோம் - உயர்
மங்கலத் தாலியும் வித்து மனைவியின்
மனசையும் முறித்து விட்டோம்!

சோசலிஸம்மெனும் மோசலிஸத்தினால்
சோற்றுக்குப் பஞ்சமடா! - இங்கு
பேசும் இனமெல்லாம் பாட்டாளி வாயில் மண்
போடும் இனங்களடா!

உற்பத்தி என்றதோர் பல்லவி யைநாளும்
ஒப்பாரி வைப்பவர்கள் - நாட்டின்
கற்பகத் தருக்களாம் நம்மவர் சொரியும்
கண்ணீரைக் காண்கிலரே!

ஏழை அழுங்கண்ணீர் கூரிய வாளென்ப
தென்றும் வீண் போனதில்லை - அந்த
வேளை வருமென நாளை எண்ணி நாமும்
வீண்காலம் போக்குவதோ?

பஞ்சமும் நோயும் பட்டினிச் சாவும்
பாட்டாளி எங்களுக்கோ? - தினம்
கொஞ்சிக் குலவிக்கூத் தாடி மகிழ்வ தெம்
கூட்டாளி என்பவரோ?

பொங்கிடு! பொங்கிடு! பொங்கி யெழுந்திடு!
புத்துல கம்சமைப் போம்! - நாம்
இங்கு படுந்துயர் மங்கி மடிந்திட
பொங்கி எழுந்திடு வோம்!

# எந்நாளோ?

வறுமை என்னும் சேற்றில் புதைந்து
வாழ்வதற் கேதும் மார்க்க மின்றியே
சிறுமை யுற்றுடல் தேய்ந்து நலிந்து
தேயிலைக் காக யாவு மிழந்து
அருமை உயிரையும் அர்பணிக் கின்ற,
அந்தோ! என்னரும் மலையகத் தோழா!
உரமும் திறமும் உள்ளவ னாய்நீ
உரிமைகள் யாவும் பெறுவதெந் நாளோ?

உரிமை அற்றின் நாட்டினிற் பற்று
உள்ளவ னாக உழைத் தே வந்தாய்!
சிறுமைகள் கோடி உள்ளது அன்றி
சிரிதெனும் இன்பம் அடைந்தனை யோ? நீ!
எருமையைப் போல அடிமைச் சேற்றில்
என்றும் கிடந்து உழன்றது போதும்!
ஒரு அணி நின்று உரிமைகள் பெறவே
உணர்ந்தெழுந் தேநீ வருவது எந்நாள்?

ஏழையர்க் காக உழைப்பதெம் கடனென
எங்கும் மார் தட்டிய கூட்டமோ இன்று
கூழைக் கும்பிடு போட்டும் பொய்யாய்
கூட்டங்கள் தோறும் சமத்துவம் பேசி
நாளும் தம்முடல் வளர்த்திடு கின்ற
நடிப்புத் தலைவர்க ளால்எம் வாழ்வு
மேலுந் தேய்ந்திட விடோமினி, எனநீ
வீறுகொண் டெழுந்தே வருவதெந் நாளோ?

# உறவு வேண்டும்

ஊன் பொதியை சுமப்பவர்க்கு வாழ்வு உண்டாம்
உழைப்பவனைச் சுரண்டுபவர்க் கேற்றமுண்டாம்
வான்முட்டும் மாளிகைகள் பொன் பொருள்கள்
வறியவரின் உயிர்குடிக்கும் வஞ்சர்க்குண்டாம்
வீண்பெருமை பேசியிங்கு உடல் வளர்க்கும்
வீணர்களுக் கின்நாட்டில் மதிப்பு முண்டாம்
ஏனில்லை உழைப்பவர்க்கு இவையெலாம்?
இதுதானா நாம்காணும் சமஉரிமை

பொய்மைக்குத் துணைநின்று குடல் நிறைத்து
பொருளுக்குத் துதிபாடி புகழ் வளர்த்து
கயமைக்கு பேர்போன மனிதரெல்லாம்
கனவானாய் தனவானாய் வாழ்ந்திருக்க
நன்மைக்கே துணைநின்றின் னாடுவாழ
நாளெல்லாம் உழைத்தவர்க்கு இடமில்லையா?
உண்மைக்கும் அன்பிற்கும் தொடர்பில்லையோ
உழைப்புக்கும் படிப்புக்கும் உறவில்லையோ

உழைப்புக்கும் படிப்புக்கும் உறவில்லையா - வாழ்
உரிமைக்கும் எங்களுக்கும் உறவில்லையா
வளமைக்கும் வாழ்விற்கும் வழியில்லையா - எம்
வறுமைக்கும் ஏழ்மைக்கும் முடிவில்லையா
களைப்பிற்கும் சோர்விற்கும் கணக்கில்லையா - தூய
கடமைக்கும் பணிவிற்கும் மதிப்பில்லையா
தொழிலுக்கும் பொருளுக்கும் தொடர்பில்லையா உயிர்த்
தியாகமொடு சேவையிங்கு தேவையில்லையா

நீதியென்றும் நேர்மையென்றும் சொல்லித் திரிவார்
நிதம் உழைக்கும் பேரைக்கண்டு எள்ளி நகைப்பார்
சாதிரெண்டு என்றுபல சான்று கூறுவார்
தாழ்ந்தவர்கள் எனப்பலரை தள்ளிமிதிப்பார்
மேதியென நாள் முழுதும் நீரில் கிடந்தே
வேலைசெய்யும் ஏழைகளை வெறுத்தொதுக்குவார்
மேதைகள் நாம் என்றுபல விளம்பரஞ் செய்தே ஒரு
வேலையற்ற பேர்கட்கிந்த நாடு சொந்தமா?

உழைப்புக்கும் படிப்புக்கும் உறவு வேண்டும் - வாழ்
வுரிமைகள் பெற்று நாம் வாழ வேண்டும் - ஏய்த்து
பிழைப்போரின் வாயில்மண் விழ(வும்) வேண்டும் - சூது
பொய் வஞ்சம் பகை யாவும் ஒழிய வேண்டும்
துளிக்கூட வேற்றுமைகள் இன்றி மக்கள்
சுதந்திரமும் சமத்துவமும் பெறவும் வேண்டும்
மலைமக்கள் வாழ்விங்கு சிறக்க வேண்டும்
மறுமலர்ச்சி யவர்வாழ்வில் பூக்கவேண்டும்

# மலையகப் பெண்ணாள்!

குன்று தோறும் ஏறிடுவாள்
எங்க மலைப் பெண்ணாள்! - கடுங்
குளிரினிலே கொழுந்தெடுப்பாள்
எங்க மலைப் பெண்ணாள்!

பேய்மழையில் காற்றினிலே
எங்க மலைப் பெண்ணாள்! - வளம்
பெருக்கிடவே உழைத்திடுவாள்
எங்க மலைப் பெண்ணாள்!

தனக்கெனவே வாழ்ந்தி டாதாள்
எங்க மலைப் பெண்ணாள்! தேத்
தளிரைக் கிள்ளி ஈழமதை
வாழவைக்கும் பெண்ணாள்!

பால் மறக்கா குழந்தை தன்னை
பதற வைத்தும் மலையில் - இரு
தோள் வலிக்க கூடை சுமந்து
தொழில் புரியும் பெண்ணாள்!

படுப்பதற்கு கிழிந்த பாயும்
படங்கும் இல்லா பெண்ணாள்
உடுப்பதற்கு கிழிந்தி டாத
சேலையில்லா பெண்ணாள்!

உழைப்பிற் கேற்ற கூலியில்லாள்
உயர்ந்தமலைப் பெண்ணாள்! - நாளும்
பழிப்பும் ஏச்சும் பேச்சும் கேட்டு
பதைக்கும் நெஞ்சப் பெண்ணாள்!

தேயிலைக்கும் வாயிருந்தால்
சொல்லும் இவள் கதையை - நாள்
தோறும் எண்ணி அழும் இவளின்
துயர் மிகுந்த நிலையை!

# பொங்கி எழு சிங்கமென!

மலைநாட்டுத் தமிழினமே ஒன்று சொல்வேன் கேளாய்! உனை
வட்டமிடும் கூட்டமெல்லாம் வஞ்சகரென்றறிவாய் நீ
சிலைபோல உணர்வற்ற கல்லானதாலே - தங்கள்
சீரான வாழ்வுக்கு பொருள் சேர்க்க கட்சி
வலை போட்டு பிடித்துன்னை வைத்திருக்கும் கூட்டம் தம்
வாழ்விற்குப் பலியாக்கி வந்ததை நீ உணர்வாய்
பலியாடு போல நீ தலைகுனிவதோடா?
பாய் புலியாய் முன்னே வா பகைமை பறந்தோடும்

தலைவரெனச் சொல்லிப்பெருந் தலைகளிங்கு வந்தார்
தனக்குவியல் சேர்ப்பதிலே நாட்டமெலாங் கொண்டார்
பல்லகரம் சேர்த்துப் பெரும் பதவிகளும் கண்டார்
பாட்டாளிக் கூட்டமெல்லாம் என்ன சுகம் கண்டார்?
விலைபேசி எம்முரிமை விற்றுப் புகழ்தேடி நடு
வீதியிலே நிற்க வைத்து அரசவைக்குச் சென்றார்
மலைநாட்டுச் சகோதரனே உன் கடமை என்ன? உன்
மரபினர்கள் மானமுடன் வாழ்வதற்கு எண்ணு

மண்ணதிர விண்ணதிர வாய்ச்சிலம்ப மாடி
மாண்டொழிந்த பழைமையினை இன்னுமிங்கு கூறிக்
கண்ணெதிரே கொடுமை கண்டும் கற்சிலையா மாறிக்
காரேறிப் பவனிவரும் கனவான்கள் கூட்டம்
உன்னுதிரம் உறிஞ்சியுடல் உப்புகின்றதை நீ
ஓர் நிமிடம் சிந்தித்தால் உன்வாழ்வு மலரும்!
புண்ணதனில் வேல்பாய்ச்சப் பொறுத்திருப்ப தோடா?
பொங்கியெழு சிங்கமென எந்தன் மலைத்தோழா!

சூதாட்டக் காய்போல இங்கு மங்கும் மாற்றி
சூழ்ச்சியினால் இடுகின்றார் சீமான்கள் கூட்டம்
நீதானா இங்கவரின் விளையாட்டுப் பொம்மை?
நினைத்தாலே நெஞ்செல்லாம் வேகின்ற தேடா!
வேதாந்தம் பேசியிது விதியென்று நம்பி
வீண்காலம் கழித்ததினிப் போதும்விரைந் தெழடா!
மாதாந்தம் நீகொடுக்கும் வரிஇவர்க்கு எதற்கு?
வையகமெல் லாமிவர்கள் உலாவருவ தற்கோ?

# ஆசை மச்சானுக்கு!

ஆசை மச்சான் உங்கள் கால்களுக்கு - பல
ஆயிரங்கோடி நமஸ்காரம் - செய்து
ஆசைமனைவிகா மாச்சி எழுதிடும்
அன்புக் கடுதாசி என்னவென்றால்,

ஆண்டவன் கிருபை யாலும் உங்கள்
ஆசிர் வா தத்தாலும் நாங்கள் சுகம்! - கடல்
தாண்டி இருக்கிற உங்க சுகத்துக்குத்
தான் கடவுளை வேண்டுகின்றேன்!

கட்டிய மனைவி நானிருக்க - செங்
கரும்பாக ரெண்டு பிள்ளையிருக்க - எம்மை
விட்டுப்போன பதினைஞ்சி வருசமா - நான்
வேதனைப் பட்டதை யாரறிவார்?

‘காசு பணத்தோடு வந்துவிடு - இங்கு
காணி பூமி வாங்கி வாழ்ந்திடலாம்!’ - என்ற
ஆசை நெறஞ்சஉம் காயிதம் கண்டு நான்
அழுவதா? சிரிப்பதா? தெரியவில்லை.

இலங்கை நெலமை தெரியாமல் - நீங்க
எழுதியிருப்பதை பார்த்துவிட்டு - உமக்கு
வெளங்கப் படுத்தயிந் தக்கடுதாசியில்
வெவரமா சொல்லுறேன் கேளுமச்சான்!

பாம்பும் புலியும் படுத்திருக்கும் - பெரும்
பாழான காடெல்லாம் சீருபண்ணி
தேன்சொரியும் மலர்ச் சோலைகளாய் நாங்க
செய்துவச்சும் பலன் இல்லை மச்சான்!

தேயிலை ரப்பரும் நட்டு வச்சோம் - இந்த
தேசம் வளம்பெற நாமுழிச்சோம் - ஒரு
நாயும் மறக்காது நன்றி மச்சான்! - இந்த
நாட்டு மனுசர் மறந்து விட்டார்!

நூறு வருசமா நம்ப இனம் - இங்கு
நெஞ்சத்தில் வஞ்சனை இல்லாமல் - தேயிலை
தூறுக்கு உரமாய் ஆகி வந்தும் - இந்த
தேசம் நமக்கென்ன செஞ்சிருச்சி?

உச்சிமலையிலே வேலைசெஞ்சோம்! - அங்கு
ஊத்தும் மழையிலே நனைஞ்சிருந்தோம்! - சிறு
குச்சிகுடிசையில் வாழ்ந்திருந்தோம் - நம்ப
கூட்டம் இந்நாட்டிற்குப் பாரமானோம்

வாழும் உரிமைகள் ஏதுமில்லை - நாங்க
வாழ்வதற்கும் நல்ல வீடுமில்லை,
நாளும் பொழுதும் கவலைப்பட்டு - இங்கு
நாயா உழைப்பதில் ஓயவில்லை!

ஏடுபடிக்க நினைச்சதில்லை - நாலு
எழுத்தும் படிக்க தெரிஞ்சதில்லை - ஆனால்
பாடுபட்டோம் பிறர் வாழ்வதற்கே
பட்டினி கிடந்தோம் பராரியானோம்

ஏணியைப் போலவே நாமிருந்தோம் - பலர்
ஏறிச் செல்லபடி நாமானோம் - இன்னும்
ஆணியடிச்சது போல அசையாது
அப்படி யேயிருக் கோம்மரமாய்!

சங்கங்கள் ஏராளம் உண்டு மச்சான்! - நாங்க
சண்டையும் சாடியும் போடுதற்கு
எங்கப் பிரச்சினை தீர்ப்பதற்கோ - இங்கு
யாரும் மெனக் கெடவில்லை மச்சான்

பாட்டாளிக்காக உழைக்கிறோம் நாமென்று
பட்டயங் கட்டியே வந்தவர்கள் - பண
மூட்டைகளாகவே கட்டிக்கிட்டார் - எங்க
மூஞ்சியி லேகரி பூசிவிட்டார்!

ஏடுகளில் பல மேடைகளில் - பலர்
எழுதியும் பேசியும் வந்தாங்க - இந்த
நாட்டின் முதுகு எலும்பு நீங்களென்று
நன்றாகப் பேசி நடிச்சாங்க!

கொழம்பு தண்ணிக்கும் பருப்புமில்லை - கஞ்சி
கொதிக்க வைக்கவும் அரிசியில்லை - இன்று
செலவுக்கும் கையிலே காசுயில்லை - எங்க
சேதியோ இப்படி இருக்கு மச்சான்!

அன்றாடம் காய்ச்சி குடிப்பதற்கே நாங்
ஆளாப் பறக்குற நாளையிலே - 'பணங்
கொண்டாந்திடு' என்று சொல்லுறீங்க - இங்கு
குவிச்சியா பணத்த வச்சிருக்கோம்?

தாயாநெனைச்சி நாம் வேலைசெஞ்ச அந்த
தங்கமலையக மண்ணைவிட்டு - நாளை
போயாக வேணுமாம் அந்தமான் என்றொரு
பூமிக்கு தோட்ட சனங்களெல்லாம்!

தோட்ட சனங்கள் வயித்தெரிச்சலை
சொல்லத் தொடங்கினா வாய்வலிக்கும் - இந்த
ஏட்டிலே கொஞ்சம் எழுதிவிட்டேன் - மீதி
இன்னொரு சமயம் எழுதுகிறேன்!

..1979..

# கவிபாடு மச்சான்!

கோயிலை எங்கெங்கும் கட்டுறிங்க! அதன்
கும்பாபி ஷேகமும் பண்ணுறிங்க! கல்வி
கோயிலைத் தோட்டங்க தோறு மமைத்திட
கொஞ்சமும் நெனைச்ச துண்டோ? மச்சான்!

சாதிப் பிரிவுகள் வைத்துக்கொண் டேதர்ம
சாத்திரப் பெருமை பேசுறிங்க! நீங்க
ஓதுகின்ற நீதி நியாயமெல் லாமிங்கு
ஒருத்தருக் கில்லை பொதுவாம் மச்சான்!

எந்த இனங்குல மாயிருந் தாலென்ன
எல்லோரும் மனித வர்க்கம் மச்சான்! - நாம்
சொந்தச கோதர் போலவே வாழ்ந்திடில்
சொர்க்கமிந் நாடு கேளுமச்சான்!

மாதர்க்கு உண்டு சுதந்திரம், என்று, முன்
மாகவிப் பாரதி சொல்லி வச்சார் - மலை
மாதர்க்கு உண்டோ சுதந்திரம் இன்றுங்கள்
மனசுல சிந்திச்சிப் பாரு மச்சான்!

பெண்கள் விடுதலை என்றுநிதம் சும்மா
பேசுவதில் பயன் இல்லை மச்சான்! உங்க
பங்கமில் லாஉயிர் பாட்டுத் திறத்தாலே
பாலிக்கனும் மலைநாடு மச்சான்!

பெண்கள் விடுதலைக் காக கவிதையில்
பேசியே பாவலன் பாரதி யார் எனில்
எங்கள் மலையகப் பெண்கள் விடுதலைக்
கெத்தனைப் பாரதி உண்டு மச்சான்?

மானஞ்சிறிதாக வாழ்வு பெரிதாக
வாழும் மனுசர்கள் ஏராளம் இந்த
ஈன மனுசர்கள் உள்ளவரை எமக்
கேது விடுதலை சொல்லு மச்சான்?

தேயிலை யாம்பசு மேடையி லேநடம்
செய்யா தொழிந்திடில் எம்கரந்தான்
பேயுல வுஞ்சுடு காடென தோட்டங்கள்
போகும், இதை கவி பாடு மச்சான்!

# புதுயுகம் காண எழடா!

இன்னுமா தூக்கம்? எழும்படா தம்பி
இதுநவ யுகமடா தம்பி
முன் செலும் வேகம் உலகினர் நெஞ்சில்
முகிழ்த்தது மலர்தலைக் காண்பாய்
செந்நெல் விளைத்தவன் வெறும்வயி றோடு
சோர்ந்து பசியில் துடிக்க
இன்னொரு மனிதன் உழைக்காதிருந்தும்
இன்பத் தில்திளைப் பதுவோ?

நீதியும் தர்மமும் நித்தமும் பேசி
நிதமுழைப் போர்தமை வதைப்பார்
சூது வழியினில் ஏய்க்கும் மதியினர்
சொல்லும் காரணம், விதியாம்!
"ஏதும் சிந்திக் காதே இறை வன்
இட்ட ஆணை இதுவாம்"
பேதை போல இதைநம் புவதோ?
புதுயுகம் காண்பதற் கெழடா!

'இறைவன் தன்மையை,' இன்துறக் கேட்போர்
எவரும் மயங்கிட சொல்லுவார்!
நறுந்தமிழ் மொழியில் ஏடுகள் தோறும்
நயமுற எழுதிக் குவிப்பார்:
"பிறருக் கென்றே இவையெலாம்" என்றும்
பேணார் சிறிதும்தம் வாழ்வில்:
கறைபடர் நெஞ்சக் கயவரை ஒழித்து,
காண்பாய் புதுயுகம் தம்பி!

சாதிகுலங்கள் சமயம் இனங்கள்
தமதெனில் சேர்ந்துற வாடும்
மேதி பனிதரை விடமனத் தீயரை,
வேரற ஒழித்திடும் செயலே
நீதி, புதுயுகத் தர்மம், இதைநீ
நெஞ்சில் பதித்தெழ தம்பி!
சாதி சமயம், தாழ்வுயர் வில்லா
சமத்துவப் பூங்கா சமைப்பாய்!

# அழகென்று சிரிக்கு மிங்கே!

பஞ்சு முகில் தூங்குகின்ற
பசிய நெடும் வரைகளிலே
கொஞ்சி யிசை பாடி யின்பங்
கூட்டுங் குளிர் அருவிகளும்,
மஞ்சையென அசைந்து வரும்
மலையகத்து மாதர்களை
அஞ்சலி செய் மரங்களெலாம்
அழகென்று சிரிக்கு மிங்கே!

பொன்னுருக்கி வார்த்து விட்ட
பூமியிலே எங்கள் மலைப்
பெண்ணுருகி விட்ட கண்ணீர்
பேராறாய் ஓடுவதும்
தன்னுருவம் மாற்றி மலைத்
தாயவட்கு எழிலூட்ட
மண்ணுருவம் இவர்வாழ்வில்
அழகென்று சிரிக்கு மிங்கே!

பச்சை வண்ணப் பட்டுடுத்தும்
பாவை யென தேயிலையாம்
இச்சை யுறும் துகிலுடுத்தும்
எழில் மிகுந்த குன்றுகளும்:
மிச்ச மில்லா வாழ்வினிலே
வேதனைகள் மிஞ்ச சதா
அச்ச முறும் மக்கள் நிலை
அழகென்று சிரிக்கு மிங்கே!

ஓட்டைத் தகரம் அதில்
        ஒழுகும் மழை நீரெல்லாம்
வீட்டைக் குள மாக்குமிவர்
        விழிகளும் நீர்க் குளமாகும்
மூட்டிய அடுப்பில் தீ
        மூளாது புகை மூளும் - மலை
நாட்டிலிக் காட்சியெலாம்
        அழகென்று சிரிக்கு மிங்கே!

        ஒட்டி யுலர்ந்த கன்னம் - அதன்
                உள்ளே புதைந்த விழி
        பட்டை யுரிந் தேவெயிலில்
                பட்ட மரம் போல்கைகால் - தங்க
        கட்டியெனும் பொன்னுடலும்
                காய்ந்த சருகாகமலைத்
        திட்டினில் வாழ் பெண்கள்நிலை
                அழகென்று சிரிக்கு மிங்கே!

கம்பளியும் சாக்குந்தான்
        கட்டையிலே போகும் வரை
வெண்பஞ்சு மெத்தை யிவர்
        மேனியெலாம் கருகிடவே
நம்பிக்கை யோடு ஒரு
        நாள்முழுதும் பாடுபட்டு,
கும்பிநிறை யார் வாழ்வில்
        அழகென்று சிரிக்கு மிங்கே?

..1968..

# காலம் சிரிக்கும்

வாரிதி யில் என்றும் - பெய்யும்
மாரி யெனப் பொருளை
வாரி யிறைத்திடுவாய்! செல்வம்
வைத்திருப் போர்களுக்கே!
பாரிவள் ளல் எனவே பொய்ப்
பட்டங்கள் பெற்றிடு வாய்!
காரி உமிழுமடா! எதிர்
காலம் உனைப் பார்த்து!

உன்னலம் பேணுதற் கே பிறர்
உழைப்பைச் சுரண்டிடுவாய்
உன்னிலும் மற்றவர்கள், வாழ்வில்
உயர்வதை வெறுத்திடு வாய்!
பொன்னென்றும் பட்டென்றும் - பெட்டியில்
பூட்டி மகிழ்ந்திடு வாய்! அட
சின்ன மதியுடையாய்! காலம்
சிரிக்கும் உனைப் பார்த்து

பொய்மை புகன்றிடுவாய் - நெஞ்சில்
பொறாமை கனல் வளர்ப்பாய்!
மெய்மை யுடையவன் போல் -பிறர்
மெச்ச நடித்திடு வாய்!
நொய்மை யுடையவரை மேலும்
நோக அடித்திடுவாய்!
கயமை புரிவதிலோ உனைக்
காட்டிலும் யாவரடா!

# மலைக்கொழுந்தி வெளியீட்டு விழா

தேனினும் சுவை தரும்
செந்தமி ழாலே
வான் மலை நாட்டின்
வளர்த்தமிழ்க் குடியின்
வருகையும், வளர்ச்சியும்
வாழ்வியல் நெறிகளும்
வாழ்ந்த அவல
வாழ்க்கையின் வடுக்களும்
நேர்ந்த கொடுமையின்
நெஞ்சத் துடிப்பையும்
ஆய்ந்தும், அளவிட்டும்,
தொகுத்தும், எழுத்தில்
வடிக்கும் (இவர் ஓர்) சாரல்
இலக்கியச் செம்மல்

ஈழத் திலக்கிய
பரப்பில், மலையக
இலக்கியம் வகித்த
பங்கினை, பான்மையை
சிறப்புற நூல்களாய்
தொகுத்துத் தந்தவர்.

சாரலில் தோய்ந்து
தன்மடி மீதெலாம்
தேயிலைத் தளிர்களாம்
ஆடை அணிந்த
பசிய மலைகளின்
பண்பினை, ஆங்கு
வதியும் மக்களின்
மனக்குமு றல்களை
அடிமைச் சிறைகளில்
ஆற்றொனாத் துன்ப
வடுகள் தாங்கிய
மனத்தின் வதையை
சொல்லால் எழுத்தால்
சோரம் போகாது
ஆழப் புதைந்த
தேயிலைச் செடியின்
அடியிற் புதைந்த ஓர்
இனத்தின் வாழ்க்கையை

சத்திய வரிகளாய்
தந்தவர் சீ.வி யின்
நெஞ்சக் கனவையும்
நேர்மைத் திறனையும்
கொஞ்சும் தமிழில் கோர்த்து
தந்தவர் - இனிய
நூலாய் தந்தவர்
நேயர் சாரல்

இந்த மலையக
எழுச்சிக்கு முதன்முதல்
வித்திட்டு அதனை
முளை விட தனது
சித்தத்தை சிந்தனை
செயலை அர்ப்பணித்தும்
விளம்பரப் பிரியரால்
வெகுதனக் காரரால்
போலி முகங்களால்
பொய்யுரை தலைமையால்
மறைக்கப் பட்ட
மாமனித ராம்
நடேச ஐயரை
நமக்குக் காட்டியவர்

நாட்டார் இயல் மலை
நாட்டினர் வாழ்வியல்
என்றெலாம் நூல்கள்
எமக்குத் தந்தவர்
எங்கள் இலக்கியம்
ஏற்ற முற்றிட
சாரலின் இன்னொரு
தேனடை இதுவாம்!

மலைக் கொழுந்தி
எமக்கிவள் கொழுந்தியாய்
உறவு கொள்ளும்
உணர்வினைத் தருபவர்
இருபது வருடமுன்
இவரின் இதயக் கா
மலர்ந்த பூக்கள்

மணங்குன்றாப் பூக்கள்
மனப்பெட்டகத்துள் வைக்கும்
வாடாப் பூக்கள்
உழைப்பது ஒன்றே
உயர்ந்த பணியாய்
ஊனுடல் மெலிந்தும்
வறுமையே பிணியாய்
விதியாய் அமைந்தவர்
வேறு சுகங்களை
கனவிலும் கருதா
கடை நிலை மாந்தராய்
எட்டடிக்கு ள்ளெ
இருட்சிறைக் கைதியாய்
கொட்டடி ஆடுகள்
மாடுக ளாக
வாழ்ந்த மக்களின்
வாழ்வியல் அவலம்
தோய்ந்த கதைகள்
சுகம் பெரும் மார்க்கம்
தேரும் கதைகள்
சோர்விலும் அயர்விலும்
வைகறைப் போதில்
வரும் ஒளிக் கீற்றாய்
இதயத் தே எழும்
இனிய காதல்
உணர்வும், சமூக
உறுத்தலும் மீறி
எழுந்திடும் புதிய
உணர்வின் அலைகளும்

உச்சிப் பொழுதின்
வெயிலின் சூட்டாய்
உரிமை வேட்கை
கனலும், மனங்களும்
இவரின் படைப்பில்
எழிலுறும் சிறப்பாம்
புதுப் புனல் தொடங்கி
குவார்டஸில் முடியும்
பதினான்கு கதைகளும்
பாங்குறப் படித்து
திறனாய்ந் தறிந்து
சொல்லும் பக்குவம்
எனக்கில்லை, யானோர்
இன்கவிப் பிரியன்
ஒருசில கதைகளில்
உணர்ந்ததை கவிதை
வரிகளில் கூறி
மனங்களிப்
புறுவேன்

காதலை மனித வாழ்வின்
கறைபடா உணர்வை ஜீவ
கீதமாய் இசைக்கும், ஆற்றின்
புதுப்புனல், ஒலியோர் கீதம்
காதலி வேறொருவன்
மனைவியாய் ஆனபோது
தூயநற் காதல் தோய்ந்த
நெஞ்சமோ நிறையும் அன்பில்
காதலி விதவை வயிற்
கனத்திடும் நிலையில், இந்த
பிழையிலா வகையில் காட்டும்
சாதுர்யம் இவர் பேனாவின்
தனித்திறம் புதுப்புனல்தான்!

எத்தனை ஆண்டு கால
வாழ்விதில் அடிமைச்சின்ன
முத்திரை பதிந்து நாளும்
மிதிபட்ட நெஞ்சில் முட்டி
பீறிட்டு எழும் உணர்வின்
பெருவேகம் தடையுடைக்கும்
தேக்கத்தால் ஆற்றின் வேகம்
சிலபோழ்து குறையும், உயர்
நோக்கமே குறியாய் கொண்ட
நெஞ்சினில் எழும் உணர்வின்
போக்கினால் தடைகள் சாயும்
பொய்மைகள் அடித்துச்
செல்லும்
ஆறுகளோ பின்னோக்கி
பாய்வதில்லை

இளமையில் என்றோ ஓர்நாள்
ஏற்பட்ட களங்கம் இவள்
அறிவினில் முதிர்ச்சி யின்றி
ஆசைகள் நிறைந்த நெஞ்சம்
இளமையில் எழும் கிளர்ச்சி
இச்சைக்கு வசமாய் விட்ட

பருவத்தின் மயக்கம் வாழ்வுப்
பாதையில் தவறும் பெண்ணின்
நிலையினை, நெருப்பாய் அவள்
நிமிர்ந்தெழும் போதும் சூழும்
பழியினை வசவை கேட்டு
பதறிடும் உளத்தை, கொட்டும்
கண்ணீரால் மாசு எல்லாம்
கரைத்திடும் மனத்தை இவர்
சொல்லிடும் லாவகத்தில்
சுடர்விடும் இவர்கை வண்ணம்
கண்ணீரில் கரைந்த இரவு என்
கண்ணீரிலும் நீர் துளித்த இரவு

மொத்தத்தில் இவர் கதைகள்
முற்றும் நான் படித்த போது
பெருந்தீயாய் எழும் புரட்சிப்
போர்க்குரல் பேரொலியாய்
எழுந்திடவில்லை பருவக்
காதலின் பெயரால், மேனிக்
கவின் காட்ட, நிர்வாணத்தின்
காட்சிகள் இல்லை. சூடு
ஏற்றிடும் விரஸ, அணி
எழில் வரிக் கோலமில்லை
இரவினில் அகல் விளக்கை
ஏற்றிவைத் தது போல் ஒளி
படர்ந்திடும் கதைகள், இன்னும்
திரியினை தூண்டில் மேலும்
சுடர்விடும், மேலும் இவர்
நிகழ் காலம், இன்று எங்கள்
நிலைகளை, கதைக ளாக்கும்
தகைமை தான் இவர்க்கு
உண்டு
தருவார், நாம்
எதிர்ப்பார்க்கலாம்.

நம்பிக்கை யுண்டு நமது
இலக்கியப்
பூங்கா செழித்து புதுப்புது
பூக்கள்
பூத்துச் சிரிக்கும்

புதுமணங்கமழும்
மலையக இலக்கிய
கால வளர்ச்சியில்
வளம் பெரும் நடேச
ஐயர், சீ.வி யின்
சகாப்தம் உண்டெனில்
தகும் ஆம்! சாரலின்
சகாப்தம் இதுவென
சாற்றிடும் உரைகள்
கேட்டிடும் போது நெஞ்சில்
கிளர்ந்தெழும் மகிழ்ச்சி அலை
வாடாத பூ முடித்த
வஞ்சிமுகம் மலர்வதைப் போல
சூடிக் களிப்பால் இச்
செந்தமிழ்ப் பெண் இலக்கியப்பூ!

ஆடல் மகளிர் தம்
அசையும் கால் பாதசரம்
பாடும் மலைக ளெல்லாம்
சாரல் இசைக்கும், இலக்கிய
சங்கீதம் கேட்டிடலாம்

நேற்றும் இன்றும்
நிலைத்த பேர் சாரல்
நாளையும் இவர்பேர்
ஆலத்தரு வாய்
வளர்ந்து படர்ந்து
செழித்திட, எந்தன்
கவிதைப் பூக்களை
கரங்களால் தூவி
மனத்தால் வாழ்த்தி
மகிழும் அன்பின் -

குறிஞ்சிதென்னவன்.

(நம்பொடை தமிழ் மகா வித்தியாலயத்தில் - 11-06-1995 இல் நடைபெற்ற மலைக்கொழுந்தி சிறுகதை தொகுதி அறிமுகவிழாவில் கவிஞர் குறிஞ்சிநாடன் தலைமையில் பாடிய வாழ்த்துப்பா)

# தேநீர் க(வி)தை

உயர்ந்த மலைகளில்
சரிவுகளில்
ஓங்கிச்
செழித்திருக்கும்
தேயிலைச் செடிகளில்
பிறந்தோம்!
தென்றலில்
ஆடிக்களித்திருந்தோம்,
காலனின்
பாசக்கயிறாம்
காரிகையின்
காந்தல் விரல்கள்
எமது
கழுத்தை முறித்து
கூடைக் குழியில்
எறிந்தன.

கொலைக்கூட
தொழிற் சாலையாம்
பூசா முகாமின்
உப்பரிகையின்
படங்கு பஞ்சனை விரிப்பில்
வெப்பக்காற்று
இளம் சூட்டின்
அரவணைப்பில்
கண்ணயர்ந்தோம்,

விடிந்தது பொழுது,
விழித்தோம்
இளமை மேனி
எங்கு போயின?
துவண்ட உடலாய்
சோர்ந்து கிடந்தோம்,
வாடி சோர்ந்த
வயோதிகத்தன்மை
கால துாதராய்
கருத்த உருவங்கள்
வந்து எங்களை
வாரி எடுத்தன.
அன்பென நினைத்தோம்

அந்தோ!
இயந்திர ராட்சதன்
கோரபற்களில்
கொடூரமாய்
அரைபட்டோம்
உதிரச்சாறும்
உடலின்
தசைத்துகள்களும்
வேறாக்கப்பட்டு
சூளை அடுப்பில்
தீய்ந்து கருகி
சாவின் கைகளில்
சங்கமமானோம்.

அன்றே எங்கள்
ஆவி முடிந்தது:
ஆயினும் எங்கள்
ஆன்மா அழியவில்லை
அது
விழித்து கொண்டிருக்கிறது
இன்னும் சிறுசிறு
இயந்திர அரக்கர்கள்
மென்று கடித்து
வெளியே துப்பினர்
சவப்பெட்டிகளாம்
சதுரப் பெட்டிகளில்
அடக்கம் செய்து
மூடி போட்டு
முத்திரை குத்தினர்.

தரத்தால் பிரிந்து
பெட்டிச் சிறைகளில்
பேசாத மௌனிகளாய்
லொறிகளில்
புகைவண்டிகளில்
யாத்திரை செய்து
கடலின் மேனியில்
கப்பலில் ஊர்ந்து
உலக சந்தைக்கு
ஊர்வலம் சென்றோம்

எங்கோ ஓர்
எழில்மிகு அரண்மனை,
சீமான் வீட்டு
தேனீர் கோப்பையில்
குருதி
நீராய் வழிகிறோம்
சுவைத்த சீமான் சொல்லும்
வார்த்தை
“ஆஹா என்ன
அற்புத சுவை!”
தேனாய் இனிக்கும்
தீங் குரல் கேட்டு
எங்கள் ஆன்மாவின்
நெஞ்சம்
குளிர்கிறது, சொர்க்கத்தின்
வாயிலை
மிதித்த சுகம்,

நான்
பிறந்த மண்ணின்
மைந்தர்களின்
உயிர்களுக்கும்
உடல்களுக்கும்
இல்லாத
பெருமை, மதிப்பு,
எனது உடலின்
துகள்களுக்கு!

# நண்பனுக்கு, ஒரு மடல்

ஓ.....
நண்பனே!
உனது சுயத்தை
தரிசிப்பதற்கும்
உன்னைப்
புரிந்து கொள்வதற்கும்
எனக்கு
நான்கு
தசாப்தங்களல்லவா
போய் விட்டன!
இதுவரை, உன்னை
புரிந்து கொள்ளாமல்
போனதற்கு
எனது அறிவீனமா?
உனது வெளிவேடமா?
காரணம்!

அந்தஸ்து
கௌரவத்தில்
அதிகாரப் போதையில்
தலைக்கனத்துக்கிடக்கும்
நீ.....
நடந்து வந்த, பாதையை
சற்று
திரும்பிப் பார்ப்பாயா!
அதை உனக்கு
ஞாபகப்படுத்துவதற்கே
வருந்துகின்றேன்!

உனது உணர்வுக்கு
நான்
ஏணியாகவல்லவா
பயன்பட்டேன்
ஏணியைத் திரும்பி
பாரா விட்டாலும்
உதைத்துத்
தள்ளாமலாவது
இருந்தாயா?

உனது
வாழ்க்கைப் பயிர்
தழைத்துச் செழிப்பதற்கு
எனது
உழைப்பையும்
உதிரத்தையும்
உரமாகவல்லவா
கொட்டினேன்!
உனது, வாழ்க்கைத்
தீபம், சுடர் விட்டு
பிரகாசிக்க
நெய்யாகவல்லவா
பயன் பட்டேன்,
நீ.........ஆபத்தில்
சிக்கியபோது..........
எனது
தோள்களிலல்லவா
தாங்கினேன்.

ஏழ்மையின்....
எல்லைக்கோட்டில்
நான்!
வளமையின்
வஸந்தத் தேரில்
பவனி வரும்
நீ......!
தன்னலக் கோட்டையில்
உன் - தர்பார்
பொது நல போர்க்களத்தில்
என் - போராட்டம்,
வஸந்த மலர்களின்
மணத்தில் திளைக்கும்
மமகாரப் போதையில்
நீ.....!
மலர்களை உதிர்த்து விட்டு
காய்ந்து நிற்கும்
செடி, நான்....!

பிறரின்......
உழைப்புத் தணலில்
குளிர் காய்ந்து
கொண்டிருக்கும், உனக்கு
எரிந்து தணிந்து
நீறு பூத்துக் கிடக்கும்
நெருப்பான, எனது
நெஞ்சத்தாகம்
தெரியாதுதான்!

பதவிச் செருக்கும்
அதிகார மிடுக்கும்......!
இன்று, உன்
கண்ணை மறைத்தாலும்
என்றாவது ஒரு நாள்
உண்மை
உனது - இதயக்
கதவை
திறக்காமலா போய்விடும்
அன்று.....
பாவமன்னிப்புக்காவது
உனது
வேடச் சுமைகளை
இறக்கிவைப்பாயா!

# போலிகள்

நீ
ஒரு எழிலோவியம்
அதனால்தான்
என்
இதய அறையில் மாட்டி
அழகுப்பார்க்க
விரும்புகிறேன்!

நீ......
ஒரு இனிய கவிதை
அதனால் தான்
உன்னை
நான் மட்டுமே
படித்து ரசித்து
சுவைக்க
விரும்புகின்றேன்!

நீ....
ஒரு கோகினூர் வைரம்
அதனால் தான்
உன்னை
என்
மனப்பேழையில்
பூட்டி வைத்து
பாதுகாக்க
விரும்புகின்றேன்!

நீ.....
ஓர் அற்புத ராகம்
அதனால் தான்
உன்னை
எனது
இதய வீணையில் மட்டுமே
இசைக்க நினைக்கின்றேன்!

நீ....
ஒரு உச்சிமலையின்
இனிய ஊற்று
அதனால் தான்
உன்னை
எனது
மன வயலின்
காதற் பயிருக்கு
மட்டுமே
பாய்ச்ச நினைக்கின்றேன்

இப்படி யெல்லாம்
எனக்கு
காதற் கவிதைகள்
எழுதிய
காதல (க) ன்
நான்
சீதன தேரேறி
வந்தால் தான்
திருமாங்கல்யம்
சூட்டுவானாம்
அட போலிகளே...!

..1987 பெப்ரவரி குன்றின்குரல் மலர்07..

# லயக்குழந்தைகள்

வீடமைப்புத் திட்ட
அன்னை
பெற்றெடுக்கும்
இல்லக்குழந்தைகள்
மின்சார
ஒளியிற்குளித்து,
உல்லாச
உபகரண
அணிகள் பூண்டு
செழித்து வளர்கிறது...
வெள்ளையன்
காலத்தில்
பிரசவிக்கப்பட்ட
லய அறைக்
குழந்தைகளோ
இருளில் குளித்து
ஓட்டைத் தகர
பரட்டைத் தலைகளுடனும்
இடிந்த
சுவர்ப் புண்களுடனும்
குப்பி விளக்கு
கந்தல் துணியால்
இருட்டு அழுக்கை
இன்னும்
துடைத்துக்கொண்டிருக்கின்றன!

# நீ வாழ்வதால்தான் நாங்கள் வளமோடு வாழ்கின்றோம்!

எம்மை
வாழ்விக்க வந்த
வள்ளலே
நீ வாழ்க!
நீ வாழ்வதால்தான்
நாங்கள் வளமோடு வாழ்கின்றோம்!
உனது
பேரைச் சொல்லித்தான்
உனது
பேருருவைக் காட்டித்தான்
இந்த
அப்பாவி உழைப்பாளர்களின்
உதிரத்தை
அட்டைகளாய் உறிஞ்சிக் குடிக்கின்றோம்!
அவர்களின்
வேதனைக் குரல்கள்
உனது செவிகளில்
விழக்கூடாது என்பதற்காகத்தான்
உனது நாம மகிமையை கூட்டங்களில்
பஜனையாகப் பாடுகின்றோம்!
கண்ணனின்
கீதையைப்போல்
இப் பேதை மக்களிடம்
உன் நாமப்
போதை மயக்கம்
என்றும் நிலைத்திருக்க
நீ... குன்றின் மேல்
ஏற்றி வைத்த தீபம் போல்
சுடர் விட்டுப்
பிரகாசிக்க வேண்டும்!
அப்பொழுதுதான்....
தீபத்தின் அடியில் படிந்திருக்கும்
இருளின்
நிழலிலே எங்களின்
திருவிளையாடல்களை
தொடர்ந்தும் நடத்த முடியும்.

நீயோ
மதியை வளர்க்க
அறிவுக் கூடங்களை
திறந்து வைக்கின்றாய்,
நாங்களோ
மதுச் சாலைகளை
குத்தகைக்கு வாங்கி
இம் மக்களின்
மதியை அழிக்கின்றோம்!
எங்களின்
துர்நாற்றத்தை
மறைக்கத்தானே
உனது
சரணத்தாமரை
இதழ்களின் அடியில்
புகுந்துறைகிறோம்
எமது
துர்நாற்றத்தையே
சுகந்த மணமென
சுகமறியா மக்களை
நுகர வைக்கும்
தியாகத் தென்றலே
திரு மிகு தொண்டனே!
அன்றலர்நத மலராய்
ஊழூழி காலம்
நீடூழி வாழ்கவென
நெஞ்சாரப்பிரார்த்திக்கின்றோம்!

..1987 செப்டம்பர் தேசிய முரசொலி..

# புதிய கவிதைகள்

## குருதிப் பூக்கள்

வீணே, மலர்ந்து
உதிர்ந்து, கருகும்
தேயிலைப் பூக்களா
நாங்கள்?
எங்கள்
குருதியை
உறிஞ்சிக் குடித்து
ஊதிப் பெருத்த
முதலாளித்துவத்தின்
தொந்தியை
கிழித்து,
அதில்
தோய்த்து எடுத்த
குருதிப் பூக்கள்
நாம்!

## பனி

இரவு அரக்கனின்
பலாத்கார
அரவணைப்பில்
கசங்கிய
பூமிக்கன்னியின்
மேனி உதிர்த்த
வியர்வை
முத்துக்கள்

## உழைப்பின் சின்னம்

கிள்ளி எடுத்து
கூடையில்,
சேர்த்து
வாட்டி வதக்கி
அரைத்துத் தீய்த்து
நீரில் கரைத்தால்
செந்நீர்!
எங்கள் குருதி
உழைப்பின் சின்னம்

## சிப்பிகள்

முத்தை
தாங்கும்
மோக மயக்கத்தில்
திருமண
மழைத்துளிகளுக்காக
வாழ்வெல்லாம்
ஏங்கித்
தவம் கிடக்கும்
கன்னி
பெண் சிப்பிகள்!

## நிலை

அன்று
தேயிலை
சிம்மாசனத்தின் மீது
நாங்கள்
வீற்றிருக்கும் போது
எத்தனை
பாசம் பரிவு!
ஊட்டத்திற்கு
உரம்
நோய் தடுக்க
மருந்து.....

இன்று
நிறுவைக்களத்தில்
சிதறி வீழ்ந்து
காய்ந்து கருகி...
கால்களில்
மிதிபட்டு
ஒதுக்கப்பட்டு
ஓரமாய் கிடக்கிறோம்!

## வக்கிர மனங்கள்

திருமணச் சந்தையில்
பெண்மை நலங்கள்
பொலிவுற்று,
இருந்தாலும்
வரதட்சிணை
தராசில்
நிறுத்துப் பார்க்கும்
வக்கிர மனங்கள்
தெருநாயின் கழுத்தில்
டி.வி. வீடியோ
கார், காணி
காசு, காணில்
'ஆஹா' என்று
அணைத்துக் கொள்ளும்!

## ஞானி

காட்டில்
கண்ணை மூடி
கடும் தவமியற்றும்
யோகியைவிட
சமுதாய
சாக்கடைகளை
தூர்த்தும்
சமதர்ம பூங்கா
சமைக்க உழைப்பவனே
ஞானி

## வாழ்வு

காலதேவனின்
கணக்குப்புத்தகத்தில்
பற்று வைக்கப்பட்ட
தவணைக் கடன்கள்,
வாழ்ந்த நாட்கள்
வரவில் வைக்கப்பட்டவை,
மீதி நாட்களோ
செலுத்த பட வேண்டிய
கடன்கள்
கடன் முடிந்ததும்
கணக்கு முடியும்.

## பாசம்

நேற்று வரை
என்னைத்
திரும்பிப் பாராதவர்
இன்று
மாய்ந்து மாய்ந்து
அழுகின்றார்கள்.
நான் பிணமான பின்னே
என்னில் இவ்வளவு
பாசமா?
எனது
பிராவிடண்ட்
நிதியிலா?

## சட்டம்

ஏழைகளிடம்
தன், பலத்தையும்
அதிகாரத்தையும்
காட்டி
பயமுறுத்தும்
பணத்தைக் கண்டால்
பல்லைக் காட்டி
கைக்கட்டிச்
சேவகம் புரியும்!

## மாறுதல்

மதுவும், மாதுவும்
இளமையில்
எனது
சொர்க்கம்...
வறுமையும்
நோயும்
வாங்கி...
முடங்கிய கால்களை
நீட்ட
முடியாது
இன்று...
மூலையில் கிடக்கின்றேன்
பிணமாய்.....!

## ஏளனப்படிகள்

பதவிக் கனியை
பறித்துச் சுவைக்க
நீ...
ஏறிச் சென்றது
எங்கள்
தோள்களாம்
ஏணிப்படிகள்!
ஆனால்,
இன்று ஏணிப்படிகள்
உனக்கு
ஏளனப் படிகள்

## ஆணவம்

தரையில் கிடந்தால்
ஒரு குருவி கூட
தன்னை கொத்தி
கொன்று விடும்
என்பதை, உணராத
பாம்பு -
சிவன் கழுத்தில்
இருப்பதால்
கருடனையே
சவாலுக் கழைக்கின்றது.

## சாத்திரங்கள்

ஜாதி குலம்
சாக்கடைகளை
உருவாக்கிய
சாஸ்திரங்கள்
சமுதாய
பூந்தோட்டத்தை
சீரழிக்கும்
நாற்றத்தொட்டிகள்

## கற்பு

சமூகம்
பெண்களுக்கு
அமைத்த கோட்டை
ஆண்களுக்கு?
அது
விளையாட்டு
மைதானம்

..1988..

# குறும்பாக்கள்

கவியெழுத சுந்தருக்கு - ஆசை
கடினமிவ னுக் கெதுகை....ஓசை
அவன் படித்த சொற்கள் சில
அடுக்கி வைத்தான் மேலிருந்து...
"நவகவிதை"! ஆம்...! இவனின் பாஷை!

செபமாலை செல்கிறான் - கோயில்
சொல்கிறான் கற்பனைகள் - வாயில்!
இவன் வரவை எதிர்பார்த்து
விழித்திருப்பாள் மரியம்மா
செபமாலை எலிஸபெத்தின் - பாயில்!

நீர் கலந்த பாலென்று - மறுத்தார்
நெல்சன், வெள்ளைசாமியும் - பொறுத்தார்!
பால் கலந்த நீருடனே
பத்து அவர்கை வைத்து உடன்
சேர்... என்றார், நெல்சன் - சிரித்தார்!

சோதிலிங்கம் ஆபிஸில் - சீ. சி.
துரைக்கு மிவர்நம்பிக்கைப் - பி.சி!
மாத முடிவில் இரவு
மணிபலவும் விழித்திருப்பார்
"சோதி வீலாஸ்" - இன்றிவரின் - ஆஸ்தி!

~ 1989 ~

வேலையொன்று நான் தேடிச் சென்றேன்:
மேலவரின் முன் ஒடுங்கி நின்றேன்:
ஓலை வரும் நாளை என்றார் -
ஓராண்டு போன தின்று
வேலை?... அது கானல், என கண்டேன்!

உணவில்லா வயிற்றில் பசி கிள்ளும்:
உணர்வுகளோ கவியெழுதச் சொல்லும்:
மனையாளின் வார்த்தைகளில் -
மலர்கின்ற தீச்சரங்கள்
எனையிங்கு எந்நாளும் கொல்லும்!

விழாக்களிலென் கவிக்குப்பா ராட்டு:
விருந்தினரின் புகழ்ச்சிநீ ராட்டு:
செலவுக்கு கைவிரிக்கும் -
செயலாளர் நிலைக்கிரங்கி
இலம்வந்தால் மனைவிசொல் வேட்டு!

மாவட்டச் செயலர்மதி வாணர்:
மதுக்கடைகள் பலவற்றின் ஓணர்:
கார்விட்டு இறங்கியதும்
காந்தியத் தத்துவங்கள்....
வாய் வட்டம் போட உயர் வானார்!

பாகான இனியமொழி பகர்வார்:
"பாரீரெம் நிலை" என்றால் நகர்வார்:
வாகான மார்பில் மலர் -
மாலைகளின் நறுமணத்தை
ஆஹா! மிகமகிழ்ந்து முகர்வார்!

குப்பாயி செத்துவிட்டாள் இன்று:
கூடிவிட்டார் பெண்கள், இது நன்று:
எப்போதோ செத்துவிட்ட
எவரெவரோ பேர்சொல்லி
ஒப்பாரி வைப்பதென்ன? விந்தை

புத்தன் வழி போகுமிந்த நாடு:
பொன்மொழிகள் வேதநிலைப் பாடு:
நித்தம் மதுப் பார்களிலே -
நிறைந்து வழி யும்மக்கள்
சித்தம் மதுப் போதைநிலை பாடு!

ஆட்டுக்கு கால்களிலே ஊனம்
அதற்கழுத மனம்பரந்த வானம்
ஈட்டிகளும் துப்பாக்கி
வேட்டுகளும் குண்டுகளும்
நாட்டின் செயலாகின அவ மானம்!

**..1991 அக்டோபர்..**

குப்பன் வாழ் லயத்தினது கூரை...
குளமாக்கும் வீட்டை மழைத் தாரை!
தப்பாது இங்கு வந்த -
தகரமெல்லாம் ஓரிரவில்
அப்போதே அடையுங் கொழும் பூரை!

ஆயம்மா வாகவரும் பெண்கள்!
அவர்களுக்கோ நாலிலே கண்கள்!
தாயம்மா மீனாச்சி -
சரசுவதி.... பிள்ளைகளின்
வாயினிலெ நிறைந்திருக்கும் மண் கல்!

பாப்பாத்தி தூக்கி வந்தாள் கூடை!
பார்த்து நிறை சொல்பவனே காடை!
தீப்பாயும் கண்களினால் -
மேய அவள் மேனிதனை
நாப்பாடும் 20 திது சாடை!

மலைகளிலே ஊற்றெடுக்கும் தண்ணீர்!
மக்கள் விழி ஊற்றெடுக்கும் கண்ணீர்!
வளமூட்டி ஒளிகொடுக்கும் -
மாவலியாய் பாயும் எனில்
இலை, இவர்க்கு குடிப்பதற்கு தண்ணீர்!

தொழிற் சங்கத் தலைவர் தண்ட பாணி!
தொழிலாளர் இவர்க்கு ஒரு ஏணி!
விழிசிவக்க, முகஞ்சிவக்க
மேடைகளில் பேசிடு வார்....
தலைவர் இவர் இன்றுகங் காணி!

முள்ளெடுத்து தோள்மீது வைத்தான்!
முத்து, வள்ளி பார்வையினால் தைத்தாள்!
செல்ல சில வாரங்கள்....
தேயிலைமலை யோரங்கள்...
வள்ளி வயிற் தள்ளிடவே... கைத்தாள்!

தேவானை நட்டதிந்த ரோஜா!
தினந் தண்ணீர் ஊற்றிவந்தான் ராஜா!
ஏவாளை மிஞ்சும் வண்ணம் -
தேவனை வந்து நிற்பாள்...
நோவாமல் பூத்தாளோ ரோஜா!

நெல்லறுத்துக் கட்டிவைத்தான் பாலா!
நெஞ்சோடு அள்ளுகின்றாள் லீலா!
கள்ளிருக்கும் முட்டியினை -
கண்டு விட்ட களிப்பினிலே...
நெல்லறுத்தும் கட்டிவைப்பான் பாலா!

தொழிலாளர் திலகம்வட - மலையான்!
தொண்டுபுரிந் திடல்இவரின் - கலையாம்!
களியாட்ட விடுதி மதுக்
கடைகளிலே வருமானம்
பலலட்சம் குவியும் பெரு - மலையாய்!

உணவுப் பொருட்கள் விலைகூடிப் - போச்சி!
உழைப்போரின் வாழ்வுக்கு இரு - ளாச்சி!
கனவான்கள் மந்திரிகள்
காரில் உலா வருபவர்கள்
சனமின்று மகிழ்ச்சியிலாம் - போச்சு!

வெங்காயம் வாங்கிடவே - போலிங்!
வெகுநீளம் நேரமதும் - நீளும்!
தங்காயம் காய வெயில்
தலைசாய்ந்தான் தங்கப்பன்
இங்கிவனுக் கேற்றுகிறார் - சேலிங்!

ஊசியெனக் குத்தும் மழைக் - காற்று!
உடம்பெங்கும் குத்தும் மழை - யூற்று!
நாசியிலே நீர்வடிய
நாளெல்லாம் உழைத்தவரின்
ஆசையிலே விழுந்தது பாஸ் - போட்டு!

காக்கொல்லை தோட்டத்து....சாமி!
கண்டிக்குச் சென்றானாம்....ஆமி!
மேற்கொண்ட செயலாலே,
வெகுநாட்கள் முன் விண்ணணின்
பொக்காளன் இன்று அவன்.....சாமி!

அம்மாவின் நினைவுதினம் - இன்று!
அர்ச்சிக்க இல்லை பூ - ஒன்று!
நம்ம தொழிற்சங்கத்தின்
நாயகரின் கழுத்தினிலே
இம்மலரின் மாலை மிக - நன்று!

நாட்டின் நிலை சொல்வது என்...நோக்கம்!
நாளாந்தம் என் கவிதை....ஆக்கம்
போட்டிகளில் பொய்களையே
புனைந்துரைத்து பரிசுபெறல்
மோட்டிவ் எனின் இலக்கியமோ - தேக்கம்!

வங்கியிலே நானெடுத்தேன் - லோனு!
வட்டியினை அதுபாட்டில் - ஈனும்!
பொங்கி வரும் ஆசையிலே
பொட்டடோஸ் உரம் மருந்து...
எங்கம்மா தொடுரெண்டும் - காணம்!

மாவட்டச் செயலாளர் - சிங்கம்!
வாயெல்லாம் சிரிப்பாராம் - தங்கம்!
“பா“ வட்டம் ஒன்றினிலே
பாரதியைக் கூப்பிட்டார்,
”ஆ...வெட்டிப் பய“ லென்றாள் - மங்கை!

மாலைவரை காத்திருந்தார் - மக்கள்!
மாலையிலே சிரிக்கின்றார் - சொக்கர்!
காலைமுதல் இவருக்காய்
காத்திருந்தோர் பேசுவதற்கு
வேளை, இலை யாம் காரில் - புக்கார்!

கலைமகளின் விழா ஒன்று - சென்றேன்!
கண்களிலே நீர் நிறைத்து - நின்றேன்!
இலையொரு பூ இவள் கழுத்தில்
என்றாலும் மாலைகளால்
தலைவரின் கார் மறைத்திருத்தல் - கண்டேன்!

பிறநாடு சென்று வந்த - வாய்ப்பு!
பெற்றதனால் இன்றெனக்கு - நோய்ப்பூ!
சிறையாக வீடு எனைத்
தேடி வர ஒருவரில்லை
புரிகிறது இதுவெல்லாம் - ஏய்ப்பு!

ஏவலுக்கும் எடுபிடிக்கும் - ஆட்கள்!
இவருடம்பை காக்க “பொடி - காட்“கள்!
ஓவலுக்கும் ஆவலுக்கும்
ஓரைந்து ஆயிரங்கள்
கூவலிடும் எங்களுக்கோ - கேட்கள்!

# சமாதானம் படைப்போம்

ஓரின மக்கள் வாழ்வை
உருத்தெரி யாதழிக்கும்
போர்வெறி மிருகங்களால்
புவனமே அழிந்து போகும்
சீர்பெற நாடு சமா
தானமே நிலைத்துநிற்க
நேர்படும் நெஞ்சமெல்லாம்
நிதம்பணி புரிய வாரீர்!

'ஆணவம் மிஞ்சி' இந்த
அகிலமும் தம்கீழ் என்ற
ஈனர்கள் இரக்க மில்லா
இழிநிலை யாலே மக்கள்
ஊன்குரு தியோயிம் மண்ணில்
ஓடிடும் நதியாய், சாகும்
மானிடம் காத்து சமா
தானமே நிலைக்கச் செய்வோம்!

அஞ்ஞான இருள் கடந்து
அறிவினில் உயர்ந்து விட்ட
விஞ்ஞான வளர்ச்சி வான
வெளியெலாம் மனிதசக்தி
எஞ்ஞானம் படைத்து மென்ன
இவ்வுல குயிர்கள் வாழ
மெய்ஞானம் அற்று பொல்லா
மிருகத்தின் நிலைக்கே சென்றோம்

..1984..

# இருளே சதமா? எனப்பாடு

மார்பினை மூடுமுந் தானை ஆட
வரிவளை ஒளிசெய் தாட, கருங்
கார்குழல் இருபுறம் ஆட, இரு
காதணி தோடுகள் ஆட, இணைச்
சீரடி கொலுசுகள் ஆட! ஆட!
செங்கயற் கண்ணிமை ஆட ஆட!
பார்மிசை மலையகப் பாவையரே
பாடு உரைத்திட வாபாடி!

விண்ணுயிர் மலைகளில் ஏறிஏறி
வெம்பனி மழையினில் ஊறியூறி
கண்பனி நீர்வழிந் தோடி யோடி
கடுங்குளிர் தனிலுடல் வாடிவாடி
பெண்ணிவர் உழைப் பே நாடுவளம்
பெருகிடகாரணம் எனவாகில்
எண்ணிற் காலம் எமக்கிந்த
இருளே சதமா? எனப்பாடு!

மேகம் பொழியும் மழைநீரை
விழிகள் பொழியும் கண்ணீரை
தேகம் உழைப்புத் தணலாலே
சிந்தும் வியர்வைத்துளி நீரை
தாகந் தீர்ப்பாள் மலைமகளித்
தாயோ தீராள் தாகம் கை
வேகம் கூடும் தளிராய்ந்து
வீசும் கூடை மீதினிலே

கூடை நிறையும் போதில் கை
    கொண்டு அழுத்தி மென்மேலும்
ஓடிச் சுழன்று சுழன்று கரம்
    ஓடித்து ஓடித்து இளந்தளிரை
போடும் நெஞ்சோ, "இல்லத்தில்
    பொங்க குருணை இல்லை"யென்று
வாடும், இதுதான் மலையகத்தின்
    மங்கையர் வாழ்வா? எனப்பாடு!

ஓடின, ஓடின, மாயிருள்
    உதய ஞாயிறின் ஒளிக்கதிர்
நாடின, நாடின, இனிவரும்
    நாட்கள் சுதந்திர நாளென
பாடிடு, பாடிடு, விடுதலைப்
    பண்ணொலி வஞ்சகர் நெஞ்செலாம்
சாடிட, சாடிட போரொலிச்
    சங்கி சைத்துநீ பாடிவா!

வளையல் குலுங்கும் கரமாடின்
    வையம் ஆடும் வளமோடும்
கலைகள் ஆடும் விழியாடின்:
    கவினோ ஆடும் நடையாடின்
மலையில் பசுமை எழிலாடின்
    வாழ்வில் பசுமை நிலையாதல்
இலை யென் றேபுத் தெழுச்சிப்பண்
    இசைத்தே ஆடிவாராய்நீ!

..1981..

# இசைந்து விடுதலைச்சிந்து

குளிர்புனலடை முழு மதியென
ஒளிர்முகமட மாதர்
"கலீர்" எனவளை ஒலிசெவியுறும்
கயல் சதிர் விளை யாடும்
வளவயலிடை பசும் நிறம் மிளிர்
மணிக்கதிர்தலை சாயும்
மலர் சொரி மது வயலிடை தொறும்
நதியென அலை பாயும்

புலர் பொழுதெழும் சுடர் ஒளியினில்
புவிமுகமலர்ந் தாடும்,
அலர் மலரணை அகந்திளைத்திடும்
அளியினம் பறந்தேகும்.
நிலம் தரும் புது வளம் சிறந்துளம்
நிறைந்திடுமுழைப் பாலே,
இலம் மகிழொலி எழும், இலரிலை
எனும் எழில் மிகு நாடே.

மழையென இரு கரம் வழங்கிட
மனங்குளிர்ந்திடும் மாந்தர்.
கழையென வளர் உளம், சுனைவரும்
கனை எழும்புன லூடும்.
குழையசைந்திட விழிச்சிவந்திட
குழல் விரிந்திட கோதை
இழையொளிர்ந்திட இடையசைந்திட
கயல் என புனல் ஆடும்.

குளிர் மழையினில் உடல் நடுங்கிட
கொழுந்தெடுத்திடும் கோதை
தளிர்விரலிடை சதிர்பயிர் தளிர்
தனந்தருமிவர் வாழ்வு?
நலிந்திட சுகம் இழந்திட பிறர்
நலமுறல் இது விதியா?
உளந்தெளிந்தெழும் உணர்வெழுந்திட
ஓர்வழிசெய வாராய்.

இருள் நிறையறை துயர்நிறையுளம்
ஒளியிழந்திடும் விழிகள்,
பொருள் இலர்தினம் வெறும் வயிறுடன்
உயர் மலையினில் உழைத்தும்
ஒருசுகமிலர், எவரிதுவரை
உதவிடும் பணி செய்தார்?
பெருஞ் சுகத்தினில் சிலர் திளைத்திட
உழைப்பவர் நிலை தாழ்ந்தார்.

புகழ் வரும் பெரும் பொருள் பதவிகள்
போக வாழ்வினுக் காக:
மிக உறவினர் என தத்துயிர்
குடித்திடும் விட மனத்தர்,
முகத்தினில் நகை முகிழ்த்திட அமு
தெனவுரைபல சொல்வார்.
தொகை பெருகிட வகை செய்யும் பெரும்
திருடரையினி துரத்து.

விழிப்பிலாதவர் உறக்கமே வினர்
விடுதலையுறல் இலையாம்.
எழும்பிலாதவர் புழுவென உயிர்
ஏந்தி வாழ்வது இழிவாம்.
துளி உணர்வெனும் உளந்துளிர்விடின்
துயர் சிறிதுவரும் பாகும்
வழியமைத்திடு வரும் சுதந்திரம்
மலர்ந்திடுமினி வாழ்வில்

நடிப்பினில் மயங்கிய மடமனம்
நசுங்கிட புது உணர்வுடன்
துடித்தெழுந்திடு, துணிவு கொள், உனை
நசுற்றிடும் பெரும் திருடரை,
குடிகெடுத்திடும் குறும்பரை நரிக்
கும்பலை இனி நம்பிடா(து)
எடுத்துவை, புது அடியினை, யுனை
எதிர்த்திடும் பகை தூளென.

காற்றிசைந்திடும் போதெலா மதன்
கதிக்கசைந்திடும் நாணலா
ஓட்டுகள் தனை போட்டவரெலாம்
உயர்வடைந்திட உழைப்பதா?
நேற்றுடனிது முடிந்த காவியம்
இன்றொரு புது காவியம்
தீட்டு, சுதந்திரம் விடுதலை
சிந்திசைத்திடு தோழனே!

உனதுடம்பினில் உதிரமா? இலை
ஒதுக்கிட கழி நீரா?
நிணப்பொதியெனும் உடற்சுமை வெறும்
நிலத்திடையுர மாகும்
பிணியென உனை தொடர் துயர்களை
பேரிடர்களைப் போக்க,
துணிவுடன் மனத் திடமுடனெழு
சுதந்திர ஒளி தோன்றும்.

உலகினையொரு முறைதிரும்பியே
உனதறிவொடு பாராய்,
பலமொழியினர் பல மதத்தினர்
பல விதத்தினர் உன்போல்
நிலை தவறினர் உளம் நடுங்கினர்
எனும் நிறையினில் வாழார்.
தலை நிமிர்ந்தவர் உளத்துணிவுடன்
சமர்புரிவதைப் பாராய்.

நூற்றைம்பது ஆண்டுகள் ஒரு
இனம் உரிமை களின்றி
ஆற்றொனாத்துயர் அடைந்த போதிலும்
அச்சமேவிய குடியாய்
மாற்ற முற்றிட விழைவுதானிலா
மாக்களா? இலை புரட்சி
பாக்களாயிரம் பாடி பேரிகை
பாரதிர்ந்திட முழக்கு.

..1991 ஏப்ரல் மாவலி..

# ஊருக்குழைச்சது போதும் மச்சான்

ஊருக்குழைச்சிடும் உத்தமரென்றும்மை
உள்ள சனங்க புகழ்ந்துவிட்டா, தே
நீருக்கு சீனி கிடைச்சிடுமா உங்க
நெஞ்சினில் நெனைச்சி பாரு மச்சான்!

“எங்க தலைவ”ரென றேத்திப் புகழ்ந்தவர்
என்ன கொடுத்து உதவி செய்தார்? உம்மை
கண்டதும் தங்கள் தலைதிருப்பி ஒன்றும்
காணா தவர்போல செல்லுகின்றார்!

காசு படைச்ச மனுசரெல்லா மிங்கு
கம், முனு சும்மா இருக்கையிலே, தமிழ்
பேசத் தெரிந்த நீர் கூட்டத்தி லேசென்று
பேசிவிட்டால் துன்பம் போய்விடுமோ?

தோட்டத் துரையிடம் தகராறு பத்து
சீட்டு கொடுத்து நிப் பாட்டி விட்டான், இத
கேட்டுக் கெஞ்சநம் சங்கத் தலைவர்கள்
கொஞ்சமும் அக்கறை காட்டவில்லை

சீட்டு கட்டிநான் சேர்த்த பணத்தையே
தொலைத்து விட்டீர் மகா நாடுசென்று,
வாட்டும் எங்ககுறை கேட்டு உதவிட
வந்த மனுசர்கள் யாரு மச்சான்!

மாத்தி யுடுக்க ஓர் சேலையில்லை, தலை
வாரிமுடிக்கவோர் சீப்புமில்லை.
ஊத்தப் பொடவய தொவைச்சிடவே யிந்த
ஊட்டுல ஓர்துண்டு சோப்புமில்லை!

காலிலே போட்ட கொலுசுமில்ல, இரு
கையிலே கெடந்த காப்பு மில்ல
தாலி தவிர மற்ற நகையெல்லாம்
தாரைவார்த்தீர் பொதுச் சேவையென்று

காஞ்ச வயித்துக்கு கஞ்சியில்ல, இனி
காத்த குடிச்சியா வாழுறது - தலை
சாஞ்சி படுக்க ஓர் சாக்குமில்ல, தோட்ட
சனங்களுக்கு சேவை செய்யுறாராம்.

போட்டுக்குடிச்சிட உப்புமில்ல - முகம்
பூசிக்குளிச்சிட மஞ்சளில்ல பஞ்ச
பாட்டுப் படிக்குது வீட்டினிலே, இவர்
பாட்டாளிக்கு சேவை செய்யுறாராம்!

சேவைசேவையென்று சுத்திய தால்முன்னே
சேத்த பணமும் கறைஞ்சிடுச்சி- நம்ம
தேவை யறிஞ்சி உதவிட வேவந்த
தோழர் எவருண்டு சொல்லு மச்சான்!

நாலுந்தெரிந்த மனுசரென் றெண்ணியே
நானுமுங் களுக்கு வாக்குப்பட்டேன், நீர்
மூளை புரண்ட மனுசனென் றெனக்கு
முன்னந் தெரியாமப் போச்சிமச்சான்!

மீந்த குருணையில் கஞ்சிவச்சேன், ஈர
வெங்காயம் ரெண்டு உரிச்சிவச்சேன், உண்டு
பேந்த விழிப்பதில் லாபமென்ன, இன்று
போயிநாலுகாசு தேடுமச்சான்!

ஊருக்குழைச்சது போதும் மச்சான் - இனி
ஊட்டுக் குழைச்சிட வாரும்மச்சான்! இன்று
சோற்றுக்கு ஓர்வழி பாரு மச்சான் பொது
சேவைக்கு முழுக்கொன்னு போடுமச்சான்!

..1968..

# கேள்விக்கு பதில் என்ன சொல்லு?

உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை! அச்சமில்லை!
என்று சொன்ன பாரதி
எச்சில் உண்ணும் ஆசைக்கொண்டு
இச்சகந்தான் பேசியே
பிச்சையாம் பதவி யேற்று
பெரிதும ஞ்சி வாழ்பவரை
நிச்சயமாய் பாரதியும்
இன்றி ருந்து காணிலோ?
துச்சமின்றி எண்ணிவந்த
துயர்க ளெல்லாம் தாங்கியே
சீச்சீ....யிந்த தியருக் கோ
செழுங்கவிதைப்பாடி னேன்
நச்சுப் பாம்பு இவர்கள் என்று
நசுக்கிடத் துணிகுவான்!

கோடி செல்வம் சேர்ப்பினுமென்
அடிமை வாழ்வு கேவலம்
வாடி நொந்து வறுமைபட்டு
மடிந்து போக நேரினும்
ஈடிலாசு தந்திரத்தில்
இமைப் பொழுது வாழ்வதே
கோடி கோடி இன்பம் அடா!
குறைகளுற்ற தமிழனே!

கவிதை யாய் என்
நெஞ்சில் உணர்வெலாம்
வைத்தேன் தமிழர் வாழ்வு
குறைகளின்றி (வாழவே) மிளிரவே!
ஆறு ஆண்டு விழா வெனக்கிங்
கெடுத்து நெஞ்சம் களிக்கிறாய்!
ஊறிலாவென் கவிப் பொருளை
உணர்ந்து வாழ்வோ ரில்லையே!

சாதி யென்றும் சமயம் என்றும்
        தாழ் வுயர்வு பேசியே
பேதங் கூறி பிரிந்து நின்றும்,
        பேசுவீர் என் கவிதைகள்,
நோதலுற்று நூறு லட்சம்
        பேர்களிங்கு வாடினும்
நீதி நேர்மை தர்மம் பேசி
        நித்தம் பொய்மை பேணுவீர்!

விழுதும் வேருமாக நிற்கும்
        விருட்சமாய் நம் தேசமே
பழுது இன்றி பயன் பெறவே
        பாடுபடும் ஏழைகள்
உழுது மண்ணில் பயிர் விளைத்து
        உலகம் வாழ செய்தவர்
அழுது வாட தொழுது வாழும்
        நீங்கள் இன்பம் அடைவதோ!

என்றும் வளங்களென்றும்
        நாடி முறை செல்குவாய்
மண்ணில் வீழ்ந்து உழன்ற பேர்க்கு
        நெஞ்ச மென்றும் இளகிடாய்
ஆயிரமாய் நீதியிங்கு
        அஞ்சிடாது பேசுவாய்
வாய் படைத்த உனக் கிறைவன்
        மனம் படைக்க வில்லையோ!

பாரதியின் கேள்விக் கென்ன
        பதிலைச் சொல்லப் போகிறாய்
ஊர் புகழ மேடை யேறி
        உரத்துப் பேசி இறங்கிடும்
நேர்மை இல்லா நீசர் போலும்
        நீயுமிங்கு வாழ்வதா?
பாரதியின் எண்ணம் மண்ணில்
        பயன் விளையச் செய்குவாய்!

# பொம்பள பாட்டுல திங்கனுமா?

வேலைவெட்டி யொண்ணும் பண்ணாம தெனம்
வீட்டுல நாளைக் கழிச்சிக்கிட்டு பல
காலிப் பசங்களை கூட்டி வச்சி வெறுங்
கதையளந்தாவா சோறுவரும்?

வயசு முப்பது ஆயிருச்சி குடும்பம்
வாழனு மென்ற நினைப்புமில்லை சின்ன
பயலுங்க மாதிரி ஊரை சுத்தி வந்து
பசிக்குதுன்னா சோறு வந்திடுமா?

பிள்ளைங்க ரெண்டு பிறந்திடுச்சி - இன்னும்
பேரு பதியல வெட்கமில்லை? தெனம்
கள்ளு குடிக்கவும் கசிப்பு குடிக்கவும்
காசு எங்கேவரும் சொல்லு மச்சான்!

காடுமலையில நானலைஞ்சி நாளும்
கஷ்டப் பட்டுஎன் ஒடல்மெலிஞ்சி
மாடா ஒழைக்கனும் நீங்கமட்டும் கையில்
மண்ணுப் படாமல் திங்கனுமா?

மாமன் மாமிக்கு வயசாச்சி அவுங்க
வாங்கிய பென்ஷனும் தின்னாச்சி! - இன்னும்
பூமிக்கு பாரமா இருக்கனுமா நீங்க
பொம்பள பாட்டுல திங்கனுமா?

சூடு சொரணை உமக்கிருந்தா இந்த
சோம்பேறி தனத்தவிட்டுவிடும்! - மண்ணில்
பாடுபட்டு திண்ண ஆசைப்படும் - பிறர்
பார்த்து மெச்ச நல்ல பேரு எடும்!

பெற்றவர் தம்மையும் பேணிடனும் - நம்ம
பிள்ளைகளை நன்றாய் வளர்த்திடனும் - இன்னும்
நட்டுவச்ச தூணாய் நிக்காம போயி
நாலுபணந் தேடி வாங்க மச்சான்

**..1970 காங்கிரஸ்..**

# சிந்தனை செய்வாய்

வந்தவர்க் கெல்லாம் வந்தனை செய்து
வளைந்து குனிந்து பணிந்து நடந்து
நிந்தனை சுமந்த நெஞ்சம் ஒடிந்து
நெடுமலை மீதில் தொழில்கள் புரிந்த
எந்தையர் போல வாழ்வது ஈனம்
ஏய்ப்பவர் தமையே போற்றுதல் மடமை
சிந்தனை செய், வெறும் சோற்றுப் பிண்டமாம்
தொடர்கதை நிறுத்து! முடிவுரை எழுது!

அண்டம் விரிந்தது அதனிலும் மனித
ஆற்றல் விரிந்தது அறிவு விரிந்தது
கண்டோம், விஞ்ஞான கலைகளின் அற்புதம்
கணக்கில வாம், ஆம்! சிந்தனை வளர்ச்சி
என்றால் மலையகம் எதனில் சிறந்தது?
இன்னும் அடிமைச் சிறைகளில் கிடந்து
சென்ற காலத்தின் தொழும்பர் நிலையா?
சிந்த னை யற்ற சூன்ய மனமா?

சிந்தனை வளர்ச்சி சிறிதேனும் இல்லார்
சுதந்திரக் கனியின் சுவையறி வாரோ?
வந்தனை செய்தே வாழ்பவன் என்ற
வசைமொழி யொழித்து வாமலைத் தோழா!
சிந்தனை செய், யுனை சுற்றிய அடிமைச்
சூழ்ச்சிப் பொறிகள் தெறித்திட அறிவுக்
கண்திறந் தெழுந்திடுகவினுறு மலையகக்
காட்சியைக் காண்பாய், கன்மலைத் தோழா!

வானுயர் மாட மாளிகை உயர்வதும் எம்
வாழ்விடம் கூனிக் குறுகிச் சிறுப்பதும்,
சாணிட மேனும் எமதென சொல்லும்
தகைமையும் உரிமையும் எமக்கிங் குண்டா?
ஏனிவ் விழிநிலை? எண்ணிடு, சிந்தனை
இலாதத னாலே, இத்தனை காலம்
வீணாய் கழித்தது போதும், நாளை
விடிவு கண்டிட, சிந்தனை செய்வாய்!

..1990 வீரகேசரி..

# சீக்கிரம் வழியொன்னு பண்ணு மச்சான்!

அத்தை மகன் என்ற சொந்தத்திலே உம் மேல்
ஆசைவச்சேன் எந்தன் நெஞ்சத்திலே - இந்த
பித்துத் தெளிய வழியில்லை யா? மணம்
பேசி முடிக்கத் துணிவில்லையா?

சாணி எடுக்கநான் போகையிலே லயச்
சந்துல நின்னு வழிமறைச்சால் நம்ப
மானம் பறந்திடும் காத்தினிலே உங்க
மண்டையிலே ஏதும் இல்லையோ தான்!

கண்ணைச் சிமிட்டிகை யாட்டுகிறீர் - சுத்த
காவாலி போலபல் காட்டுகிறீர்! இந்த
சின்னத் தனமெல்லாம் விட்டு விட்டு நாம
சேர்ந்து வாழ வழி செய்யி மச்சான்!

மாமன் மகளென்றால் சும்மாவா உங்க
வாசலைத் தேடிநான் ஓடிவர? நடுச்
சாமத்தி லேவரச் சொல்லுகிறீர் - ஊரு
சந்தி சிரிக்காதோ சொல்லு மச்சான்!

ஊருசனங்க மதிச்சிடனும் - பெற்றோர்
உற்றவர் கண்டு மகிழ்ந்திடனும் - நாம
சீருஞ்சிறப்புமா வாழ்ந்திடனும், இதுக்கு
சீக்கிரம் வழியொன்னு பண்ணு மச்சான்!

நாலு மனுசர கூட்டியாங்க எனை
நல்லமுறையில் பெண்பேசிப் போங்க மண
வேலிகட்டி பொன்னால் தாலிகட்டி ஊரு
மெச்ச எனதுகை பற்றிடுங்க!

தையும் பிறக்கநாள் தூரமில்லை - இதை
தட்டிக் கழிக்கவும் மார்க்கமில்லை உங்க
கையைப் பிடிக்குந் திருநாளை நான்
கண்டு களித்திட வேணும் மச்சான்!

..1966 சிந்தாமணி..

# சுமைதாங்கி

தலையில் பாரச்
சுமைகளை
சற்று நேரம்
இறக்கி வைத்து
களைப்பாற்றும்
சுமைதாங்கியாய்
இருப்பதால்
என் இதயத்திற்கு
ஓர் சுகானுபவம்

உன்
இதயத்தில்
மூளும்
விரக்திக் கனலின்
வெம்மைத் தாங்காது
அரும்பும்
துயர நீர்த் துளிகளை
ஒற்றி எடுக்கும்
வெண் பஞ்சுத் துண்டாக
என்
இதயத்தையே
தந்துவிட்டேனே!

வெறுமை சூழ்ந்த
அந்த காரத்தின்
மையிருளில்
அமைதி ஒளியை...
தேடித்
தயங்கிய போதெலாம்
நம்பிக்கை - எனும்
மிகச்சிறு
ஒளிக்கீற்றாக - என்னை
நாடி வரும்
நீ -
பெண்மையின்
திண்மை
பேருருவாய்

என் வெளியெலாம்
வியாபித்து
விகாசித்தாயே
உனது
இளமைக்கால
மனப் பறவை
வஸந்தக் கனவுகள்
சூழ்ந்த
இல்லறப் பூங்காவை
கற்பனைப்
பூக்களால்
அலங்கரித்ததை
அறிவேன்.

அக்கனவுகள்
கனிந்திட
நாளெல்லாம்
நான்
கனவு கண்டேன்
ஆனால்

இலையுதிர் காலத்தின்
இயற்கை
வனப்பிழந்த
பூங்காவாய்
ஒரு
அக்கினி ஆற்றையே...
இதயக்கருவரையில்
சுமந்து கொண்டு
குளிர்ந்த ஓடையாய்
உன்னால்
தவழ்ந்து செல்ல
முடிகிறதே!
எப்படி?

இதுதான்
கற்பின் திண்மையா?
அல்லது
ஏமாற்றத்தின்
எதிரொலியாய்
ஏற்பட்ட
வைராக்கியத்தின்
வெளித்தோற்றமா?

தலைச்சுமைகளை
இறக்கிவைத்து
சிறிது நேரம்
இளைப்பாற
சுமைதாங்கி
பயன்படலாம்
ஆனால்
சுமைதாங்கியே
துணைவராது
அந்த
சுமைதாங்கியாய்
அல்ல:

பிரகாரங்களை
சுற்றி வந்து
பிராலாபிப்பதை விட
கர்ப்பக்கிரஹத்தின்
காலடியிலேயே
எல்லாச் சுமைகளையும்
இறக்கி வைத்துவிட்டு
நிம்மதிக்
காற்று
நிறைந்த மனதுடன்

நீ
உணரும் போது
கர்ப்பக்கிரஹமாய்
எல்லா பக்தர்களின்
இதயச் சுமைகளையும்
அர்ச்சனைகளையும்
வேண்டுதல்களையும்
ஏற்று
மௌனப் புன்னகை
புரியும்
ஓர்
கர்ப்பக்கிரஹத்தின்
கருங்கற் சிலையாய்
இருந்திடவே
வாழ்கிறேன்!

# சொந்தங்கள்

சீக்கில் கிடக்கின்றேன்
சில வாரமாய் வீட்டில்
பார்த்திடவும் கேட்டிடவும்
பரிந்தொரு சொல்பேசிடவும்
ஆக்கள் ஒரு வரில்லை.
அடுப்பினிலே சாம்பல்
பூத்து சிரிக்கும்.
பிள்ளைகளின் முகங்களிலே
பூத்திருக்கும் சோகம், இருள்!
பூத்திருக்கும் வீடெங்கும்!
பார்ப்பதற்கும் கேட்பதற்கும்
பரிந்தொரு சொல் பேசுவதற்கும்
ஆக்கள் ஒருவரில்லை
ஆயிரங்கள் சொந்தமுண்டு!
செத்த பின்னே மூக்கைச்
சிந்தி அழுவதற்கு
எத்தனையே சொந்தங்கள்
எனக்குண்டு, முன்பெல்லாம்
பந்தியிலே உக்கார்ந்து
பட்சணங்கள் சாப்பிடவும்
அந்தி சந்தி வேளையிலே
அவசரமாய் கைமாத்து,
கல்யாணம் சடங்குக்கு
கால் கொலுசு, தோடு
ஓசியியே வாங்க வந்த
ஒரு நூறு சொந்தமுண்டு.
சீக்கில் கிடக்கின்றேன்
சில வாரமாய் வீட்டில்.
சீட்டுப் பணத்தில்
தில்லு முல்லு செய்த
மேட்டு லயத்து
வீரப்பன் கங்காணி,
காட்டு லயம் வள்ளியம்மா
கணக்கன் லயம் வெள்ளையம்மா

ராக்கம்மா அக்கா
நல்லம்மா தங்கச்சி
மூக்காயி ஆச்சி
முனியம்மா மாமி
“கண்ணம்மா காந்தம்மா
கருப்பாயி ரெங்கம்மா
சின்னம்மா மீனாச்சி
செவப்பாயி பாப்பாத்தி
ராசம்மா நீலாவதி
ரஞ்சிதம்.” இவுங்களெல்லாம்
ஓசியிலே சீலைக்கு
உறவாகிப் போனவுங்க,
எல்லோரும் சொந்தந்தான்
ஏன் பார்க்க வரவில்லை
கொடுத்த கடன் கேப்பேன்னா
கூடி நின்ற சொந்தமெல்லாம்
படுத்துவிட்ட போது என்னை
பார்ப்பதற்கு வரவில்லை?
இன்று அவுங்களெல்லாம்
எங்கோடிப் போனாங்க.
செத்த பின்னே மூக்கை
சிந்தி பெருங்குரலில்
ஒப்பாரி பாடி
ஓங்கி அழுவதற்கும்
சொந்தங்கள் நூறு வரும்
சோர்ந்த முகத்தோடு!
சீக்கில் கிடக்கின்றேன்
சில வாரமாய் வீட்டில்
ஆக்கள் ஒருவரில்லை
ஆறுதல் சொல்லிடவே!

..1990 வீரகேசரி..

# தாய்மைப் பேறு

காயாத மரம்போல களர்நிலமாய்
கரம் போடிக் கிடக்கின்ற பாலையென
ஈயாத உலோபிகளின் உள்ளம் போல
இருள்மூடிக் கிடக்கின்ற என்வயிற்றில்
சேயாக வந்துதித்தாய், என்னதவம்
செய்தேனோ உன்னைமக னாய்அடைய
தாயாகும் பேறெனக்குத் தந்தவனே,
தமிழ்மகனே தாலேலோ, கண்ணுறங்காய்

"மணம்புரிந்து பல்லாண்டு கழிந்த திவள்,
வயிறுதிறக்க வில்லையென," எந்தன் மாமி,
கணவனுடன் பிறந்தாரும் சுற்றத்தாரும்,
'கட்டையை கைப் பிடித்திருந்தால் விறகுக்காகும்"
எனநாளும் வசைபாடி 'மலடி' என
இழித்துரைத்த போதெல்லாம் பட்டதுன்பம்,
'கனிச்சாறே!' உன்முகத்தை கண்டபோதே,
கதிரவன்முன் பனிபோல காய்ந்ததடா!

பெண்ணாக பிறந்தாலே துன்பம்! துன்பம்
பிள்ளையில்லா மலடெனவே வாழ்வதடா!
என்னாளும் துன்பம், மணம் புரிந்த முதல்
இதுவரையும் அடைந்ததுவும் துன்பம் ஒன்றே
பொன்னாளாம் நீ பிறந்த வேளை கண்ட
பூரிப்பில், போனதடா துன்பம் இனி
நன்னாள்தான் நாளெல்லாம் நாள்மலர்ந்த
நறுமலரே! நற்றமிழே கணணுறங்கு

NtW

பெண்ணின் பிறவியெலாம் - ஆண்கள்
போகபொருள் எனவே,
எண்ணும் புவிமாந்தர் - எமக்கு
இழைக்கும் கொடுமையெல்லாம்
சொன்னால் புரியாது என்
செல்வமே நீயில்லா
அன்நாள் அடைந்ததுயர், உன்னை
அடைந்ததில் போனதடா!

பத்து வருடங்களாய் - எனதுகை
        பற்றிய உந்தன் தந்தை
புத்திரன் இல்லையென்றே, எனைப்
        போட்டு வதைத்ததெல்லாம் -
முத்துநகை புரிந்தே கண்ணில்
        மின்னல் ஒளி காட்டி
தத்தை மொழி பேசும் மகனே, என்
        தவறோ சொல்லிட டா!
கோயில் வலங்கள் வந்தேன், பல
        குளங்கள் முழுகி வந்தேன் - என்
சேயே உனையடைய வேம்பு
        சுற்றியே நோன்பிருந்தேன்
தேய்பிறை போல உடல் வாடி
        தேய்ந்து நலிந்ததல்லால் வயிற்
காய்த்திட வில்லையடா என்
        கண்மணி தோன்றவில்லை!

காலச் சுழற்சியிலே இளமை
        காற்றில் பறந்தபின்னே - இருள்
வேளை கரைந்திடவே வானில்
        வெள்ளி முளைத்தது போல்-
நீலக்கடல் விளிம்பில், உதித்து
        நீணிலம் மாட்சியுற கதிர்க்
கோலக் கரம் நீட்டி, சுடர்
        குதித்து வருவதைப் போல்

ஏக்கம் தணித்திடவே நீ
        ஏந்தன் வயிற்றினிலே பிறந்து
நீக்கமற நிறைந்தாய் என்
        நெஞ்ச உலகினிலே நற்
பாக்கியம் செய்தவர் யார்? இப்
        பாரில் எனைப் போல பிள்ளைப்
பாக்கியம் தந்தவனே என்
        பைங்கிளி கண்ணுறங்காய்!

# நம்பிக்கைப் பொங்கல் வைப்போம்!

தைபிறந்ததும் தமிழர்தம் நெஞ்சங்கள்
தை! தை! என தாரினில் துள்ளும்
மெய் பிறந்திடும் விரிகதி ரொளியில்
வேதனை இருள் விலகி ஓடிடும்
பொய் அழிந்திடும் புன்மை இருட்கணம்
போய் மறைந்திடும் புதிய வாழ்வது
வையகத்தினில் மலரும் என்பதோர்
மாபெரும் ஆவலில் மனங்கள் நிறைந்திடும்!

என்ற தோர்நிலை எங்கோ ஏகிட
இதயங் கள்எலாம் வேதனை சூழ்ந்திட
இன்பக் கனியதற் கின்றும் நாளையும்
ஏங்கித் தவிக்கும் நிலை வர லாச்சு
பண்டு செந்தமிழ் பாடல் போற்றிய
பாரினுக் குண வூட்டும் பணியில்
தொன்று தொட்டு உழவன் ஆற்றும்
தூய உழைப்பை போற்றும் பொங்கல்

இன்று இல்லை ஏழைகள் உள்ளம்
இருளில், இல்லமும் இருளில் வாழ்வு
குன்றும் வறுமைக் கூரிருள் முட்கள்
குத்தும் இதயம் நொந்து புண்ணாகும்!
சென்ற நாளின் செழுமை நினைவுகள்
சிந்தை நிறைந்து உறங்கும்
நன்று நன்றென்று நாமின்று நம்பிக்கையுடன்
பொங்கல் வைப்போம்

உழைப்பின் மாண்பினை உலகிற் குணர்த்திய
உன்னதப் பொங்கல் அந்நாள் பொங்கல்,
அழைத்து விருந்தினை அகந்தான் மலர்ந்திட
அமுது ஊட்டி அன்பில் திளைத்திடும்
மழைக் கரங்கள் செம் மலர்க்கரங்களாய்
மாறி ஈந்து மகிழ்ந்த உளத்தினர்
பிழை படிந்திட எண்ண மேவிய
பெருங்குணத்தினை போற்றிடும் பொங்கல்!

வஞ்சமேவிய நெஞ்சகங்க ளாலே
வன்கொடுமைகள் மலிந்து மாந்தரின்
நெஞ்சம் யாவிலும் அமைதி யின்றி
நித்தமும் மரணத் திசையினை நோக்கி
சஞ்சலம் அடைந்த காலமாற்றி யே
தைமகள்பைந் தமிழ் மகள் எமக்கு
அஞ்சேல் என்றொரு ஆறுதல் கூறி
அகத்தில் இன்பம் நிறைத்திடு வாளாம்!

நம்பிக்கை வைப்போம்
நாளை பொழுதினிலே
நம்பி, கைவைப்போம்
நாம் தொடங்கும் பணியினிலே!
வெம்பி மனஞ் சோரோம்
வேதனையை விட்டகல்வோம்
அன்பில் கையிணைத்து
அகமிணைத்து வாழ்ந்திடுவோம்!

# நாலு பேர் பார்த்து சிரிக்க விட்டான்!

முத்துக் கருப்பன் சமுசாரம், அந்த
முத்தம்மா கதையை கேட்டியாடி!
பித்துப் பிடிச்சி லயலயமா அவ
புலம்பித் திரியுறா, பார்த்தியாடி!

மீனாச்சி:

ஏண்டி அவ மகன் காளை யாட்டம்
இருக்க அவளுக்கு என்ன குறை - இந்த
ஆண்டிச்சி கோலம் அரைக் கோலம் ஆக
அலைய அவளுக்கு தலை விதியா?

நகையும் நட்டுமா போட்டு கிட்டு
நாலு காசுமாக வாழ்ந்திருந்தா, இன்று
புகையும் கரியும் படிஞ்ச முகமாக
போனத பார்த்தா பரிதாபம்.

காளையாட்டமா மகன் இருக்கான் அவன்
கட்டிய பொண்டாட்டி இருக்காளே அந்த
மூளிய லங்காரி பண்ணும் கொடுமையால்
முத்தம்மா இப்படி யாகிவிட்டா!

ஏனுன்னு கேட்பானே பாவி மகன், அவ
இழுத்த இழுப்புக்கு வளையு றானே தாய்
போ - இன்னு சொல்லி வெறட்டிப்புட்டா - இந்த
பொண்டாட்டி தாசனா கேக்கப் போறான்

காலத்துக்கும் கஞ்சி ஊத்திடு வானுன்னு
கனவுல கண்டு மகிழ்ந்திருந்தா - இந்த
கோலத்துக் குள்ளாக வைப்பான்னு, இவ
கொஞ்சமும் எண்ணி யிருப்பாளா?

பென்சன் வாங்கி கொடுத்துப்புட்டா - இவன்
பொண்டாட்டிக்கு நகை செஞ்சி புட்டான் - இன்று
நஞ்சின்னு தாய நெனச்சிப்புட்டான்
நாலு பேர் பார்த்து சிரிக்க விட்டான்!

காதுல கழுத்துல இருந்ததெல்லாம் வித்து
கள்ளு சாராயம் குடிச்சி புட்டான் - இவ
ஏது என்னான்னு கேட்டாலும் அவன்
எட்டியுதைப்பானாம் பாவிபய

பொண்ணைக் கட்டி கொடுத்தாளே - இங்கு
போயாச்சும் காலத்த ஓட்டாம - இவ
என்னத்துக் கிப்படி லயலயமா சுத்தி
ஏச்சுபேச்சு வாங்கிடனும்?

அந்தக் கதையவா கேக்குற நீ,
அவபடும் பாடு பெரும் பாடாம் - கள்ளு
மொந்தை யுருட்டும் பயல கட்டிக்கிட்டு: நாள்
முழுதுக்கும் கண்ணீர் வடிக்கிறா ளாம்!

அண்ணன் ஒறவு அத்துப் போகும்முனு
அவசரப்பட்டு கிளியாட்டம்
பொண்ணைக் கொடுத்திவ வாழ்க்கையிலே, என்ன
புண்ணியத்த வாறி கட்டிக்கிட்டா?

பொண்ண பெத்தும் பெரும் பாவி
புள்ளய பெத்தும் அரும் பாவி
என்ன சொகத்த இவயடைஞ்சா? நாதி
இல்லாத நடைபொண மாகிவிட்டா

காலும் கையும் நல் லாயிருக்கும்
காலத்தி லேயே இறந்திடுனும் இல்ல
கூழுக்கும் கிழிஞ்ச சீலைக்கும் நாமளும்
கோடியில் சீபட்டு நிக்கனுண்டி!

..1990 வீரகேசரி..

# நாம் பெற்ற கைம்மாறு

என்னய்யா பட்ஜெட் போட்டீர்கள்? நீங்கள்?
எங்களுக்கு நிவாரணம் ஏதேனும் இலையே!
பொன்னையும் பொருளையும் ஈட்டிந்தந் தோர்கள்
பொழுதெல்லாம் பசியுடன் போராடு கின்றார்!
மண்ணையா தின்பார்கள் விலைவாசி யெல்லாம்
வானோக்கி "ரொக்கட்" டாய் மேலேறிப் போக
என்னென்ன வோசொல்லி ஏமாற்று கின்றீர்!
இளித்தவா யர்தானே, என்கின்ற நினைவோ?

அரசாங்க ஊழியர் மட்டும்தான் உங்கள்
அருமந்த பிரஜைகள், "தோட்டங்க ளெல்லாம்
அரசாங்க உடமைகள்" என்றளக் கின்றீர்கள்!
ஆனாலும் அங்குள்ளோர் அயலாகிப் போனார்
வருஷந்தான் ஒன்றாகி புதுபட்ஜெட் வந்தும்
மலையக மக்களுக் கெழுபது உண்டோ?
எரிகின்ற எங்களின் நெஞ்சமுங் களைத்தான்
எரித்திடும் ஓர்நாள் இதைமற வாதீர்!

மாற்றுடை யுண்டோ? இருள் மண்டிப் போன
 வளைகளில் ஒளியூட்ட மண்ணெண்ணை யுண்டோ?
சேற்றுடம் பைநாளும் கழுவுதற் கேனும்
 சோப்புக்கு எங்களின் தினக் கூலி யில்லை!
ஆற்றுக்கு பலகோடி, அதன் பேரை சொல்லி
 அயல்நாடு களிலெல்லாம் கடனோ பல்கோடி
ஊற்றாகி வரும் செல்வம் மலைகளில், அங்கு
 உறைபவர் வாழ்விலோ துயர்நிற்கும் மூடி!

வன்செய லால்எங்கள் வாழ்வை யழித்தார்.
 வாழ்கின்ற வீட்டைக் கொளுத்திக் களித்தார்!
என்செய்வ தறியாது "இறைவனே" என்று
 இருந்தோம் எனினுமெம் இன்னல்கள் போச்சோ!
புன்செயல் இதுவென்று உலகின ரெல்லாம்
 பேசிடக் காரண மானவரெல்லாம்
நெஞ்சை நிமிர்த்தி நடை போடுகின்றார்!
 நிர்க்கதி யான நாம் நிதம் வாடு கின்றோம்!

என்னதான் குற்றம் இவர்க்கு நாம் செய்தோம்!
 இத்திரு நாடு உயர்வதற்காக
பொன்னுடல் தேய உழைத்தது அன்றி
 பிறிதென்ன செய்தோம் பெரும் பெருங் குற்றம்
உண்ண உணவின்றி உடல் மெலி வுற்றோம்!
 உடுத்த உடையின்றி ஓட்டாண்டி யானோம்!
எண்ணத் தொலையா சிறுமைக ளுற்றோம்!
 இத்தனைக் கும் நல்ல கைம்மாறு பெற்றோம்!

..1982..

# நீறு பூத்த நெருப்புகள்

தேடிடு அறிவுச் செல்வம்
சேர்த்திடு பிறரை நம்பி
வாடிடும் வாழ்க்கை மாறும்
மாமனிதனாய்நீ வாழ்வாய்
ஈடிலா புகழ் படைத்து
இம்மலை சிறக்கச்செய்வாய்
பாடிடு மலர்ச்சிக் கீதம்
பயன் பெற மலையகந்தான்!

கல்லாய் மரமாய் உணர்வுகளற்று
காலந்தோறும் சடமாய் கிடந்து
உள்ளங்கனன்று சுதந்திர வேட்கை
உணர்வு பொங்கி உரிமைக்குரலை
துள்ளும் நடையில் கவிதைகளாக்கு
தூங்கும் உணர்வினை தட்டி யெழுப்பு
பள்ளு ஆயிரம் இளைய மலையகம்
பாடியே வரின் தடைகள் நீளுமோ?

தூங்கிய எங்கள் தொடையில் கயிறு
திரித்தே எங்கள் கழுத்தினில் மாட்டும்
தீங்கு மனத்தவர் தோழமை தள்ளு
தேன்போல் பேச்சில் சிந்தையை விலக்கு
கானல் காட்சிகள் கண்டு தெளிந்திடு!
காணும் காட்சியில் உண்மை தெளிந்திடு
வானும் எங்கள் கைகளில் வருமென
மதியை வளர்ப்போம் புதுவிதி செய்வோம்

சாம்பலிலிருந்து உயிர்த் தெழும் பறவைகள்
தனல்கள் நீறு பூத்த நெருப்புகள்
நிழற்குடை விரித்த ஆலத் தருவினை
தோற்றுவிக்கும் மிகச்சிறு விதைகள்
அணுவினும் அணுவாய் ஆனவர் எனினும்
ஆயிரம் ஆயிரம் ஆற்றல் படைத்தவர்
புழுவாய் மண்ணுள் கிடப்பவ ரேனும்
பூகம்பத்தை தன்னுள் கொண்டவர்
உண்மை வெறும் புகழ்ச்சி யல்ல
ஒருநாள் காண்பராம் எம்மவர் ஆற்றலை

# பாட்டினில் வாழும் பாரதி

பாரதி வாழுகின்றான்! என்றும்
பாரதி வாழுகின்றான்! அவன்
பாடலை நாளுமே பாடிம கிழ்ந்திடும்
பாவலர் நாவினில் தீஞ்சுவைக் கவிதையாய்
பாரதி வாழுகின்றான்! என்றும்
பாரதி வாழுகின்றான்!

உள்ளத் தெழும் உணர்வில் - எங்கள்
உள்ளத் தெழும் உணர்வில் அவன்
ஒவ்வொரு துளியின் இரத்த அணுவிலும்
ஒன்றிக் கலந்துயிர் உணர்ச்சிக் கவிதையாய்
ஓங்கி முழங்குகின்றான் - பாரதி
ஓங்கி முழங்குகின்றான்!

சாகா வரம் வேண்டி! என்றும்
சாசுவத மாகி விட்டான்!
ஆகா சம்முதல் பூதங்கள் உள்ளவும்
அற்புதக்கவிதையின் சொற்பொருளாய் என்று
சாகா திருந்திடுவான் - பாரதி
சாகா திருந்திடுவான்!

கூடி கிழடுதட்டி அந்த
கூற்றுடன் சென்றானா? பல
கோடித் தமிழரின் உள்ளத்தி லே வீரம்
கூட்டும் அரிமாவின் தோற்றமென் கவிக்
கோமகன் வாழுகின்றான் - கவிக
கோமகன் வாழுகின்றான்!

கீதை புகன்றவனின் இரு
பாத கமல மதை நெஞ்ச
மீதினிலே நிதம் ஏந்திக் களித்துயிம்
மேதினி வாழ்ந்திட கீதைமிசைத்தவன்
நூதமாய் வாழுகின்றான்! கவி
வேதமாய் வாழுகின்றான்!

வேதனை யுற்றாலும் - மனம்
வெம்பி அழுததில்லை!
சாதலும் நோதலும் கவிஞனுக்கிலையென்ற
சரித்திரம் படைத் தொரு சாதனை புரிந்தவன்
சக்திக் கனலாய் - எங்கள்
சித்த மிசை வளர்வான்!

சாதிப் பிரிவு செய்தும் - பிறப்பில்
தாழ்வு உயர்வு சொல்லும் - பொய்
வேதசாஸ் திரங்கள் வேக நெருப்பிட்டு
மேய்மை சமத்துவ நூல் படைப் போமென்று
சிங்க மென எழுந்தான் - புதுச்
சங்க நாதம் இசைத்தான்!

பாஞ்சா லன் மகளாய் - அப்
பத்தினிப் பெண் குரலாய்
"மாதர் அடிமை: எனுங் கடை மூடரின்
மன்றினில் நின்றவன் செஞ்சுடர் ஞாயிறாய்
நீதி எடுத்துரைத்தான்! சத்திய
நெருப்புத் தணலாக

# புரட்சித் தீ எரியட்டும்

என்னத்தான் கன்னத்தில் கையைவைத்து
எதைத்தான் எண்ணியெண்ணி மாய்கின்றீர்கள்!
உண்ணத்தான் உணவில்லா நிலைமையையா?
உடுத்தத்தான் ஆடையில்லா வறுமையையா?
பொன்னைத்தான் உடலெல்லாம் மனைவியர்க்கு
பூட்டித்தான் கண்குளிரப் பார்த்தும்நம்மை
தின்னத்தான் வழிபார்க்கும் செல்வர்தங்கள்
திறனைத்தான் உளம்வியந்து திகைக்கின்றீரோ?

உழைக்கத்தான் பிறந்துவிட்டோம் உழைத்தஉடல்
உருகத்தான் இருக்கின்றோம், பிறரையேய்த்து
பிழைக்கத்தான் அறிந்தோமா? பொருள்தனையே
பெருக்கத்தான் நினைத்தோமா? மற்றவர்போல்
களிக்கத்தான் பொழுதில்லை உழைப்பினாலே
களைத்துத்தான் போகின்றோம், என்னும் பிறர்
பழிக்கத்தான் செய்கின்றார். பார்த்தும் கேட்டும்
பதைக்கத்தான் உடலுளத்தில் வலுவுண்டாமோ?

வதைத்துத்தான் எளியவரை பொருள்குவிப்போர்
வாழத்தான் மற்றவர்கள் வாடத்தானோ?
பதுக்கித்தான் நிலவறையுள் மறைவாகதான்
பணத்தைத் தான் வைத்திருக்கும் வஞ்சர்தம்மை
உதைக்கத்தான் வேண்டுமிந்த உலுத்தர்கூட்டம்
ஒடுங்கத்தான் வேண்டும் தனியுடைமைக் கொள்கை
புதைக்கத்தான் படவேண்டும், உங்கள்நெஞ்சில்
புரட்சித் தீ கொழுந்துவிட்டு எரியவேண்டும்!

எதிர்க்கத்தான் உளந்தனிலே துணிவுண்டாகில்
எதிர்ப்புத்தான் எப்பக்கம் வந்தாலென்ன?
எதற்குத்தான் இதயத்தில் மலைவு? வேண்டாம்!
இருக்கத்தான் செய்யும்வெற்றி எங்கள்பக்கம்
நிதிக்குத்தான் வெற்றியெனில், இங்குதர்ம
நீதியுமா செத்துவிடும்? அஞ்சவேண்டாம்
உதிக்கத்தான் போகிறது இன்பம், ஏழை
உதிரந்தான் குடித்தவர்கள் வாழ்ந்துண்டோ?

நடிக்கத்தான் தெரியவில்லை, நல்லவர்போல்:
நம்பத்தான் செய்கின்றீர் எவர்சொல்லையும்:
தடுக்கத்தான் துணிவில்லை வருமிடரை:
தளர்ந்துத்தான் போகின்றீர் இதனால் நம்மை
கெடுக்கத்தான் நினைக்கின்றார் வாழ, நாமோ
கெட்டுத்தான் போகின்றோம் இனிமேலேனும்
வெடிக்கத்தான் வேண்டுள்ளம் எரிமலையாய்
வேகத்தான் வேண்டுமதில் கொடியர்கூட்டம்!

பகைக்குத்தான் அஞ்சாத பேர்களென்ற
பண்பைத்தான் பெற்றவர்கள் எமதுமுன்னோர்
நகைக்கத்தான் செய்வார்கள் நம்மைப்பார்த்து
நாமுந்தான் உணர்வின்றி வாழ்தல்கண்டு
குகைக்குள் வாழ்ந்தாலும் புலியின்வீரம்
குறையத்தான் செய்யாது மாற்றார் கண்டு
திகைக்கத்தான் உரிமைபோ ராட்டத்திற்கு
துணியத்தான்! வெற்றிநமக் குண்டுபின்னால்!

விதியைத்தான் நம்பித்தான் நாள்கழித்தால்
வேதனைத்தான் நீங்கிடுமோ? உங்கள் சொந்த
மதியைத் தான் ஈடுவைத்து, வஞ்சகர்சொல்லும்
வார்த்தைக்கு மதிப்பளித்தால் அடிமைச்சேற்றில்
மிதிக்கத்தான் செய்வார்கள், அதிலிருந்து
மீளத்தான் வழியின்றி போகுமத்தான்!
கொதிக்கத்தான் செய்கின்ற நெஞ்சம்நீராய்
குளிரத்தான் துணிவைத்தான் மேற்கொள் அத்தான்!

**..1968 செய்தி..**

# வாழ்க்கைப் பாதை!

விழி மலர்ந்தது, இதழ் சிவந்தது - துணை
வேண்டும் நெஞ்சம் இரண்டிணைந்தது
மொழி பிறந்தது முத்துதிர்ந்தது - விடும்
மூச்சி லோஉள வேட்கை தீர்ந்தது
வழி தெரிந்தது நடை தொடர்ந்தது
வாழ்க்கை பாதையோ நீண்டு கிடந்தது
பழி மறைந்தது பணி வளர்ந்தது
பாச மென்றதோர் தளை விழுந்தது!

காலச்சருகுகள் காற்றில் பறந்தன
காதலும் வாழ்க்கைக் கடலுள் மறைந்தன
கோலச் சித்திரம் குலைந்து போயின
கூடவோ பலர் வந்து சேர்ந்தனர்
ஞாலத் தேசுமை மேலும் கனத்தன
நாளும் வாழ்வின் கடமை யுணர்த்தின
வாழத் தான்வழி ஏதும் புரிந்தில
வாழ்க்கைப் பாதையோ நீண்டு கிடந்தது!

குடும்பம் பெருகின கவலைகள் கூடின
கோடி கோடியாய் துயர்கள் குவிந்தன
நடையொ டுங்கிட நாடி தளர்ந்தது
நாளும் உணவுத் தேவை கூடின
தடைகள் ஆயிரம் வாழ்வுப் பாதையில்
தாண்டிச் சென்றிடும் துணிவொடுங்கின
வழிமறைந்தது நடை தொடர்ந்தது
வாழ்க்கை பாதையோ நீண்டு கிடந்தது!

உறவு காட்டியே உறிஞ்சி வாழ்ந்தவர்
உண்மை நண்பரைப் போல் நடித்தவர்
களவு நெஞ்சில் ஆயிரம் வைத்து
கனிவுப் பேச்சில் என்னை ஏய்த்தவர்
சிறகி ழந்த பறவையைப் போல
செல்வம் யாவும் இழந்த பின்னரோ
உறவு பேசியோர் உரிமை நாட்டியோர்
ஒருவரில்லை தனிய னாகினேன்!

வழி மறைந்தது நடை தளர்ந்தது
வாழ்க்கை பாதையோ நீண்டு கிடந்தது!

..1980..

# மேதினி போற்றும் மேதினம்

மேதினி போற்றும் மேதினம். இன்று
வியர்வை சிந்திடும் பாட்டா ளிகளின்
வேதனை களுக்கோர் விடிவு கண்டநாள்!
வெற்றிச் சூரியன் விரிகதிர் வீசும்நாள்!
தீதினைப் புரியும் சோரர்கள் நாளா?
சுரண்டும் வர்க்கத்தின் சொந்தமிந்நாளா?
பூதல மெங்கும் உழைப்போர் கூட்டம்
போற்றும் திருநாள்! புனிதத் திருநாள்!

அடிமை விலங்குகள் ஆம்முறி பட்டன,
ஆணவச் சிறைகள் இடிந்து நொறுங்கின,
மடமை இருளில் சுதந்திரக் கனல் எழுந்திட
மிடிமை யாவும் பொசுங்கிட விடுதலை
வேட்கை கொண்டவர் வெற்றி கண்டநாள்!

துப்பாக்கி யாலுடஞ் சிதைந்த போதும்
சோர்ந்துவிடா தொழிலாளர் துணிவினோடு
இப்பாரில் விடுதலைப்போர் இயற்றி வெற்றி
எய்திய நாள் இந்நாள் பொன் நாளாம் மேநாள்
இப்போது அதிகார வர்க்கங் கூட
இந்நாளை களியாட்ட நாளாய் மாற்றி
தப்பாட்டம் இடுகின்றார் சரியா? சொல்வீர்!
தமிழ்மகனே மலையகத்தின் சகோதரனே!

தொழிலாளர் தலைகளில் முள்மு டியை
சுமத்திவிட்டு தம்தலையில் மலர்முடியை
ஏழிலாயச் சூட்டிக்கொள் வதுதான் எங்கள்
இணையில்லா(!) தலைவர்களின் சேவையென்றால்
பழிசேரும், தொழிலாளர் சரித்தி ரத்தில்
பார்போற்றும் மேதினத்தில் புதிய மாற்றம்
உழைக்கின்ற பெருமகனை உயர்த்தல் அவன்
உள்ளத்தில் பெருமகிழ்ச்சி யூட்டல் மேலாம்
சனிக்கின்ற புதுயுகத்தின் மாற்றம், மலைச்
சரித்திரத்தின் மலர்ச்சிக்கு புதிய ஊட்டம்!

வைகறைச் சிவப்பு கதிர்
வரவுக்கு வாழ்த்துக் கூறும்!
மெய்வழி சொரிந்த செந்நீர்
விடிவுக்கு வழிச மைக்கும்
பொய்யுரைப் புல்லர், வேடப்
போலிகள், எம்மை என்றும்
கையுறை யாகப் பிடித்த பேரை
கன்னக்கோல் பிடித்த பேரை
நையுறச் செய்தல் இந்த
நாள்தரும் பாடமாகும்

மையுறைக் கண்ணினோரும்
வாயுரை பொய்த்த லில்லா
மெய்யுழைப் பீயும் எந்தன்
வீறுடை இளவளோரும்
துய்யமே நாளாம் வெற்றிச்
சுடர்மணித் திருநாளின்று
உய்ந்தெழுந் திடுவோம் எங்கள்
உரிமைக்குப் போர் தொடுப்போம்!

எத்தனை மேதினம் வந்தது ஆயின்
எம்மவர் வாழ்வில் பூரணச் சுதந்திரம்
மற்றவர் போல்வாய்த் ததில்லை எனினும்
வஞ்சகர் பின்னால் வால்குழைத்தோடி
சுற்றினோம், மேடைப் பேச்சுகள் கேட்டே
செவிகள் குளிர்ந்தோம் வாழ்வு குளிர்ந்ததா?
இற்றைநாட்பாட் டாளியின் திருநாள்
எழுச்சிக் கீதம் இசைத்து முன்னேறு!

ஆளை மறைக்க மாலைகள் போட்டோம்
ஆயினும் ஒருமலர் நாம்முகர்ந் தோமா?
தேயிலை தளிரினில் மாலைகள் போட்டே
சோர்ந்தோம் கைகள், வாழ்வு மலர்ந்ததா?
ஆயினும் இங்கோர் மாற்றம் காண்கிறேன்
ஆம், தொழி லாளர் மாண்புறும் காட்சி!
உழைக்கும் கரங்களை மதிக்கும் பண்பு
உயர்தமிழ்ப் பண்பு மனிதப் பண்பு

# "வெட்கமேன்? அருகில் வாடி!"

தேனூறும் இதழில் இதழ்
சேர்த்தொரு முத்தமீந்து
வானூர்ந்த மதி வதன
வடிவினை, மேயுங் கலை
மானீந்த விழிகள் காட்டும்
மருட்சியை, மாந்தளிரின்
மேனியின் அழகை, யுண்ண
விழைகின்றேன்! அருகில் வாடி!

பெற்றவர் அறிந்திடாமல்
பூனைபோல் பதுங்கி வந்து
உற்றவர் ஊரார் அவர்
உரைப்பதற் கஞ்சி, முல்லைப்
பற்றையின் மறைவில் ஒன்றிப்
பழகிய நாட்கள் சென்று
விட்டன, தடைக ளில்லை!
வெட்கமேன்? அருகில் வாடி!


கூரிய வேலி னோடு
குன்றுகள் இரண்டும் வந்து
போரிடத் தாங்கு தில்லை
பூவையே! எனது நெஞ்சம்:
வாரியின் அலைபோ லெந்தன்
மனதினில் ஆசை பொங்கி
மீறிடும் போதிலிந்த
வெட்கமேன்? அருகில் வாடி!

இரவினி நமக்குச் சொந்தம்,
ஈருடல் இணையும் இன்ப
உறவினில் வளரும், இந்த
உலகிற்கோர் புதிய ஜீவன்!
கரும்பென சுவைக்க காதல்
கடலிலே திளைக்க உள்ளம்
விரும்பிடும் போதிலிந்த
வெட்கமேன்? அருகில் வாடி!

..1965..

# உணர்வெழுதும் முடிவுரைகள்!

வாலிப மனத்தின்
உணர்வலைகள்
வரம்பு மீறும்
காலிமுகத் திடல்
மணற் படுகை
மேனி மெத்தைகள்
இன்பத் துயிலின்
எல்லைகள்.
மென்று...
மென்று...
சுவையற்றுப் போன
சுவிங்கங் கள்
வீசி -
எறியப்பட்ட
வெற்றுக்
காகிதச் சுருள்கள்
அலங்கார
அச்சுப் பதிவில்
கவர்ச்சி
வாசகங்கள்
காந்த -
வாசிப்புகள்
முன்னுரைகளே
முடிவுரைகள்!
வாழ்க்கை
நாவல்கள்
அத்தியாயத்தில்
முடியும்
அவசரம்
வேக அலைகள்
கரையில் கரையும்
சோக
சுவடுகள்!



கவிஞர் தென்னவனைப்பற்றி பேராதனைப்பல்கலைக்கழக ஆய்வொன்றை தனது இறுதி ஆண்டு பரீட்சைக்கு திருமதி. பவானி செல்வராஜ் செய்துள்ளார்.

மலையக மனிதர்கள் மத்தியில் மன்னவனாக விளங்கி, ஈழத்துக் கவிதை இலக்கியத்தில் முத்திரைப் பதித்துச் சென்றவர் தென்னவன் என்பார் நா. சோமகாந்தன்.

வள்ளலாருக்கு ஒரு வேலாயுத முதலியார், பாரதியாருக்கு ஒரு சீனி. விசுவநாதன், பாரதிதாசனுக்கு ஒரு மன்னர் மன்னன், பட்டுக்கோட்டையாருக்கு ஒரு ஜீவபாரதி என்பதைப் போல குறிஞ்சித்தென்னவனுக்கு ஒரு சாரல்நாடன் கிடைத்திருக்கின்றார்.

தென்னவனின் அச்சு ஏறாத கவிதைகள், சஞ்சிகைகளில் எழுதியவைகள் அனைத்தையும் தொகுத்து காலவரிசை விபரங்களுடன் வெளியீட்டு இருப்பது இந்நூலின் சிறப்பு.

ISBN 978-955-8589-15-2

9 789558 589151